# பெண்மணி

ஏப்ரல் 2010
ரூ.18

பக்தி மணம் கமழும்
குருவாயூரப்பன்
திருத்தல உற்சவங்கள்



ஆர்.மணிமாலா

## என் காதல் கண்மணி

(முழு நாவல்)





# என் காதல் கண்மணி

ஆர்.மணிமாலா

மல்லிகைப்பூக்களின்வாசமும், சென்ட்டின் நறுமணமும் கலந்த கலவையாக... அந்த திருமண மண்டபம் முழுக்க ரம்மியமாக இருந்தது.

"அடடே... வாங்க... வாங்க... நேத்தே உங்களை எதிர்பார்த்தேன்..."

"முக்கியமானவேலை... ஆபீஸ்லேபர்மிஷன் கூட போட முடியாத சூழ்நிலை... அதான் முகூர்த்தத்துக்கு டாண்னு வந்துட்டேனே... மச்சான்..."

"இந்தாங்கோ... இதை, பொண்ணை கட்டிட்டு வரச் சொல்லுங்கோ..."

"சமையல் ஆச்சா... முகூர்த்தத்துக்கு முன்னாடியே பந்திய ஆரம்பிச்சிடணும்..."

"நீ பாட்டுக்கு வாயப் பார்த்துட்டு இருக்காதே... அப்பப்ப... கழுத்துல கைய வச்சு செக் பண்ணிட்டிரு... தங்கம் விக்கிற விலைக்கு... பறிகுடுத்துட்டு வந்துடாதே... சொல்லிப்புட்டேன்..."

கலவையான பல வசனங்கள். விதவித மான மனிதர்கள். வகைவகையான கவலைகள் என சூழ்நிலை சுவாரசியமாக இருந்ததை வேடிக்கையுடன் ரசித்துக் கொண்டிருந்தாள் விதுபாலா.

"ஏய்... விது" தோளில் ஒரு கை வந்து விழ... சட்டென திரும்பினாள்.

காயத்ரி!

"அட... நீ எங்கே இங்கே?"

"என் வீட்டுக்காரரோட பெரியம்மா பொண்ணோட கல்யாணம்... நான் வராம? சரி... நீ?"



"மாப்பிள்ளை வீடு... எங்க அத்தை வீட்டு சொந்தக்காரங்க..."

"எல்லாரும் வந்திருக்காங்களா?"

"ம்... சொந்தக்காரங்களோட ஐக்கிய மாய்ட்டாங்க. எப்படி இருக்கே காயத்ரி? எத்தனை குழந்தைங்க?"

"ம்... இருக்கேன்ப்பா... அதோ... சிவப்பு கலர் பாவாடை சட்டை போட்ருக்காளே... அவ பெரிய பொண்ணு அஸ்வினி... ஆறு வயசு! நாலு வயசுல பிரியங்கான்னு இன்னொரு பொண்ணு! ஆமா நீ எப்ப கல்யாண சாப்பாடு போடப் போறே? நம்ம கூட படிச்சவங்க அத்தனைபேருக்கும் கல் யாணம் ஆயாச்சு... தெரியுமில்லே?"

"போட்டுட்டாப் போச்சு!" என்றாள் விதுபாலா புன்னகை மாறாமல்.

"மாப்பிள்ளை பார்த்தாச்சா?"

"அம்மா... உன்னை அப்பா கூப்பிடறார்..." அஸ்வினி அழைக்க... "இங்கேயே நில்லு... என்னன்னு கேட்டுட்டு உடனே வந்திடறேன்" என்று காயத்ரி அவசரமாய் அகல... விதுபாலா தனக்குத்தானே சிரித்தபடி நடந்தாள்.

❀ ❀ ❀ ❀ ❀



“நேத்து வராமப் போய்ட்டியே சுரேந்தர். நம்ம சேகர் ஏகப்பட்ட மப்புல... கச்சேரியில... சட்டையெல்லாம் கழட்டிப் போட்டுட்டு ஆடுனா பாரு... ஒரு ஆட்டம்... ஜென்மத்துக்கும் மறக்க முடியாது!” என்றான் வேணு.

“இவன்தான்டா... சரக்குல எதையோ கலந்து குடுத்துட்டான் மச்சான்... நானெல்லாம் அப்படி ஆடறவனா... நீயே சொல்லு... என் பொண்டாட்டிக்கு தெரிஞ்சது... அவ்ளோதான்... அவ ஆடிடுவா! விளையாட்டுப் போல... எந்த பவுடரையோ கலந்துக் குடுத்துட்டான்டா...”

“ஏன்டா... தப்பில்லையா? ஒண்ணு கெடக்க... ஒண்ணு ஆச்சுன்னா... இதிலே எல்லாமா விளையாடறது?”

“நீ வேற சுரேந்தர்! நடிக்கிறான்... கஞ்சா பழக்கத்தை விட்டுட்டேன்னு தானே சொன்னான்? அது பொய்... சாருக்கு இப்பவும் அந்த பழக்கமிருக்கு... அந்த சண்டையில போனவாரம் இவன் பொண்டாட்டி... திருவண்ணாமலைக்கு அவங்க அம்மா வீட்டுக்கு கோவிச்சுக்கிட்டு போய்ட்டா... இல்லன்னு சொல்ல சொல்லு பார்ப்போம்!” குமார் கிண்டலும், கேலியுமாய் சொல்ல...

“புருஷன், பொண்டாட்டிக்குள்ளே ஆயிரம் இருக்கும். அதையெல்லாம் ஏன்டா சபையில பேசறீங்க?” என்றான் சேகர்... சற்றே கோபமாக. கண்களில் சிவப்பு இன்னும் மிச்சமிருந்தது.

“சரி... சரி... கூல்டா மச்சான்... எனக்காக... நான் ஒண்ணு சொன்னா கேப்பியா?” நல்லத்தனமாக இடைபுகுந்தான் பாஸ்கரன்.

“என்னடா?”

“பார்த்தியா... அதைக் கூட கோவமாதான் கேக்கறே?”

“சரி... சொல்லு...!”

“இது நம்ம... ப்ரண்டோட தங்கச்சி கல்யாணம்...”

“ஆமாம்...!”

“ஏகப்பட்ட லேடீஸ் வந்திருக்காங்க...”

“அதுக்கு...?”

“மானம் போவுது... முதல்ல ஜிப்பை போடுடா... டேய்!”

அடுத்த கணம்... அந்த இளைஞர் பட்டாளத்தில் குபீரென்ற சிரிப்பலை எழுந்தது.

சுரேந்திரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

“இதுக்கு... இத்தனை பில்டப்பா? வச்சுக்கறேன்டா உனக்கு!” வெட்கத்தில் முகமும் சிவக்க... சுவர் பக்கமாய் திரும்பி பேண்ட்டை சரி செய்தான் சேகர்.

“டேய் மச்சான்... மாப்பிள்ளை மாதிரி ஜம்முன்னு வந்திருக்கே... நீ எப்படா உன் சுதந்திரத்தை இழக்கறதா உத்தேசம்?”

“வீட்ல பார்த்துட்டுதான் இருக்காங்க!” என்றான் சுரேந்தர்.

“உனக்கென்னடா குறைச்சல்? சொந்தமா நாலஞ்சு கம்ப்யூட்டரை வாங்கிப் போட்டு... நல்லா சம்பாதிக்கிறே! நம்ம செட்லேயே பார்க்க லட்சணமா இருக்கே... அப்புறம் எப்படி எல்லா வரனும் தட்டிப் போகுது?”

“ப்ச்... நல்ல விஷயத்தை பேசுவோமே... வீட்ல எல்லாரும் சௌக்கியமா?”

“நான் தாடி வச்சிருக்கறதை பார்த்தாலே தெரியலே? அங்கே எல்லாரும் சுகம். பேச்சை மாத்தாதேடா. சரி... அதை விடு. நம்ம ரகு வீட்ல யாருமில்லையாம். திருச்சிக்கு போயிருக்காங்களாம். மதியம் டேரா போட்ரலாமா? சூப்பரா ஒரு கேஸட் வச்சிருக்கானாம்.”

“ஆளை விடுப்பா... எனக்கு வேலையிருக்கு”

“ஏன்டா சுரேன்... சாமியார் மாதிரியிருக்கே? இதெல்லாம் ஒரு ஜாலிதானே?”

“முதல்ல பிழைக்கற வழியைப் பார்ப்போம். உழைக்கிற நேரத்தை ஜாலிக்காக சாகடிப்பீங்களா?”

“வந்துட்டார்யா சாக்ரடீஸ்! அவனை விடுங்கடா... தெரிஞ்ச கதைதானே? நாமெல்லாம் போகலாம்...” என்று முன்னே வந்து நின்றான் சேகர்.

“பார்த்தியா... இவன் எவ்ளோ நல்லவன்னு?” என்றான் வேணு.

சுரேந்திரன் கை மணிக்கட்டில் வாட்ச்சை பார்த்தபடி சிரித்தான்.

“என்ன மச்சான் டைமை பார்க்கறே?”

“முகூர்த்தம் முடிஞ்சதும் ஓடணும்ப்பா! முடிச்சுக் குடுக்க வேண்டிய வேலை இருக்கு. பிரஸ்லேர்ந்து வந்திடுவாங்க!”

❋ ❋ ❋ ❋ ❋



“எப்பப் பார்த்தாலும் வேலை ஞாபகம்தானா? அப்பப்ப லைபை ஜாலியா என்ஜாய் பண்ணவும் டைம் ஒதுக்கணும். மனசுக்கும், உடம்புக்கும் சார்ஜ் ஏத்திக்கணும். கல்யாணம் ஆய்ட்ட நாங்களே திருட்டுத்தனமா தப்பு பண்றோம். உனக்கென்னடா... தனிக்காட்டு ராஜா?”

“நான் எதையும் விளக்கி சொல்ல விரும்பலே. தப்புன்னு சொன்னா நீங்களும் கேக்கப் போறதில்லே. ஸோ, உங்க விஷயத்துல தலையிடல. பட், என்னை வற்புறுத்தாதீங்க. நான் இப்படித்தான். விட்ருங்கப்பா.”

“சரி... சரி... வற்புறுத்தலே. நாமல்லாம் அடிக்கடி சந்திச்சுக்க முடியல. இப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்ச்சா மீட் பண்ணிக்கிறோம். அதுக்கும் உடனே கிளம்பணும்னா எப்படி?”

“என்ன மச்சான் பண்றது? ரெகுலர் கஸ்டமர்ஸ் கிட்ட நல்ல பேர் வாங்கிட்டேன். முக்கால்வாசி பத்திரிகைகாரங்க... என் கடையிலதான் டி.டி.பி. அடிச்சுக்கிட்டுப் போறாங்க. இன்னைக்கு ரெண்டு மேட்டர் முடிச்சுத் தந்தாகணும். அதான்...”

“சரி... விட்ரா... அவன்தான் கெஞ்சறான்ல?”

“நான் எப்படா கெஞ்சினேன்?”

“அப்படி வச்சுக்கிட்டாதான் என்ன? அட்லீஸ்ட் சாப்பிடுவேயில்லே?” என்றான் விஷ்ணு.

“சரி... இவ்ளோ கேட்டுக்கிட்டதால...”

“அடிங்... கொய்யால? ரொம்பத்தான்...”

சுரேந்திரன் உண்மையில் மனம் விட்டு சிரித்தான். வேலைப்பளு இப்படிப்பட்ட நண்பர்களை சந்திக்க முடியாமல் செய்து விடுகிறது.

“அஸ்வினி... ஓடாதே... ஒரு ஓரமாய் போய் விளையாடு... இப்படி வா!”

அம்மாவின் பேச்சை காதில் போட்டுக் கொள்ளாமல் இன்னும் வேகமாய் ஓடினாள் அஸ்வினி.

“பாரேன் இவளை... ஏய்... அஸ்வினி... அஸ்...” தடக்கென பிரேக் போட்டதுபோல் நின்றன காயத்ரியின் கால்கள்.

சற்று தொலைவில் அந்த கும்பலில் அவன்!

சடாரென திரும்பி வேகவேகமாய் நடந்தவள் இன்னொரு பெண்ணின் மீது மோதிக் கொண்டாள்.

“ஸாரிங்க...”

“ஏய்... என்னாச்சு?”

“ஓ... விது... நீதானா?”

“ஏன் ஒரு மாதிரி இருக்கே? அங்கேயும், இங்கேயும் பார்த்துக்கிட்டு மேலே வந்து மோதறே?”

“இப்படி வா!” மறைவான தூணருகே இழுத்துக் கொண்டு சென்றவள், “ஒரு ஹெல்ப் பண்ணு விது... அங்கே என் பொண்ணு விளையாடிட்டிருக்கா... பாரு... அவளை கூட்டிட்டு வாயேன்!”

“என்னாச்சு உனக்கு? யாரையோ பார்த்து பயந்து ஒளியறமாதிரி நடந்துக்கறே?”

“ஆமாம் விது... நான் யாரை பார்க்கக் கூடாது, யார் கண்ல படவேக் கூடாதுன்னு நினைச்சேனோ... அவர் இங்கே வந்திருக்கார்” என்றாள் மனசு படபடக்க.

“யாரைச் சொல்றே?”

“ஏழு வருஷம் முன்னாடி... என் குடும்பத்தையே தலை குனிய வச்சேனே...”

“ஓ...யாரையோ லவ் பண்ணி...”

“பழசைப் பேசாதே விது! பாவம் என்னால அவர் பட்ட கஷ்டம்தான் அதிகம். எதுக்கு தேவையில்லாமப் பார்த்துக்கிட்டு!”

“எங்கே இருக்கார்?”

“அதோ... அந்த கும்பல்ல கறுப்பு கலர்ல பேண்ட் போட்டிருக்காரே...!”

விதுபாலா அவள் காட்டிய திசையை பார்த்தாள். அதில் இரண்டு ஆண்கள் கறுப்பு நிற பேண்ட் அணிந்திருந்தனர்.

“அதிலே யார்?”

“பேச நேரமில்லே... என் வீட்டுக்காரர் வந்துக்கிட்டிருக்கிறார். நீ என் பொண்ணை கூட்டிட்டு வந்துடு... நான் மாடிக்குப் போறேன்” காயத்ரி முகத்தில் அப்பிய கலவரத்துடன் வேகமாய் நடந்து போய் விட்டாள்.

கறுப்பு பேண்ட்டும் ரோஸ் நிறத்தில் கறுப்பு கோடு போட்ட சட்டையும் அணிந்திருந்த விஷ்ணுவை பார்த்தபடி அஸ்வினியை நோக்கிச் சென்ற விதுபாலா ஆச்சர்யமானாள்.

வசீகரமாய் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த சுரேந்தரை அங்கு எதிர்பார்க்கவில்லை.

அவன்... அவள் பணிபுரியும் பில்டிங்கில்... இரண்டாவது மாடியில் டி.டி.பி. சென்டர் வைத்திருக்கிறான். அவள் அலுவலகம் மூன்றாவது மாடியில்! அவ்வளவுதான் தெரியும். மற்றபடி அவன் பெயர் கூடத் தெரியாது.

“அஸ்ஸுக்குட்டி... உங்கம்மா கூப்பிடறாங்க வா!” அவள் கையைப் பற்றி இழுக்க... குரல் கேட்டு எதேச்சையாக நிமிர்ந்த சுரேந்திரன் அவளைப் பார்த்து கண்களை அகல விரித்தான்.

‘இவள்... எங்கே இங்கே?’

“என்ன மச்சான் அங்கே லுக்கு விடறே?”

"என் செண்டர் இருக்கிற பில்டிங்ல இந்தப் பொண்ணு வேலை பார்க்குதுடா..."

"உன் பார்வையே சரியில்லையே...!"

"ப்ச்... தப்பா பேசாதே... அவ பேருக் கூட தெரியாது. காதிலே விழுந்துடப் போகுது."

விதுபாலா குழந்தையின் கையை பற்றிக் கொண்டு நடந்தவள்... தன்னை மீறி மறுபடியும் திரும்பிப் பார்த்தாள்.

சந்தனநிற சட்டையும், கறுப்பு பேண்ட்டும் அவனுக்கு பாந்தமாய் இருந்தது.

❀ ❀ ❀ ❀ ❀

பழவந்தாங்கல் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வெளிப்பட்ட விதுபாலாவிற்கு உடனே சூடாய் காபி சாப்பிட வேண்டும் போல் இருந்தது. ஆபீஸில் இன்று கொஞ்சம் வேலை அதிகம்.

ஆபீஸ் என்றால் ஏஸி, ஏழெட்டு போன், தனித்தனி காபின் இப்படியெல்லாம் கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஸ்க்ரூ, நட்டு, போல்டு என்று லொட்டு, லொசுக்கு சப்ளை செய்யும் சின்ன கம்பெனிதான். ஆனாலும் முதலாளி முகமது உசேன் நிறைய ஆர்டர்கள் பிடிப்பதில் கில்லாடி.

விதுபாலா பி.பி.ஏ. பட்டதாரி. கம்ப்யூட்டரும், கணிதமும் அறிந்தவள். அதனால் ஆபீஸ் இன்சார்ஜ் என்று அவளை அமர வைத்து ஒரு கம்ப்யூட்டரும், இரண்டு போன்களும், மதிய உணவு சாப்பிட அரைமணிநேரம் ரெஸ்ட் என்று உட்கார வைத்து விட்டார் உசேன். அவர் தந்த எட்டாயிரம் சம்பளத்துக்கு ஓய்வின்றி உழைத்தாள் விதுபாலா.

அவள் ஒரு நாள் லீவு போட்டாலும் கிறுகிறுத்துப் போய்விடுவார் உசேன். அவரை விட அந்த கம்பெனியின் அத்தனை விஷயங்களும், டீலர்களும் அறிந்தவள் அவள்தான். கூட நாலைந்து ஆட்களை வேலைக்குப் போட்டு சூப்பராய் கம்பெனியை நடத்தி நல்ல லாபம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

விதுபாலாவின் அலுவலகம் பிராட்வேயில் அந்தோணியார் சர்ச்சுக்கு நான்கைந்து தெரு தள்ளி இருந்தது. வீடு பழவந்தாங்கலில்!

அம்மா சுந்தரி. அப்பா பாண்டியன். ஒரு விபத்தில் அடிபட்டு ஒரு கால் சரியாய் படியாமல் அவர் விந்தி விந்திதான் நடப்பார். அண்ணன் குரு. ஏரியாவில் குருவைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது, போலீஸ் உட்பட! ரவுடிகளோடு நட்பு, வியாபாரம் என்று கெட்ட பெயர் சம்பாதித்து வைத்திருக்கிறான். அவன் மனைவி சுசீலா! காதலித்து மணந்தவள். அதனாலேயே கணவனின் தொழிலுக்கு முட்டுக்கட்டைப் போடாதவள்.

இரண்டு அறைகளும், வராந்தா, சமையலறை என அமைந்த பழங்காலத்து வீடு. பாண்டியனின் பாட்டனார் வீடு. மகனின் தொழிலும், நடவடிக்கையும் பெற்றவர்களை மனம் நோகச் செய்ததால்... அவன் சம்பாத்தியத்தில் சாப்பிடுவதில்லை என்று வைராக்கியமாய் இருந்தனர். சுந்தரி ஒரு டிபன் கடையில் காலையும், மாலையும் காய்கறி நறுக்கித் தந்து, மாதம் மூவாயிரம் சம்பாதிக்கிறாள். கூட விதுபாலாவின் வருமானம்... அவர்கள் மூவர் தனி சமையல். அண்ணனும் அண்ணியும் தனி சமையல்.

களைப்பாகவீட்டிற்குள்நுழைந்தவிதுபாலா, நடையில் செருப்பைக் கழற்றி விட்டு உள்ளே வந்தாள். வராந்தாவையொட்டிய முதல் அறை குருவோடது. மூடிய கதவை ஒட்டி ஜன்னல் இருந்தது. எதேச்சையாக திறந்திருந்த ஜன்னல் வழியே கண்கள் செல்ல... விதிர்விதிர்த்துப் போய் விட்டாள்.

அரைகுறை ஆடைகளுடன் அண்ணனும்






சவூதி அரேபியாவில் 'கிங் பகாத் காஸ் வே' என்ற மிகப்பெரிய கடல்வழி மேம்பால சாலை செல்கிறது. இது சவூதி அரேபியாவையும் பக்ரைன் நாட்டையும் இணைக்கும் மிகப்பெரிய கடல்வழி மேம்பாலமாகும். சவூதி அரேபியா வருபவர்கள் பக்ரைன் விமானத்தளத்தில் இறங்கி அங்கிருந்து பேருந்து வழியாக பயணம் செய்ய நேர்ந்தால் இந்த சாலையை கடந்துதான் செல்ல வேண்டும்.

இரண்டு எல்லைப் பகுதியும் இணையும் கடலின் மேல் பகுதியில் தனித்தனியே இரு குட்டி நகரத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதில் இரண்டு மிக பிரமாண்ட கோபுரங்களையும் அமைத்துள்ளார்கள்.

இந்த சாலையானது ஐந்து பாலங்களையும், ஏழு செயற்கை மிதவைத் தளத்தையும் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. இதன் மொத்த நீளம் 28 கிலோ மீட்டர். இது 536 சிமெண்ட் தூண்களால் கடல் உள்ளிருந்து தாங்கப்படுகிறது.

இந்த கடல்வழி சாலையை 15 முதல் 20 நிமிடத்தில் கடந்து விடலாம். சவூதி அரேபியாவில் மேம்பாலங்கள் கட்டுவது சாதாரணமாக செய்து விடுகிறார்கள். ஏதோ சிகரெட் அட்டையில் சிறுவர்கள் வீடுகள் கட்டுவதைப் போல் சிமெண்ட் பாளங்களை கொண்டு அடுக்கி விடுகிறார்கள்.

- சுகன்யா.

அண்ணியும், தங்களை மறந்த நிலையில்...

உடல் முழுக்க சூடு பரவ.... அருவருப்புடன் அங்கிருந்து வேகமாய் நடந்து சமையலறைக்கு வந்தாள்.

ஒரு டம்ளர் தண்ணீரை தொண்டைக்குள் சரித்துக் கொண்டு அறைக்குள் வந்தாள்.

சுந்தரி சாமந்திப் பூக்களை தொடுத்துக் கொண்டிருந்தாள். பாண்டியன் ஈசி சேரில் கண்களை மூடி சாய்ந்திருந்தார்.

"என்னம்மா... இவ்ளோப் பூ?"

"நாளைக்கு கிருத்திகை விதும்மா! நாளைக்கு வாங்கினா... மொழம் பத்து ரூபான்னு அநியாயமா விப்பாங்க. உதிரியா... சீப்பாக் கிடைச்சது. வாங்கிட்டேன். நாளைக்கு இங்கே முருகன் கோவிலுக்குப் போய்ட்டு அப்படியே ஆபீஸ்க்கு போய்டேன்!"

"இல்லேம்மா... நிறைய வேலையிருக்கு. ஆபீஸ்க்கு பக்கத்திலே தானே கந்தசாமி கோவில் இருக்கு. சாயந்திரமா போய்க்கறேன். ஒரு காபி கிடைக்குமா?"

"போட்டுத் தர்றேன்ம்மா... அப்பாவும் கேட்டுட்டு இருந்தார்... தலைவலிக்குது காபி வேணும்னு... நீ வர்றதுக்காகதான் காத்திருந்தேன். அந்த டப்பாவுல தலைவலி மாத்திரை இருந்தா எடுத்துக் குடேன்!"

"சரிம்மா" என்றவள் பிளாஸ்டிக் டப்பாவில் தேடி ஒரு மாத்திரையை எடுத்துக் கொடுத்து, சொம்பிலிருந்த தண்ணீரை டம்ளரில் ஊற்றிக் கொடுத்து விட்டு சமையலறைக்கு வந்தாள்.

சூடான பாலை காபி பொடியில் கலந்த சுந்தரி முகம் மாறினாள்.

"விதும்மா... நேரம் என்னாச்சு? பாரேன்... இன்னும் ஹால்ல விளக்கைப் போடலே? கொஞ்சம் போட்டுட்டு வந்துடேன்!"

"ம்... சரிம்மா... போடலாம்!"

"என்னப் போடலாம்? மணி ஏழாகப் போகுது... இந்தா... இதை அப்பாக்கிட்டே குடு... நான் போய் போட்டுட்டு வர்றேன்!"

நகர்ந்த அம்மாவின் கையை பற்றிக் கொண்டாள்.

"அப்புறம் போட்டுக்கலாம்... வாம்மா!"

"என்ன நீ?" அம்மா புரியாமல் மகளைப் பார்த்தாள். "ஏன் தடுக்கறே?"

"போகாதேம்மா... ப்ளீஸ்"

"அதான் ஏன்?"

"புரிஞ்சுக்கோம்மா..." என்றாள் சங்கடத்துடன்.

லேசாய் புரிய... அந்த தாயுள்ளம் வெம்பியது.

❀ ❀ ❀ ❀ ❀



குரு சட்டையை மாட்டிக் கொண்டு வெளியேக் கிளம்ப... குளித்து விட்டு நைட்டியுடன் அடுப்படிக்கு சுசீலா வந்த போது மணி எட்டு. ஹால் விளக்கும் அப்போதுதான் போடப்பட்டது.

சமையலறை சற்றே விஸ்தாரமானது. அதனால் சுசீலா ஒரு பக்கம் சமையல் செய்ய ஏதுவாய் இருந்தது.

அவளைப் பார்த்து விட்டு சுந்தரி சமையலறையில் நுழைந்தாள்.

"எட்டு மணி வரைக்கும் லைட்டு போட மனசு வரலியா சுசீலா?"

"ஏன்... சுவிட்ச் ஹால்ல தானே இருக்கு? நீங்களும் போட்டிருக்கலாமே!"

"போட்டிருக்கலாம்தான். ஆனா சுவிட்ச் ஜன்னல் பக்கத்திலே இல்லே இருக்கு!"

"அதனால என்ன?"

"வார்த்தைக்கு வார்த்தை பதில் பேச மட்டும் கத்து வச்சிருக்கே. வயசுப் பொண்ணு இருக்கிற வீட்டுல எப்படி நடந்துக்கணும்னு கத்துக்கலே இல்லே?"

"ஓ...!" என்று சற்று நிதானித்தவள், "ஏன்... வயசுப் பொண்ணு இருக்கிற வீட்டுல புருஷன் பொண்டாட்டி சந்தோஷமா இருக்கக் கூடாதுன்னு ஏதாவது சட்டமிருக்கா?" கோபமாய் கேட்டாள்.

"அசிங்கமாப் பேசாதேடி! மாமனார், மாமியார் இருக்காங்கன்ற லஜ்ஜைக் கூட இல்லாம ஜன்னலை திறந்து வச்சுக்கிட்டு... ச்சை!"

"இதெல்லாம் பெரிய விஷயமா? டி.வி.யில காட்டறதையெல்லாம் வாயப் பொளந்து பார்த்துக்கிட்டுதானே இருக்கீங்க? நீங்களும் என் வயசைக் கடந்துதானே வந்திருப்பீங்க? இதை விளக்கமா கேள்விக்கேட்டு சங்கடப்படுத்தறீங்களே உங்களுக்கு வெக்கமாயில்லே?"

"அம்மாடி... உங்கிட்டே பேசி மீள முடியுமா? எப்படி வேணா இருந்துக்குங்க. ஆனா, கதவையெல்லாம் சாத்திக்கிட்டு இருங்கன்னுதான் சொல்றேன்." அதற்கு மேல் பேச விரும்பாமல் வெளியேறினாள்.

"ஆமா... உங்கப் பொண்ணுக்கு கல்யாணம் ஆகலேன்னா... அடுத்த வீட்டுப் பொண்ணுங்க சந்தோஷமா இருந்துடக் கூடாதே! எவ்ளோ நல்ல மனசு?" சுசீலா சமைத்து முடிக்கிறவரை கோழிப் போல் கொக்கரித்துக் கொண்டே இருந்தாள்.

❀ ❀ ❀ ❀ ❀

"**அ**ந்தப் பொண்ணைப் பத்திதான் உனக்குத் தெரியுமே... யாரையுமே மதிக்காது. அதுக்கிட்டே போய் ஏன் வாயக் குடுக்கிறே?" பாண்டியன் டி.வி.யின் சத்தத்தை குறைத்தபடி கேட்டார்.

"அதுக்காக கேக்காம இருக்க முடியுமா? அவளை சொல்லி என்னங்க இருக்கு? பெத்த பிள்ளை சரியாயிருந்தா... அவ இப்படி பேசுவாளா? நல்லதை எடுத்து சொன்னாக் கூட காதிலே வாங்கிக்க மாட்டேங்கிறா. தனிக்குடித்தனம் போய்த் தொலையுங்கோன்னாலும்... அசைய மாட்டேங்கிறாங்க. நான் என்னப் பண்ணுவேன்?"

"அம்மா..."

"......?!"

"அம்மா!" மறுபடி அழைத்த விதுபாலா தாயின் அருகில் சென்று அமர்ந்தாள்.

"இப்ப என்னாய்டுச்சுன்னு அழறே? அண்ணியப் பத்திதான் உனக்குத் தெரியுமே. அப்புறம் ஏன் பெரிசா எடுத்துக்கறே?"

"நான் அதுக்காக அழலே விது! உங்கண்ணனோட தொழிலும், சேர்க்கையும் சரியில்லாததாலேயே உனக்கு நல்ல வரனே தகைய மாட்டேங்குது. பெரியவ வித்யா.. இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சுதான் ஒரு கிறிஸ்தவப் பையனை காதலிச்சு அவனோட ஓடிப்போய்ட்டா போல..."

"வித்யாக்கா நல்லாயிருக்காம்மா.. அவளைப் பத்தி கவலைப்படாதே!"

"உனக்கெப்படித் தெரியும்? அவளை நீ எங்கே பார்த்தே?"

"நான்பார்க்கலேம்மா... கேள்விப்பட்டேன். என் கூட படிச்சாளே மோனிகா... அவளோட அப்பா புவனேஸ்வர் போயிருந்தப்ப... நம்ம வித்யாவை பார்த்தாராம். அவளோட வீட்டுக்கு அழைச்சாளாம். சொந்த வீடாம். அவளோட ஹஸ்பண்டுக்கு நல்ல வேலையாம். வசதியா இருக்கா. ஒரு குழந்தையும் இருக்காம்."

"இவ்ளோ நடந்திருக்கு. பெத்தவளுக்கு ஒரு தகவலும் தெரியல பார்த்தியா?" விம்மினாள் சுந்தரி.

"இப்ப எதுக்கு ஓடிப்போன கழுதைய நினைச்சி அழுதுட்டிருக்க.. பெத்தவங்களே வேண்டாம்னு தலைமுழுகிட்டுப் போனவளை நினைக்கறதே பாவம்! விட்டுத் தள்ளு" என்றார் பாண்டியன்.

"அப்பா... தன் மனசுக்கு பிடிச்ச காரியத்தை உங்க மனசை நோகடிச்சு பண்ணினதாலேயே... அவ செய்தது தப்புன்னு ஆகிடுமா? மதம் மட்டும்தானேப்பா வேற? மத்தபடி தன்னை நம்பி வந்தவளை கொண்டாடிட்டு இருக்கிறார் அவ புருஷன். ஒரு பொண்ணுக்கு வேண்டியது அதுதானே? பையன்.. அப்படியே உங்க சாயல்லதான் இருக்கான். மோனிகா அப்பா தன்னோட செல்போன் கேமராவுல போட்டோ எடுத்துட்டு வந்ததை நானும் பார்த்தேன்!"

"நிஜமாவாடி சொல்றே?" சுந்தரியின் கண்களில் ஏக்கம் மிளிர்ந்தது.

அப்பாவின் முகம் கூட குறிப்பால் எதையோ மௌனமாய் உணர்த்தியது.

"ஆமாம்மா.. நான் போட்டோவை பிரிண்ட் போட்டு தரச் சொல்றேன்!"

"அஞ்சு வருஷம் ஆச்சு... எப்படி இருக்காங்கன்னு எட்டிக்கூட பார்க்கலியே அவ...!"

"ஏம்மா... வாசலோட வச்சு விரட்டியடிக்காத குறையா பேசி, மண்ணை வாரி தூற்றி... எவ்வளவோ பேசி அனுப்பினீங்க. போதாதுக்கு வித்யாக்கா புருஷனை அண்ணன் வேற அடிச்சு, துவைச்சு அனுப்பிச்சு. எந்த நம்பிக்கையில இங்கே வருவா... சொல்லு?!"

சுந்தரி பதிலேதும் கூறாமல் கண்ணீர் உகுத்தாள்.

❀ ❀ ❀ ❀ ❀

**சு**சீலா... சூரியன் உதிக்காத அதிகாலையை அவள் வாழ்நாளில் பார்த்ததில்லை. காலையில் எழும் பழக்கமும், இன்னும் சில அடிப்படை நல்ல பழக்க வழக்கங்களும் அவளிடம் இல்லை.

குருவிடம் நல்ல பணம் புழங்கியதால்... கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று காதலில் விழுந்து அவனுடன் ஓடி வந்து விட்டாள். அவள் பிறந்த இடமும் சாதாரண குடிசைப் பகுதிதான். யாரையும் மதிக்கத் தெரியாது. வீட்டை சுத்தமாய் வைத்துக் கொள்ளவும் தெரியாது. திருமணமாகி ஆறு வருடம் ஆகியும் குழந்தை இல்லை. குரு வீட்டில் இருந்தால் அவனுக்கும் பத்து மணிக்குதான் விடியும். ஓட்டலில் டிபன் வாங்கி வந்து விடுவான். பெரும்பாலும் சமைப்பதில்லை. சுசீலாவிற்கு நல்ல வாளிப்பான உடல்கட்டு என்பதால்... குரு அவள் முந்தானையில் தானே முடிச்சுப் போட்டுக் கொண்டான். விதுபாலா காலையில் அலுவலகம் செல்லும் போது கூட சுசீலாவின் உறக்கம் களைந்திருக்காது.

ஓரிரு முறை குருவைத்தேடி போலீஸ் வந்தது. அவன் செய்யும் தொழில் அப்படிப்பட்டது. நான்கைந்து முறை ஜெயிலுக்கும் போய் வந்திருக்கிறான். அவன் மீது ஏழெட்டு கேஸும் இருக்கிறது.

பாண்டியன் பலமுறை சொல்லிவிட்டார். "கல்யாணமாக வேண்டிய பொண்ணு இருக்கிற வீட்டுல இப்படி போலீசெல்லாம் வந்துப் போறது சரியில்லே. நீ வேற வீட்டைப் பார்த்துக்கிட்டுப் போய்டு" என்று.

"ஏன்... இதை நீயா சம்பாதிச்சே? என் தாத்தா சொத்து. நான் ஏன் போகணும்? கஷ்டமாயிருந்தா நீங்க போங்க. என்னமோ ராயல் பேமிலி மாதிரி, போலீஸ் வந்தா அசிங்கமாயிருக்காம்" என்று ஏடாகூடமாய் பேசி வாயை அடைத்து விடுவான்.

தான்தோன்றித்தனமான கேரக்டர். பிறரைப் பற்றி கவலைப்படாதவன்.

தங்கையை கூட மூன்றாவது மனுஷிப் போல்தான் பார்ப்பான்.

சுந்தரிக்கு காலையில் எழுந்ததிலேர்ந்தே தலை சுற்றல்.

பிரஷர் ஏறி இருந்தது.

"நீ எந்த வேலையும் செய்யாதேம்மா. நான் பார்த்துக்கறேன். ரெடியாயிரு... ஹாஸ்பிடல் போய்ட்டு வந்துடலாம்."

"அதெல்லாம் ஒண்ணும் வேணான்டி விது. கொஞ்சம் படுத்து எந்திரிச்சா சரியாப் போய்டும்."

"உன் டாக்டர் படிப்பை தூரப் போட்டுட்டு நான் சொல்றதை மட்டும் கேள்ம்மா... ஹாஸ்பிடல் போறோம்...." அழுத்தமாகச் சொன்னாள்.

"ஆபீஸ்க்கு போகணுமேடி..."

"டூ அவர்ஸ் பர்மிஷன் போட்டுடறேன்... பேச நேரமில்லே... நான் மத்த வேலைய கவனிக்கறேன்... நீ ரெடியாகு!"

சொல்லி விட்டு பம்பரமாய் சுழன்றாள்.

வாசலைப் பெருக்கி, தண்ணீர் தெளித்து கோலமிட்டாள். பம்ப்பில் தண்ணீர் அடித்து வைத்தாள். தோசை வார்த்து சட்னி அரைத்து, மதிய உணவையும் தயாரித்து குளித்து முடித்து வெளிப்பட்டாள்.

அப்போது வாசலில்...

"அண்ணே... அண்ணே" என்ற குரல் கேட்டது.

விதுபாலா வாசலுக்கு வந்தாள்.

லுங்கி கட்டியிருந்த இளைஞன் ஒருவ[n] நின்றிருந்தான்.

அவளைப் பார்த்தவன் வாயை பிளந்தான்.

"யாருங்க...?"

"கு... குரு அண்ணன்..."

"இருங்க..." என்றவள் மூடியிருந்த கதவை தட்டினாள்.

"யாரு?" என்ற குரலுடன் எழுந்து வந் குரு.

❀ ❀ ❀ ❀ ❀




அம்மாவுடன் ஆட்டோ விலிருந்து இறங்கினாள் விதுபாலா.

பாண்டியன் அவர் களுக்காக காத்திருந்தார்.

''வந்துட்டீங்களா? டாக்டர் என்னம்மா சொன்னார்?"

"அப்பா... என்னப்பா இது? நீங்க இன்னுமா சாப்பிடலை? எடுத்து வச்ச டிபன் அப்படியே இருக்குதே?"

"மனசு கேக்கலேடா... சுந்தரிக்கு உடம்புக்கு முடியலேன்னதும்... பதறிப் போய்ட்டேன். பாரேன் எவ்வளவு டல்லாய்ட்டா?"

தகப்பனின் பயம் புரிய... வாத்சல்யத்துடன் அவர் கையைப் பற்றினாள்.

"நான் இருக்கும்போது என்னப்பா பயம்?"

"கல்லு மாதிரி ஒரு ஆம்பளைப் புள்ளைய பெத்து என்னம்மா பயன்? ஒரு வாய் கஞ்சி ஊத்த மனசு வரலே. நீ ஆம்பளைக்கு ஆம்பளையா இருந்து தாங்கறே!"

"அப்பா... பெத்தப் புள்ளைங்கல்ல அதென்ன ஆண், பெண் பேதம்? பெத்தவங் களை காப்பாத்தறதுக்கு ரெண்டு பேருக்கும் உரிமையிருக்குப்பா. சரி... அதெல்லாம் விடுங்க. அம்மா நீயும் உக்காரு. அப்பா உக்காருங்க... சாப்பிடுங்க..."

"டாக்டர் என்ன சொன்னார்னு சொல்லவே இல்லையே..."

"பிரஷர் அதிகமாயிருக்காம்ப்பா! அவர் எழுதிக் கொடுத்த மாத்திரை எல்லாம் வாங்கிட்டு வந்துட்டேன். கரெக்ட்டா போட்டுக்கம்மா. அப்பா... பிரிஸ்கிரிப்ஷன் பார்த்து எடுத்துக் குடுங்கப்பா!"

"சரிம்மா... என்ன திடீர்னு பிரஷர்?"

"கவலைதான்! அம்மா கவலைப்படறதுக்கு விஷயங்களா இல்லை? இங்கே இல்லாத ஒரு பொண்ணு... இருக்கிறப் பொண்ணு, போதாதுக்கு அண்ணன்! கவலைப்படாதேம் மான்னு நான் சொல்லதான் முடியும்! அதை ஃபாலோ பண்ண வேண்டியது உன் கடமை. என்னையும் அப்பாவையும் நினைச்சுப் பார்த்து, மத்த கவலையை ஒரங்கட்டு. சரியாம்மா?"

"ம்..."

"சரிம்மா... நேரமாச்சு... கிளம்பறேன்... ப்பா வர்றேன்."

"சரிம்மா!"

வேகமாய் நடையை எட்டிப் போட்டாள். ட்டிலிருந்து பதினைந்து நிமிடம் நடந்தால்... யில்வே ஸ்டேஷன் வந்து விடும். நடக்கும் போதுதான் பார்த்தாள்.

ஜூஸ் கடையில் ஒரு இளைஞன்... இவளையே பார்த்து சிரித்துக் கொண்டிருந் தான்.

அவளுக்கு அவனை எங்கோ பார்த்தது போலிருந்தது.

ஞாபகம் வரவில்லை.

அசட்டை செய்தவளாய் நடந்தாள்.

❋ ❋ ❋ ❋ ❋

இரண்டுநாள்முன்புபெய்தமழையில்ரோடு இட்லித்தட்டு மாதிரி குழி விழுந்திருந்தது. தண்ணீர் தேங்கி, குப்பைகளுடன் சகதியாகி இருந்தது. கடந்து போகும் ஏதாவதொரு வாகனம் சேற்றை வாரி இறைத்து விடுமோ என்ற பயத்துடன் ஒதுங்கி தாண்டி, தாண்டி

## மீண்டு வந்த ஆலயம்

ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனா அருகே கட்டலோனியா என்ற ஒரு நகரம் உள்ளது. இங்கு ஒரு காலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. வறட்சியைப் போக்க நீரைக் கொண்டு வந்து தடாகம் அமைப்பதற்காக சான்ட் ரோமா என்ற நகரத்தையே வெள்ளத்தில் மூழ்கடித்தனர். ஊரில் இருந்த 1200 பேர் வெளியேற்றப் பட்டனர். இந்த நகரம் மூழ்கடிக்கப்பட்ட போது, 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரே கல்லினால் கட்டப்பட்ட தேவாலயமும் மூழ்கியது. ஆனால் தேவாலயத்தின் மணிக்கூண்டு மட்டும் வெளியே தெரிந்தது.

சமீபத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி காரண மாக இந்த நகரம் குடிக்கக் கூட தண்ணீர் இல்லாத அளவுக்கு பாதிக்கப்பட்டது. அணையில் இருந்த நீரும் வற்றியதால், இந்த தேவாலயமும் வெளிப்பட்டது. இந்த தேவாலயத்தைக் காண சுற்றுலா பயணிகள் எண்ணிக்கையும் அதிகரித்தது.

உல்லாசப் பயணிகள் வருகைக்கு சந்தோஷப்படுவதா? கப்பலில் வந்திறங்கிய குடிநீர் போதாமல் மக்கள் வாடுவதைக் கண்டு கலங்குவதா? என்று இந்நகரம் வாடிய போது, போதுமான தண்ணீர் தடாகங்கள் கட்டப்பட்டு, குடிநீர் பிரச்சினை தீர்க்கப்பட்டதாம். தேவாலயமும் முழுவது மாக தெரிகிறதாம்.

இதனால் சுற்றுலா பயணிகளுக்கு இரட்டை சந்தோஷம்.

- ராதா.



நடந்தாள் விதுபாலா.

ஒரு வழியாய் அலுவலக கட்டிடத்தை அடைந்தவள் வேகமாய் படியேறினாள். இரண்டாவது மாடியை கடக்கும்போது தன்னிச்சையாக கண்கள் அந்த அறையைத் துழாவியது.

கையில் கொத்தாக பேப்பர்களை வைத்து சரிபார்த்துக் கொண்டிருந்த சுரேந்திரன் அவளை கவனித்து விட்டான். சிரிக்கலாமா, வேண்டாமா என்று பட்டிமன்றம் நடத்தி, தயக்கத்துடன் சபையை கலைத்து, வாட்ச்சை பார்த்தான்.

விதுபாலாவிற்கு புரிந்தது. 'இரண்டு மணிநேரம் தாமதமாய் சென்றதால்... குறிப்பால் கேள்வி கேட்கிறாராக்கும்?' தனக்குள் சிரித்தபடி மூன்றாவது மாடிப்படி ஏறினாள்.

❋ ❋ ❋ ❋ ❋

அடுத்த நாள்!

"வர்றேன்ம்மா!" என்று குரல் கொடுத்தபடி வேகமாய் வெளியில் வந்தாள்.

வாசலில் யாருடனோ செல்போனில் பேசிக் கொண்டிருந்த குரு, "சரி... சரி... அந்த டீலிங் பத்தி யோசிச்சு சொல்றேன்" என்று கட் பண்ணியவன் இவளைப் பார்த்து லேசாக முறுவலித்தான்.

"என்ன... வேலைக்கா?"

"ம்...!"

"எங்கே ஆபீஸ்?"

"பிராட்வே!"

"என்ன டிரஸ் இது?"

"சல்வார்!"

"மோடி வித்தை காட்றவங்க போட்ற மாதிரி... அசிங்கமாயிருக்கு! ஏன் சேலை யெல்லாம் கட்டிக்கிட்டுப் போனா... ஆபீஸ்ல சேர்க்க மாட்டாங்களா?" நக்கலாக கேட்டான்.

எரிச்சலாய் இருந்தது.

வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"ட்ரெய்னை பிடிக்க... இந்த டிரஸ்தான் வசதி!"

"ஏன் ஓடற ட்ரெய்ன்ல ஏறணும்?"

"டைமாச்சு... ட்ரெய்னை மிஸ் பண்ணிடு வேன்... கிளம்பட்டுமா?"

"சரி...சரி... போ! பொட்டைப் புள்ளைய வேலைக்கு அனுப்பிட்டு அந்தக் காசுல உட்கார்ந்து சாப்பிடற ஜென்மங்களும் இருக்கே... நீ போ...போ! சம்பாதிக்கறதை யெல்லாம் இதுங்களுக்கே கொட்டிடறியா? இல்லே... உன் கல்யாணத்துக்குன்னு ஏதாவது சேப்ட்டி பண்ணி இருக்கியா?"

காதில் விழாதது போல் வேகமாய் நடந்தாள் விதுபாலா.

தெருவைத் தாண்டி சாலையில் இறங்கி நடந்ததும்... திடீரென முளைத்து வந்து நின்றான் அவன்.

நேற்று ஜூஸ் கடையில் நின்றிருந்தவன்.

'இவன்தானே நேற்று குருவைத் தேடி வீட்டிற்கு வந்தவன்?'

"நல்லார்க்கியா?" அஷ்டகோணலாய் சிரித்தபடி கேட்டான்.

முறைத்தாள்.

"என்னத் தெர்லியா? நேத்து அண்ணனைத் தேடி வூட்டாண்டை வந்தேனே!"

"......?!"




"குரு அண்ணனுக்கு இவ்ளோ அழகா ஒரு தங்கச்சி இருக்கும்னு எனக்குத் தெர்யாது. அண்ணனுக்கு நான்னா... ரொம்ப இஷ்டம். எல்லா ஃபீலிங்கையும் நம்மக் கிட்டேதான் கொட்டுவாரு. அவ்ளோ தோஸ்து!"

"அதுக்கென்ன இப்ப?" கோபமாய் கேட்டாள்.

''அதில்லே... சும்ம தான்!" ஒரடி பி நகர்ந்தான்.

வெறுப்புடன், எதிர்பட் ஷேர் ஆட்டோவில்

அமர்ந்துக் கொண்டாள்.

ஸ்டேஷனில் இறங்கி உள்ளே செல்வ தற்கும், டிரெய்ன் கிளம்புவதற்கும் சரியாய் இருந்தது.

எப்போதும் லேடீஸ் கம்பார்ட்மெண்டில் பயணிப்பதுதான் விதுபாலாவின் வழக்கம்.

அடுத்த ரெயில் புறப்பட அரைமணி நேர மாகிவிடும். லேட்டாய் போனால் அம்பதாயிரம் அவளால் நஷ்டமாகி விட்டது போல் முகத்தை கோரமாய் வைத்துக் கொள்வார் உசேன். பார்க்க சகிக்காது.

விதுபாலா வேகமாய் ஓடி ஒரு கம்பார்ட்மெண்டில் ஏறி விட்டாள்.

காமன் கம்பார்ட்மெண்ட்!

"ஏம்மா... அடுத்த டிரெய்ன்லதான் வர்றது? இப்படியா ஓடிவந்து ஏறுவே? தப்புச்சு, தவறுச்சு... கை, கால் போனாக் கூட பரவா யில்லே... உயிருக்கு பாதகமானா என்னாறது?" என்றாள் கூடை நிறைய சப்போட்டா பழங்களை வைத்திருந்த பெண்.

கூட்டம் நிறைய இருந்தது. அப்பெண்மணியின் அறிவுரை அவளை சங்கடப்படுத்தியது.

இடைப்பட்ட வழியில் புகுந்து சற்றே உள்ளே சென்றாள்.

'அடுத்த ஸ்டேஷனில் இறங்கி லேடீஸ் கம்பார்ட்மெண்டில் ஏறிவிட வேண்டும்' நினைத்துக் கொண்டாள்.

அப்போதுதான் கவனித்தாள்.

எதிர்புற சீட்டில் அவன் அமர்ந்திருந்தான். முகத்தில் ஒருவித பதைப்பு!

'நான் ஓடிவந்து ஏறியதைப் பார்த்திருப் பானோ?'

பேசலாமா, வேண்டாமா என்பது போன்ற முகபாவம்.

"உ... உக்காருங்க!" சீட்டிலிருந்து எழுந்தான்.

"இ... இருக்கட்டும்... பரவாயில்லை... தாங்க்ஸ்!"

"ம்...!"

அதற்குமேல் அவளுக்கு சங்கடம் அதிகரித்தது. அவனை பீச் ஸ்டேஷனில் பார்த்திருக்கிறாள். அவள் பயணிக்கும் ரெயிலிலிருந்து இறங்குவதையும் அடிக்கடி பார்த்ததுண்டு. எந்த ஸ்டேஷனில் ஏறுகிறான் என்று தெரியாது.

அடுத்த ஸ்டேஷன் வந்ததும் இறங்கி... லேடீஸ் கம்பார்ட்மெண்டில் ஏறிக் கொண்டாள்.

சுரேந்திரன் சிரித்துக் கொண்டான்.

❋ ❋ ❋ ❋ ❋



மூட்டையிலிருந்த நெல்லிக்காய்களை பிரித்துக் கொட்டியதுப் போல்.. பயணிகள் வசவசவென இறங்கினர்.

பீச் ஸ்டேஷன் வழக்கம் போல் சுறுசுறுப்புடன் சுர்த்தது.

சுரேந்திரன் தன்னிச்சையாக திரும்பிப் பார்த்தான். கூட்டத்தில் மிதந்து வந்துக் கொண்டிருந்தாள் அவள்.

கால்கள் பின்னித் தயங்கி நின்று... சுதாரித்துக் கொண்டவனாய் வேகமாய் நடந்து பார்க் செய்து வைத்திருந்த யமஹாவை சாவி போட்டு க்ளிக்கி உருவினான்.

விதுபாலா சுரங்கப்பாதையில் இறங்கி எதிர்சாலையில் வெளிப்பட்டு நேஷனல் ஹாஸ்பிடல் வழியாக நடையை எட்டிப் போட்டாள்.

அப்படியும் ஐந்து நிமிடம் லேட்... அலுவலகம் வந்து சேர.

ஓட்டமும் நடையுமாய் படிகளில் ஏற... இரண்டாவது மாடி அலுவலகத்தில் அவன் வேலையாட்களுக்கு சில பேப்பர்களை கொடுத்து பேசிக் கொண்டிருந்தான்.

'இவன் எப்படி எனக்கு முன்னால்? ஒரே டிரெய்னில் தானே வந்தோம்? ஒரு வேளை ஸ்டேஷனில் பைக் வைத்திருப்பானோ?' அவ்வளவு வேக நடையிலும் அதிமுக்கிய சந்தேகம் எழுந்ததை எண்ணி சிரித்தபடி, படி ஏறினாள்.

❋ ❋ ❋ ❋ ❋

**தா**ம்பரம் ஸ்டேஷனில் இறங்கியபோது இரவு 8.30.

சுரேந்திரன் அந்த ஸ்டேஷனிலும் ஒரு பைக் பார்க் செய்து வைத்திருந்தான்.

பதினைந்தாவது நிமிடம் வீட்டின் முன் நிறுத்தினான்.

கொஞ்சம் பழங்காலத்திய வீடு! வாசலில் நித்யமல்லியும், முருங்கைமரமும் இருந்தது. அணில் கடித்துப் போட்ட பிஞ்சுகள் மண் புழுவாய் சுருண்டு சிதறியிருந்தன.

சமீபத்தில்தான் கதவுகளுக்கும், ஜன்னல் களுக்கும், பச்சை வண்ணத்திலிருந்து மாறி சந்தன நிறத்தில் பெயிண்ட் தீட்டப் பட்டிருந்தது.

பைக் சப்தம் கேட்டு பார்வதி கதவைத் திறந்தாள்.

"வாப்பா... இன்னைக்கு கொஞ்சம் லேட்டு போல..."

"பதினஞ்சு நிமிஷம் தானேம்மா? வழக்கமா எட்டரை மணிக்கு வீட்ல இருப்பேன். கொஞ்சம் வேலை இருந்துச்சு."

"அதுக்குதான் நாலுபேரை சம்பளத்துக்கு வேலைக்கு வச்சிருக்கியேப்பா! நீ கொஞ்சம் சீக்கிரம் வரலாமே!"

"அவங்களுக்கும் குடும்பம் இருக் கேம்மா. வீட்ல அம்மாவோ, குழந்தைகளோ, மனைவியோ எதிர்பார்த்து காத்துக்கிட்டிருக்க மாட்டாங்களா? தவிர, நான்தானேம்மா ஆபீஸை பூட்டிட்டு வரணும்?"

"இங்கே உனக்காக உன் அம்மா காத்துக்கிட்டிருக்கேனே... அது பெரிசாப் படலையாப்பா!"

"அம்மா... என்னைப் புரிஞ்சுக்கம்மா... அரை கப் டீ கிடைக்குமா?"

"சாப்பிடற நேரமாச்சே சுரேன்?"

"சாப்பிட ஒரு மணி நேரமாகும்.."

"சரிப்பா!"

பத்து நிமிடத்தில் டீயோடு வந்தாள் பார்வதி.

சுரேந்திரன் கவனிக்காமல் இல்லை.

அம்மாவின் முகம் மலர்ந்திருந்தது.

சுரேந்திரன் டீயை வாங்கிக் கொண்டு டி.வி.யில் கவனம் பதித்தான்.

"வந்ததும் டி.வி.யா?"

"சும்மாதானேம்மா? சரி எங்கே... வீட்ல யாரையும் காணோம்? நிசப்தமா இருக்கு... அண்ணன் ஆபீஸ்லேர்ந்து வரலே?"

"கோபால் எப்பவோ வந்துட்டான். அவன் ரூம்ல இருக்கான். உங்கண்ணியும் பசங்களும் கோவிலுக்குப் போயிருக்காங்க!"

"என்னம்மா இது? நீ சொல்ல மாட்டியா? மணி ஒன்பதாகப் போகுது! வயசுப் பொண்ணை கூட்டிக்கிட்டு கோவிலுக்குப் போனவங்க இன்னுமா வரலே? எந்தக் கோவில்? நான் போய் பார்த்துட்டு வர்றேன்..." சுரேந்திரன் எழுந்தான்.

"உக்காரு... வந்துடுவாங்க. வத்சலா சொல் லிட்டுதான் போனா. வர்ற வழியிலதானே அவ அண்ணன் வீடு? அப்படியே போய்ட்டு வர்றேன்னா...!"

"ஏரியா சரியில்லேம்மா.. சொல்லி வை அண்ணிக்கிட்டே...!"

"சரி... சொல்லிடறேன். மச்சினன் சொன்னா வத்சலாவுக்கு வேதவாக்காச்சே?" என்று சிரித்த பார்வதி... அறுபதைக் கடந்தவள். பூசினாற்போல் தேகம். நெற்றியில் பதினைந்து வருடங்களாய் குங்குமம் வைப்பதில்லை.

இரண்டு பிள்ளைகள். சுரேந்திரன் வாங்கிய வீடு. இதுதான் அவளின் நிரந்தர சொத்து.

"வேலையெல்லாம் எப்படிப்பா போகுது?"

"என்னம்மா திடீர்னு கேக்கறே?"

"சும்மாதான்!"

"இப்பல்லாம் தமிழ்ல டி.டி.பி. பண்றவங்க ரொம்ப கம்மி. எல்லாரும் இங்கிலீஷ்லதான் பண்ணித் தர்றாங்க. அதனால பத்திரிகை நடத்தறவங்க ரெகுலரா என்கிட்டதான் வர்றாங்க. இன்னும் ரெண்டு சிஸ்டம் வாங்கிப் போடலாம்னு இருக்கேன்!"

"சந்தோஷம்ப்பா! சாப்பாடை பக்கத்துல ஏதோ ஓட்டல்ல சாப்பிடறதா சொன்னியே... நல்லா இருக்கா சுரேன்?"

"இத்தனை வருஷமா அந்த ஓட்டல்ல தாம்மா சாப்பிட்டுக்கிட்டிருக்கேன்..."

"அரிசி சாப்பாடுல சோடாமாவெல்லாம் போட்டு சமைக்கிறாங்களாமே.. உடம்புக்கு கெடுதலாச்சே சுரேன்? காலையில கையோட சாப்பாடை எடுத்துட்டுப் போன்னாலும் கேக்க மாட்டேங்கறே? அண்ணிக்கு என்னால எதுக்கு கஷ்டம்னு கேக்கறே? அவ உனக்குன்னு தனியாவா சமைக்கப்போறா? கோபாலுக்கும், பசங்களுக்கும் கட்டி குடுக்கறப்ப... உனக் கொரு கேரியர்ல வச்சுத் தரப்போறா..."

"வேணாம்மா... அது சரியா இருக்காது."

"உன் சங்கடம் புரியுது... அதெல்லாம் சீக்கிரம் சரியாகிடும். உன்னை கவனிச்சுக்க கடவுள் ஒருத்திய இந்த வீட்டுக்கு அனுப்பி வைக்கப் போறான்!"

பார்வதி சுற்றிவளைத்து இப்போதுதான் விஷயத்திற்கு வந்தாள்.

சுரேந்திரன் எதிர்பார்த்ததுதானே?

"..............?!"

"என்னன்னு கேக்க மாட்டியா?"

"அதான் உன் முகத்தைப் பார்த்தாலே தெரியுதே! அந்தப் பட்டம்மாள் ஏதாவது வரனை காட்டிட்டுப் போயிருக்கும்..."

"அட... ஆமாம்! அதை ஏன் இவ்ளோ சாதாரணமா சொல்றே?"

சுரேந்திரன் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

அவனுக்குள் தும்பியோ, பட்டாம்பூச்சியோ பறந்து ரீங்கரிக்கவில்லை. கிர்ரென மின்சாரம்

பாயவில்லை. ரத்தம் சூடேறவில்லை. பால் செம்புடன் உள்ளே வந்த பெண்ணை இதமாய் அணைத்து உட்கார வைத்துப் பேசும் கற்பனையும் வறண்டு போய் விட்டது.

"நீயே சொல்லிடும்மா..." சட்டை பட்டன்களை கழற்றினான்.

"சாலிகிராமத்துல வீடு. அவங்களுக்கு மூணு பொண்ணுங்க. கடைசி விஸ்வப்பிரியா."

"யாரு விஸ்வப்பிரியா?"

"உனக்கு பார்க்கப் போற பொண்ணுடா!"

"ஓ!" என்றபடி லுங்கியை இழுத்துக் கட்டிக் கொண்டவன் பேண்ட்டை உருவி ஹாங்கரில் மாட்டினான்.

"பி.பி.ஏ. படிச்சிருக்கு. இருபத்தஞ்சு பவுன் போடறாங்களாம். மத்தபடி எல்லா சீரும் பண்றாங்களாம். நல்ல குடும்பம். பொண்ணு செவசெவன்னு என்ன அழகுத் தெரியுமா?"

"நீ எப்பம்மா பார்த்தே?"

"போட்டோவுலதான்!"

"..........?!"

"வெள்ளிக்கிழமை வர்றோம்னு சொல்லிட்டேன்."

"..........?!"

"அன்னைக்குமட்டும் கொஞ்சம் சீக்கிரம் வந்துடு சுரேன். சீக்கிரமென்ன? அரை நாள் லீவுப் போட்டுட்டு வா!" என்றாள் வெள்ளந்தியாக.





"நான் எதுக்கும்மா? நீங்க மட்டும் போய்ட்டு வாங்க!"

"என்ன சுரேன் இப்படி விட்டேத்தியா பேசினா எப்படி?"

"வேற எப்படிம்மா பேசச் சொல்றே? இப்ப பார்க்கப் போறது எத்தனையாவது வரன்?

இருபதா, இருபத்தொண்ணா" முகம் சிவந்தது டென்ஷனில்.

".........?!"

"எப்படியும் இந்த வீட்டுக்கும் அந்த நலம் விரும்பி 'அந்த' ஜெராக்ஸை அனுப்பி 'பனால்' ஆக்கப் போறான்? இதுக்கு எதுக்கும்மா என் தொழிலை விட்டுட்டு நான் வேஷம் கட்டிக்கிட்டு வரணும்? நான் வரலே... என்னை விட்ருங்கம்மா ப்ளீஸ்!" கையெடுத்துக் கும்பிட்ட சுரேந்திரனின் பேச்சில் கோபமும், ஆவேசமும் இருந்தது.

❋ ❋ ❋ ❋ ❋




"படிச்சவன்... நீ கூட இப்படி பேசலாமா சுரேன்?" அறைக்குள்ளிருந்து வந்தான் கோபால். முப்பத்தி எட்டு வயது. தனியார் கம்பெனியில் ரெப்ரசென்டேடிவ். சில ஆயிரங்கள் சம்பளம். களைப்பை சுமந்த முகம்.

"சொல்லுப்பா... நீயும் சொல்லு... மனசை தளரவிடாதேன்னு எடுத்து சொல்லு" பார்வதியின் குரல் நடுங்கியது.

"இதுவரைக்கும் என்ன நடந்ததோ... அதுதானேஇப்பவும்நடக்கப்போகுது? இதுக்கு ஏண்ணே டைமை வேஸ்ட் பண்ணணும்?"

"நீ சொல்றது சரிதான். மறுக்கலே. அதுக்காக அப்படியே விட்டுட முடியுமா? அதுக்குதான் இந்த முறை அக்கம்பக்கத்துல கூட நாம பொண்ணு பார்க்கப் போற விஷயத்தை லீக் அவுட் பண்ணாம சீக்ரட்டா வச்சுக்கப் போறோம்?"

"வச்சுக்கிட்டா?"

"எப்படி லெட்டர் போகும்?"

"ஸோ... அந்த நலம் விரும்பி... நம்ம அக்கம்பக்கத்துலதான் இருக்காங்க... அப்படித்தானே?"

"அஃப்கோர்ஸ்!"

"சரி... அதையும்தான் பார்த்துடுவோமே! நானும் உங்கக்கூட வந்தாதானே... பொண்ணு பார்க்கப் போறோம்னு தெரியும்? இந்த முறை நான் வரலே. நீங்களேப் பாருங்க. அதுக்கப்புறம் மேற்கொண்டு நடக்கறதை வச்சு முடிவு பண்ணிக்கலாம்."

"அது எப்படி சுரேன்?" பார்வதி முகம் சுருங்கக் கேட்டாள்.

கோபால் சிறிது நேரம் யோசித்தவன், "ஏம்மா... சுரேன் சொல்றதும் எனக்கு சரின்னுதாம்மா தோணுது. இந்த முறை அவன் சொல்றபடி செய்வோமே! பொண்ணு வீட்ல சுரேன் வராததுக்கு தகுந்த காரணத்தை சொல்லிக்கலாம். நீங்களும், வத்சலாவும் இளம்பிலிக்கலாம். நீங்களும், வத்சலாவும் இளம்பி வந்துடுங்க. நடுவுல நானும் ஆபீஸ்லேர்ந்து வந்து சேர்ந்துக்கறேன்" என்றான்.

"நீங்க சொல்றது ரொம்ப நல்லாயிருக்கு!" நக்கலாய் சொல்லிக் கொண்டே உள்ளே வந்தாள் வத்சலா.

அவள் பின்னேயே தர்ஷிணியும், வர்ஷிணியும். தர்ஷிணி எட்டு மாதத்திற்கு முன்புதான் பெரியவள் ஆனாள். பொங்கல் வந்தால் பதிமூன்று வயது.

"இந்தாங்க தம்பி... பிரசாதம் எடுத்துக்குங்க. உங்களுக்காக வேண்டிக்கிட்டு பதினோரு தடவை பிரகாரத்தை சுத்தி அடிப்பிரதட்சணம் பண்ணினேன்."

"எதுக்கண்ணி... எனக்காக ஏன் கஷ்டப்பட்டுக்கிட்டு?" ச்ங்கடத்துடன் நெற்றியில் குங்குமமும், விபூதியும் இட்டுக் கொண்டான்.

"நல்லாருக்கே... நீங்க சொல்றது? ஒவ்வொரு வரன் வரும்போதும், இது தகைஞ்சிடும், இது தகைஞ்சிடும்னு நான் எதிர்பார்த்து, ஆசைப்பட்டு எதுவும் நடக்கலே. இந்த இடமாவது செட்டாயிடணும்னு உங்க பேர்ல அர்ச்சனை பண்ணிட்டு வர்றேன்" என்ற வத்சலாவுக்கு முப்பத்தி மூன்று வயது. சுரேந்திரனை விட ஒரு வயது மூத்தவள்.

ஆளும் பார்க்க களையாய், பாந்தமாய் இருப்பாள்.

"இவன் சொல்றான்... பொண்ணுப் பார்க்க கூட வரமாட்டானாம்." பார்வதி மருமகளை சப்போர்ட்டுக்கு அழைத்தாள்.

"எல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன் அத்தை! நீங்க ஏன் தம்பி பயப்படறீங்க? உங்க தகுதிக்கு எல்லாரும் கியூவுல நிக்க வேணாமா? வரமாட்டேன்னு சொன்னா எப்படி?"

"நான் ஏன் அண்ணி பயப்படணும்? எனக்கு இந்த ஏற்பாடே பிடிக்கலே. வந்து அசிங்கப்பட்டு... சை!"

பதறிப் போய் விட்டாள் வத்சலா.

"ஒரேயடியா இப்படி பேசினா எப்படி தம்பி? சம்பிரதாயம்னு ஒண்ணு இருக்கே? எப்படி இருந்தாலும், மாப்பிள்ளை பொண்ணை பார்த்துதானே ஆகணும்? வெறுமனே போட்டோவை காட்டி சம்பந்தம்



பேசறதெல்லாம்... யாரும் விரும்பறதில்லே!"

"அதுக்காக? எனக்கு வேலை இருக்கு அண்ணி. நான் வரலே!"

"அவனைப் போட்டு ஏன் எல்லாரும் டார்ச்சர் பண்றீங்க? சுரேன் சொல்றதுல என்ன தப்பிருக்கு? பேசாம இப்படிப் பண்ணலாமா?" கோபால் இடைப்புகுந்தான்.

"என்ன?" என்றாள் அவன் மனைவி எரிச்சலுடன்.

"யாரோ ஒருத்தன் லெட்டர் போட்டு நிறுத்தறதுக்கு... அந்த விஷயத்தை நாமளே முன்னாடியே சொல்லிட்டா என்ன?"

"கிழிஞ்சது. தத்துபித்துன்னு இந்த மாதிரி ஐடியா சொல்றேன்னு உங்க ஆபீஸ்ல எதையாவதுப் பேசி தொலைச்சிடாதீங்க. இருக்கிற வேலையும் பிடுங்கிட்டு அனுப்பிடப் போறான்."

"கொழுப்புடி உனக்கு!"

பார்வதி சிறிது நேரம் யோசித்தாள்.

"எனக்கென்னமோ கோபால் சொல்றது சரியாப்படற மாதிரி தோணுது."

"என்னத்தை... கூட நீங்களும் சேர்ந்துக்கிட்டு. விஷயம் தெரிஞ்ச உடனே சம்பந்தமே வேண்டாங்கிறவங்க... அப்புறம் எப்படி சம்மதிப்பாங்க? மூடி மறைக்கறதுதான் நல்லது."

"சரி எல்லாம் நல்லபடி நடந்து, கல்யாணத்துக்கு அப்புறம் தெரிஞ்சா?"

"என்ன செஞ்சிட முடியும்? எல்லாந்தான் முடிஞ்சுப் போச்சே? ஆனது ஆச்சுன்னு பொண்ணு வாழ்க்கைக்காக சமாதானத்துக்கு தானே வரணும்?"

"அதுவும் சரிதான்!"

"அம்மா பசிக்குது." சின்னவள் கொட்டாவி விட்டபடி கேட்டது.

"தூங்கிடப் போறா... அவளுக்கு டிபனை கொடு முதல்ல" என்றாள் பார்வதி.

"அப்படியே எனக்கும் வச்சிடு வச்சு. காலையில சீக்கிரம் எந்திரிச்சி காஞ்சிபுரம் வரைப் போகணும்."

"ஏழாயிரம் ரூபா சம்பளத்துக்கு கனடா வரைக்கும் அனுப்புவானுங்கப் போல..." வத்சலா முணுமுணுத்தபடி சென்றது யார் காதிலும் விழவில்லை... கோபாலைத் தவிர.

அவன் முகம் வேதனையில் சுருங்கியது.

"நீ என்ன சொல்றே சுரேன்?" பார்வதி மறுபடி ஆரம்பித்தாள்.

களைத்துப் போனான் சுரேந்திரன்.

"நடக்காத ஒரு விஷயத்துக்காக நீங்க எல்லாரும் என்னை காட்சிப் பொருளா வச்சி பேசணுமா?"

"ஐய்யோ... என்னப்பா சொல்றே?"

"பின்னே? மனசு வலிக்குதும்மா... விட்ருங்க ப்ளீஸ்"

"உன் நல்லதுக்காக தானே சுரேன்?"

"என் முடிவுல எந்த மாற்றமும் இல்லேம்மா. நான் வரமாட்டேன்" என்றான் அழுத்தமாக.

❋ ❋ ❋ ❋ ❋

சப்பாத்தியை சூடாய் தட்டில் போட்டாள்.

"இன்னும் ஒண்ணு போதும்!"

"ரெண்டு சப்பாத்தி போதுமா?" ஆச்சர்யமாய் கேட்டாள் வத்சலா.

"ஏழாயிரம் சம்பளம் வாங்கறவனுக்கு அதுவே அதிகம்... போதும்!"

"ஆமா... ஒண்ணுப் பேசினாப் போதும்... கோபம் மட்டும் தலைமேல வந்து உக்காந்துக்கும். நீங்க குடுக்கிற சம்பளத்துல நான், நீங்க, ரெண்டு பசங்க எப்படிங்க சாப்பிட முடியும்? தர்ஷிணி பெரியவளாய்ட்டா. கல்யாண வயசுல வந்து நிக்கும் போது என்னப் பண்ணுவீங்க? அடுத்தவளும் வளர்றா. உங்க தம்பி மட்டும் இல்லேன்னா என்ன ஆகி இருப்போம்? ஏதோ... வீடு சொந்த வீடாகிப் போச்சு. இல்லேன்னா... அதுக்கு மட்டுமே அஞ்சாயிரம் கொட்டிக் குடுக்கணும்."

"..............?!"

"நல்ல வேலையிலதான் இருந்தீங்க. மறுக்கலே. ஒரு காரியத்தை முடிச்சு தர்றதுக்காக பணம் வாங்குனீங்க. அதைக்கூட சாமர்த்தியமா பண்ணத் தெரியலையே! மாட்டிக்கிட்டீங்க. லஞ்சம் வாங்குனீங்கன்னு வேலைய விட்டு தூக்கிட்டான். அலைஞ்சுத் திரிஞ்சு இதோ இந்த வேலைக்குப் போறீங்க. இந்த சம்பளம் காணாதுன்னு வாக்கப் பட்டவளுக்கு வருத்தப்படறதுக்கு கூட உரிமை இல்லையா?"

"வருத்தப்பட்டியா, குத்திக் காட்டினியா?"

"நான் எப்படிப் பேசினாலும் ஒரே மாதிரி தான் தோணும். நல்ல வேலையா தேடிக்கக் கூடாதா?"

"வடபழனி முருகன் கோவில்ல அர்ச்சக தட்டுல கலெக்டர் போஸ்டிங்கா அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர் வச்சுக்கிட் எனக்காக காத்துக்கிட்டிருக்காராம். போ வாங்கிட்டு வரணும்."

"இதிலே ஒண்ணும் கொறைச்சல் இல்ல

பேசாம உங்க தம்பிக்கூட சேர்ந்து அவரோட ஆபீஸை பார்த்துக்கிட்டா என்ன?"

"வாயிலே ஏதாவது வந்துடும். சாப்பிடணும்னு நினைக்கறியா... எந்திரிச்சிடவா?"

"க்கும்..." சிலுத்துக் கொண்டு நடந்தாள்.

❀ ❀ ❀ ❀ ❀




மழை சொத சொதவென பெய்து... ஊரையே சோம்பேறியாக்கி விட்டிருந்தது.

பேப்பர்காரப் பையன் 'ப்ரெசன்ட் மிஸ்' என்பது போல... சைக்கிளில் ஒருமுறை பெல் அடித்துவிட்டு பேப்பரை லாவகமாய் சுழற்றி விட்டான். ஈரமாய் இருந்ததால் வழக்கமாய் சர்ரென வழுக்கி வராமல் இரண்டு சர்ருடன் பாதியிலேயே நின்று விட்டது.

"ஏம்ப்பா... கையில குடுத்துட்டு போறதுக்கென்ன? பாரு கிழிஞ்சிருச்சு. சும்மாவாப் போடற... காசு வாங்கல?" பார்வதி சினந்தாள்.

அந்தப் பையன் பதிலேதும் சொல்லாமல் தலையில் பிளாஸ்டிக் கவருடன் சைக்கிள் மிதித்துச் சென்றான்.

சூடாய் டீ அருந்திக் கொண்டிருந்த சுரேந்திரன் அம்மாவை ஏறிட்டான். அவள் கொடுத்த பேப்பரை வாங்கிக் கொண்டான்.

"அம்மா ஒரு நிமிஷம்."

நகர்ந்தவள் நின்றாள்.

"இப்ப எதுக்கு அந்தப் பையனை திட்டினே?"

"பின்னே? பார்த்தியா... பேப்பர் கிழிஞ்சு போச்சு? சும்மாவாப் போடறான்?"

"சரி... கிழிஞ்சுப் போச்சு. கிழியலேன்னா... படிச்சிட்டு பீரோவுல பத்திரப்படுத்தப் போறோமா என்ன? ஷெல்ப்புல போட றதுக்கும், ஸ்டவ்வை துடைக்கறதுக்கும் இதைதானே கிழிச்சு யூஸ் பண்றீங்க?"

"..........?!"

"பக்கத்திலேயே புக் ஸ்டால் இருக்கு. ரெண்டு நிமிஷம் நடந்தா பேப்பர் வாங்கிட மாட்டேனா? ஆனா... அந்தப் பையனுக்காகதான் அங்கே வாங்காம இருக்கேன். அவனோட அப்பா சென்ட்ரிங் வலை செஞ்சவர். கட்டிடத்துல வேலை சய்யறப்ப... கீழே விழுந்து... முதுகெலும்பு டைஞ்சு காலத்துக்கும் படுத்த படுக்கையா

**க**ர்நாடக மாநிலம் ஹாவேரி மாவட்டத்தில் சாவனூர் என்ற ஊர் உள்ளது. இங்கு அதிசய மரம் ஒன்று உள்ளது. புளிய மரத்தைப் போலவே இருக்கும். அதே சமயம் கிளை, இலை, காய்களில் நிறைய வித்தியாசம் இருக்கும். அடிப்பாகம் பாட்டில் வடிவத்தில் காணப்படும். 'தொட்ட உன்ஷே' என்று இம்மரத்தை அழைக்கிறார்கள்.

இந்த மரம் பாம்புகேஷியா என்ற குடும்ப வகையைச் சார்ந்தது. ஆப்பிரிக்காவில் இருந்து வந்ததாக கூறுகிறார்கள். இந்த மரத்தின் காய் மருத்துவ குணம் வாய்ந்தது. இந்த மரத்தின் நிழலில் எந்த உணவுப் பொருளை வைத்தாலும் அது கெட்டுப் போவதில்லையாம். இந்த மரத்தின் பூ, மரப்பட்டை வெடிப்பொருள் செய்ய உதவுகிறதாம். இதன் பக்க விளைவுகள் மிக பயங்கரமாக இருக்குமாம். இது வெடிக்கும் போது ஊதா நிறத்தில் புகை கிளம்புமாம். இந்த வெடியை தயாரிப்பதில் மாங்கோலியர்கள், ரஷியர்கள் மிகவும் கைதேர்ந்தவர்களாம்.

இதன் மோசமான விளைவுகளால் காலப் போக்கில் இந்த மரத்தை வளர்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டதாம்.

தொட்டால் வெடிக்காமல் இருக்கும் வரை இந்த வெடிகுண்டு மரத்தால் ஆபத்தும் இல்லை. அதுவரையில் நிம்மதி.

**- திருமகள்.**

ஆகிட்டார். அம்மா பூ விக்கிறாங்க. ஆறு வயசுல ஒரு தங்கச்சி. இந்தப் பையன் ப்ளஸ் ஒன் படிக்கிறான். இப்ப அவன் காலையில வீடுகளுக்கு பால் கவர் போட்டுட்டு, அப்புறம் பேப்பர் போட்டுட்டு ஸ்கூலுக்கு ஓடணும். அவனோட இந்த பொறுப்புணர்ச்சிக்கு நாம மரியாதை தரணும்."

"அப்படியா... எனக்கு இதெல்லாம் தெரியாதே. பாவம்... வேணுமின்னா நாளையிலேர்ந்து காலையிலே டிபன் தரட்டுமா?"

"வேணாம்மா... அது அவனோட தன்னம்பிக்கைய கெடுக்கிற மாதிரி ஆகிடும். எந்த வயசிலும் தன்னம்பிக்கையையும், சுய கௌரவத்தையும் விட்டுக் கொடுத்திடக் கூடாது. உழைக்கட்டும். பெருசா உயர்வான்








கண்டிப்பா!"

''அம்மா... வர்றேம்மா!''

கோபால் சட்டையின் கைமடிப்பை சரிசெய்தவாறு அறைக்குள்ளிருந்து வந்தான்.

''என்னப்பா ஏழுமணிக்கெல்லாம் கிளம்பிட்டே? டிபன் சாப்பிட்டியா?"

"நேரமில்லேம்மா... காஞ்சிபுரம் போகணும். அங்கே சாப்பிட்டுக்கறேன்."

"டிரெய்ன்லேயா போறே?"

"ஆமாம்மா!"

"மழை வருதே... அவ்ளோ தூரம் எப்படி நடப்பே?"

"இதெல்லாம் ஒரு பெரிய மேட்டரா? பதினஞ்சு நிமிஷம் வேகமா நடந்தா... ஸ்டேஷன் வந்துடப் போகுது!"

"அண்ணே... ஒரு நிமிஷம் இரு... வந்துட்டேன்."

வேகமாய் உள்ளேச் சென்றவன் சட்டை பேண்ட்டை மாட்டிக் கொண்டு பைக் சாவியை எடுத்துக் கொண்டு வந்தான்.

"என்ன சுரேன்?"

"நான் பைக்ல ட்ராப் பண்றேன். வா!"

"அட... நான் பார்த்துக்கறேன் சுரேன். நீ உன் வேலையப் பாரு!"

"பேப்பரை எப்ப வேணாலும் படிச்சுக் கலாம்... கிளம்பு!"

"உனக்கு டைமாகலே? இன்னும் நீ குளிக்கக் கூட இல்லையே!"

"உக்காருண்ணா... ட்ரெய்ன் போய்டப் போகுது." பைக்கை உறுமவிட்டான்.

கோபால் ஏறி அமர்ந்தான்.

❀ ❀ ❀ ❀ ❀

"**மொ**த்தம் எவ்வளவு ஆச்சு சார்?" பேப்பர்களை சரிபார்த்து கவரில் போட்டுக் கொண்ட நடுத்தர வயதுக்காரன் கேட்டான்.

"முந்நூத்தி அறுபத்தி அஞ்சு சார்!" என்றான் சுரேந்திரன்.

"இந்தாங்க!" முழு ஆயிரம் ரூபாயை தந்தான்.

''சில்லறை இல்லையா சார்?"

"ம்ஹூம்..."

டிராயரை திறந்துப் பார்த்தான். வெறும் ஐநூறு ரூபாய் தாள்களும் நான்கைந்து பத்து ரூபாய் தாள்களுமே இருந்தன.

வேலை செய்பவர்களிடமும் இருக்க வாய்ப்பில்லை. இதற்கு முன்பு வந்த கஸ்டமருக்காக... அவர்களிடமிருந்து சில்லறை ரூபாய்களை வாங்கியிருந்தான்.

இன்றைக்கு பார்த்து வருபவர்களெல்லாம் ஐநூறும், ஆயிரமுமாகதான் தூக்கிக் கொண்டு வருகிறார்கள்.

"ரெண்டு நிமிஷம் வெயிட் பண்ணுங்க... வந்திடறேன்."

"பரவாயில்லை சார்... வெய்ட் பண்றேன்."

சுரேந்திரன் மேல்மாடியை நோக்கிச் சென்றான்.

'அவள் பணிபுரியும் ஆபீஸ்!'

"வாங்க சார்... ஆச்சர்யமாயிருக்கு... ம சொல்லட்டுமா?" அவனை அறிந்த சாஸ்த என்கிற ஊழியர் சிரித்தபடி வரவேற்றான்.

"அதெல்லாம் வேணாங்க... பா இல்லையா?" புன்னகையுடன் கேட்டா கண்கள் சுற்றிலும் தேடின.

"உசேன் சாரையா கேக்கறீங்க? பக்கத்திலே தர்கா இருக்கே... மாலை க்கு போயிருக்கார். வந்துடுவார்."

"அப்படியா? சரி... உங்ககிட்ட ஆயிரம் ரூபாய்க்கு சேஞ்ச் இருக்குமா?"

"மாசக் கடைசி சார். தவிரவும் பாக்கெட்ல நூறு ரூபாய்க்கு மேல இருக்க விடாம பார்த்துக்குவா என் பொண்டாட்டி."

அப்போதுதான்... கனமான கதவைத் திறந்துக் கொண்டு... கையில் சில பில்களும், வவுச்சர் புத்தகமுமாய் வெளிப்பட்டாள் அவள்.

அதிசயமாய் சேலை கட்டியிருந்தாள். சந்தனத்தில்... கறுப்பு நிற பூக்கள் சிதறியிருக்க, கறுப்பு நிற பிளவுஸ் அணிந்திருந்தது... அவள் நிறத்தை மேலும் பளிச்சிட்டுக் காட்டியது.

தலையில் ஒரு முழம் மல்லி. தளர்வாய் பின்னியிருந்தது... அமர்க்களமாய் இருந்தது. நெற்றியில் சிறுதீற்றலாய் குங்குமம். அதிக அலங்காரமில்லாத எளிமையான தேவதை.

'இன்று வெள்ளிக்கிழமை அல்லவா? கோவிலுக்கு போய் வந்திருப்பாள்.'

அவள் கண்களிலும் சிறு வியப்பு. தயங்கி... பின் சிநேகமாய் முறுவலித்தாள்.

"வாங்க..."

"சாரைத் தேடி வந்திருக்கார் மேடம்."

"அவர் மாலை க்கு போயிருக்கார்..."

"சொன்னார்... நான் வர்றேங்க..."

"எ... என்ன விஷயமாய்..."

"சாருக்கு ஆயிரம் ரூபாய்க்கு சில்லறை வேணுமாம்."

"அவ்வளவு இருக்காது... ஒரு ஐநூறு ரூபாய்க்கு இருக்கும்... பரவாயில்லையா?"

"தாங்க்ஸ்ங்க... குடுங்க!"

விதுபாலா தன் ஹேண்ட் பேகிலிருந்து நூறும், அம்பதுமாய் இருந்த சில்லறை நோட்டுகளை எடுத்துத் தந்தாள்.

"தாங்க்ஸ்... தாங்க்ஸ்... மாத்திக் குடுத்திடறேன்."

"பரவாயில்லை... அவசரமில்லை!"

அவளிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டு வேகமாய் படியிறங்கினான்.

❀ ❀ ❀ ❀ ❀

**செ**ல்போன் அலறியது.

வீட்டிலிருந்து!

"சொல்லும்மா..."

"வரலியா சுரேன்?"

"எங்கே?"

"சொன்னேனே... பொண்ணுப் பார்க்க!"

அடுத்த நொடியே ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது.

வொர்க்கர்ஸ் காதில் விழுந்துடக் கூடாதென்று பால்கனிக்கு வந்தான்.

"ஏம்மா இப்படி தொல்லைப் பண்றே? நான்தான் வரமாட்டேன்னு சொல்லிட்டேனே...!"

"அது சரியா வராது சுரேன்!"

"போனை வைம்மா முதல்ல... நிறைய வேலையிருக்கு. வீட்டுக்கு வர லேட்டாகும்."

கட் பண்ணினான்.

'புரிஞ்சுக்கவே மாட்டாங்களா? [illegible]'

அந்த டென்ஷனில்... அவளுக்கு தருவதற்காக பாக்கெட்டில் வைத்த பணத்தை மறந்தேப் போனான்.

அதற்கடுத்தடுத்து வந்த கஸ்டமர்கள் என்று நேரம் ஓட... அவள் ஞாபகம் திடீரென உற்பத்தியான போது நேரம் நாலரையைத் தாண்டியிருந்தது.

"அடடா..." என்று கையை உதறியபடி மேலே ஓடினான்.

"என்ன சார்? உசேன் சார்தானே? உள்ளேதான் இருக்கார்..." என்றான் சாஸ்தா.

"அவரில்லை... எனக்கு சேஞ்ச் கொடுத்தாங்களே... அவங்க..."

"அவங்களா? என்னமோ அவசரம்னு பர்மிஷன் போட்டுட்டு மூணு மணிக்கேப் போய்ட்டாங்களே!"

"..........?!"

❀ ❀ ❀ ❀ ❀



**ஓ**ட்ஸ் கஞ்சியை காய்ச்சி... இரண்டு சின்னக் கிண்ணங்களில் ஊற்றி... பதமாய் ஆற வைத்து ஸ்பூன் போட்டு அம்மா, அப்பாவின் முன் வைத்தாள்.

"என்னம்மா இது? எதுக்கு ரெண்டு கிண்ணத்துல?" என்றார் பாண்டியன்.

"உங்களுக்கும் தாம்ப்பா..."

"எனக்கெதுக்கும்மா? உங்கம்மாவுக்கு கொடு. அவதானே... ஏகப்பட்ட நோய்க்கு உடம்பை வாடகைக்கு விட்டிருக்கா!"

"நீங்க மட்டும் என்னப்பா? மனசால எவ்வளவு தளர்ந்துப் போயிருக்கீங்கன்னு எனக்குதான் தெரியும். இதை ரெண்டு பேரும் முதல்ல சாப்பிடுங்க. பொங்கல்



செஞ்சிட்டிருக்கேன்... அப்புறமா அதை சாப்பிடலாம்!"

"எதுக்கும்மா இத்தனைப் பண்ணிக்கிட்டு? டீ போட்டிருக்கலாமே!"

"இன்னும் பால் வரலேப்பா...!"

"நான் கடைக்குப் போகவா?"

"அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்... முதல்ல சாப்பிடுங்க. அம்மா... அம்மா உன்னைத்தான். இன்னும் ஏன் அதையே நினைச்சி அழுதுட்டிருக்கே... சாப்பிடும்மா!" விதுபாலா அம்மாவின் கன்னத்தில் மெதுவாய் தடவிக் கொடுத்தாள்.

"மறக்கற மாதிரியா பேசினான் அந்த கடங்காரன். எங்களைப் பார்த்து அப்படி கேட்டுட்டானே!"

வேறொன்றுமில்லை. நேற்று மதியம் மெல்லிய நைட்டியுடன் மளிகை கடைக்கு சென்று வந்த சுசீலாவை பார்த்து கண்டித்திருக்கிறாள் சுந்தரி.

பதிலுக்கு சுசீலா பேச, இவள் பேச... வாக்குவாதம் முற்றி... உறக்கத்திலிருந்து விடுபட்ட குரு எழுந்து வந்தான்.

சுசீலா முந்திக் கொண்டு, அழுகையுடன் ஒப்பிக்க... ஆசை மனைவி அழுவதை சகிக்காமல்... கோபம் உச்சிக்கு ஏற... அம்மா என்றும் பாராமல் வாய்க்கு வந்தபடி பேசினான்.

"அவ... என் பொண்டாட்டி... அவ எப்படி வேணாலும் வருவா... போவா. உனக்கென்ன அதைப்பத்தி? ஒருத்திய எவனோ ஊர்பேர் தெரியாதவனோட ஓடவிட்டு கல்யாண செலவை மிச்சம் பண்ணிட்டே! இப்ப உன் கடைசிப் பொண்ணை வேலைக்கு அனுப்பி அப்பனும், ஆத்தாளும் எச்சசோறு சாப்பிடற திமிரா?"

"டேய்..."

"என்ன அலர்றே? ஏன் உன் புருஷன் நல்லாதானே இருக்காரு? எங்கேயாவது வாட்ச்மேன் வேலைக்கு போக வேண்டியதுதானே? எதுக்கும் பிரயோஜனம் இல்லேன்னாலும் என் பொண்டாட்டிய மட்டும் கணக்கெடுத்துட்டு இரு. வயசாச்சே ஒழிய புத்தி இருக்கா உனக்கு? போ... போ!" உதட்டை சுழித்து இளக்காரமாய் வார்த்தைகளை உமிழ்ந்தான் குரு.

பெற்ற மகன் இப்படி பேசிவிட்டானே என்கிற வேதனை... அழுதழுது பிரஷர் ஏறி விட்டது. ஒரு கட்டத்தில் மூச்சு விடவே சிரமப்பட... பயந்துப் போய் மகளுக்கு போன் செய்தார் பாண்டியன்.

உடனே பர்மிஷன் போட்டு கிளம்பி வந்தவள் உடனடியாக ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் சென்றாள்.

அவளுக்கு ஆறுதல் கூறினாள்.

"பெத்தப்பிள்ளை இப்படியெல்லாம் பேசுமா?" சொல்லி சொல்லி மாய்ந்துப் போனாள்.

"விடும்மா... பிள்ளைங்கற உறவுக்கு தகுதியே இல்லாதவன் பேசினதை எல்லாம் நினைச்சி உடம்பை கெடுத்துக்கலாமா? அம்மா இதோ பார்... நான் இருக்கேம்மா! என்னை வளர்த்து ஆளாக்கிற கடமை உங்களுக்கு இருக்கப்ப... பெத்தவங்களை காப்பாத்தற கடமையும் உரிமையும் எனக்கில்லையா? அவன் பேசறதை எல்லாம் பெரிசா எடுத்துக்காதேம்மா. இந்தா முதல்ல சாப்பிடு!"

"சரி... அவன் பேசறதை விடு! பொட்டைப் புள்ளைய கல்யாணம் பண்ணி கரையேத்தற கடமைய இன்னும் நாங்க செய்யலியே! அப்பாவோட ஆக்ஸிடன்ட் கேஸ்ல கிடைச்ச ஒண்ணரை லட்சம் பேங்க்ல உனக்காக போட்டது அப்படியே இருக்கு. அதைத்தவிர வேற எந்த சேமிப்பும் இல்லையே? என்னடி பண்ணப் போறோம்?"

"இப்ப எதுக்கு அந்தப் பேச்சு? என் கல்யாணமும் நடக்கும். நடக்கறப்ப அதைப் பார்த்துக்கலாம். மதியத்துக்கு என்ன சமைக்கட்டும்... சொல்லுங்க."

"மதியத்துக்கா? அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். நீ கிளம்பற வழியைப் பார்!"

"நான்... இன்னைக்கு லீவுப் போடலாம்னு இருக்கேன்."

"வேணாம் விது. நான் எழுந்து நடமாடினாதான் மனசுக்கு நல்லது. இல்லேன்னா... நடந்ததை யோசிச்சே... உடம்பு துரு பிடிச்சிடும். நீ வீட்ல இருந்தா... அவங்களும் வேணுமின்னே வாயைக் கிளறுவாங்க. வேணாம்... புறப்படு. நான் சீக்கிரமா சமையலை முடிச்சிடறேன். இன்னைக்கு கடைக்கு போகலே...."

விதுபாலாவுக்கு அம்மா சொல்வது சரி எனப்பட்டது.

"சரிம்மா! ஆனா, அவசரப்படாதே மெதுவாகவே சமைச்சிக்க. எனக்கு இன்னைக் வேண்டாம். ஒட்டல்ல வாங்கிக்கறேன்."

"ஒட்டலா? வேண்டாம்... வேண்டா உடம்புக்கு ஆகாது."

"ஒருநாள்தானேம்மா. நான்பார்த்துக்கறே

கஞ்சி ஆறிட்டா குடிக்க பிடிக்காது. குடி... நான் போய் பொங்கலை தாளிச்சிட்டு வர்றேன்."

❀ ❀ ❀ ❀ ❀

**வி**ரைந்து நடந்தாள் விதுபாலா.

"எங்கே வேலை பாக்கறே?"

திடீரென பக்கத்தில் முளைத்தான் அவன். குருவின் நண்பன்.

உடம்பை ஒட்டிய டைட்டான டிஷர்ட். இன்பண்ணிய பேண்ட். தி.நகரில்பிளாட்பாரக் கடையில் வாங்கிய பெல்ட். கூலிங்கிளாஸை மடித்து கழுத்துக்கு கீழே சொருகியிருந்தான்.

வெறுப்புடன் தலையை திருப்பிக் கொண்டாள்.

"என் தங்கச்சிக் கூட காலேஜ்ல படிக்குது..."

"..........?!"

"அண்ணன் வேலைக்குப் போறான். 'ரீசன்ட்'டான குடும்பம்தான்."

"ஏய்... என்ன? எதுக்கு என் பின்னாடியே வர்றே? ஒரு லிமிட்டுக்கு மேல பொறுமையா இருக்க மாட்டேன்."

"என்னா கோவிச்சுக்கறே? உன்னாட்டம் படிக்கலே. வேற என்னா கொறைச்சல் எனக்கு?"

"வாயேன்... அதை அந்த போலீஸ்காரர் கிட்டே கேட்டு தெரிஞ்சுக்குவோம்."

"உனக்கு இன்னைக்கு மூடு சரியில்லே. ஆனா, நிதானமா என்னைப் பத்தி யோசி. உன்னாட்டம் படிச்சவனை கல்யாணம் பண்ணினா... அவன் பின்னாலே நீ சட்டிய தூக்கிட்டு ஓடணும். ஆனா, நான்லாம் கண்ல வச்சு பார்த்துப்பேன்... புரிஞ்சுக்கோ. அப்பால மீட் பண்ணுவோம்."

'கடவுளே!' எரிச்சலுடன் தலையில் அடித்துக் கொண்டு நடந்தாள்.

'என்னப் பண்ணலாம் இவனை? குருவிடம் சொல்லிப் பார்ப்போமா? அவனே மூணாவது மனுஷன் மாதிரி நடந்துக்கும்போது... இதை எந்தளவிற்கு பெரிதாய் எடுத்துக் கொள்வான்? யோசிப்போம்.'

"அம்மா பூ வாங்கலியா? ரெண்டு முழம் ...த்து ரூபாதான்!" ஸ்டேஷன் வாசலிலேயே ...க்காரப் பெண்மணி மடக்கி கேட்டதை ...தில் வாங்கிக் கொள்ளாமல்... விரைந்து ...ந்தாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ!"

...பாரோ அழைக்க, பக்கவாட்டில் திரும்பினாள்.

அவன்!

ஆச்சர்யத்துடன் முகம் அகன்றது.

"நீங்க.... எங்கே... இங்கே?"

"நீங்க இந்த ஸ்டேஷன்லதான் ஏறுவீங்கன்னு தெரியும். ரெண்டு முறை கவனிச்சிருக்கேன்."

"..........?!"

"நேத்து நான் உங்க ஆபீஸ்க்கு போனேன். நீங்க சீக்கிரம் போய்ட்டதா சொன்னாங்க. உங்ககிட்ட வாங்கின பணத்தைக் குடுக்கறதுக்காகதான் காத்திருந்தேன்!"

சிநேகபாவத்துடன் அவன் பேசியதை ரசித்தாள். உதடுகளில் கேலிப்புன்னகை நெளிந்தது.

"உங்க வீடு எங்கே இருக்கு?"

"தாம்பரம்ங்க!"

"ஸோ... இந்தப் பணத்தை குடுக்கறதுக்காகவே இந்த ஸ்டேஷன்ல இறங்கி காத்திருக்கீங்க!"

"ம்!"

"ஏன்... நாமதான் ஒரே பில்டிங்ல ஒர்க் பண்றோமே. அங்கே வந்து குடுத்திருக்கலாமே சார்? எதுக்கு இப்படி காத்திருந்து சிரமப்படணும்?"






"ஓ... ஸாரிங்க. சத்தியமா நான் யோசிக்கவே இல்லைங்க. அதை தப்பா நினைச்சிடாதீங்க... ஸாரிங்க!" முகம் பதற்றத்தில் வியர்த்தது.

"நோ ப்ராப்ளம்!"

"இந்தாங்க... சமயத்துல ஹெல்ப் பண்ணீங்க. ரொம்ப தாங்க்ஸ்ங்க! வர்றேங்க..."

**இ**ப்போதெல்லாம் எங்கு பார்த்தாலும் மசாஜ் கிளப்புகள் கண்ணில் பட ஆரம்பித்துவிட்டன. உடல் அலுக்க, மனம் வலிக்க வேலை செய்து விட்டு வீடு திரும்புகிறவர்களுக்கு மசாஜ் தரும் பலன் அதிகம் என்கிறார்கள் உடல் வல்லுனர்கள்.

மசாஜால் சருமம் பெறும் பலன்கள் இணையற்றவை. சருமத்தின் துளைகள் திறக்கப்பட்டு, வியர்வை மூலம் கழிவுகள் உடலில் இருந்து வெளியேற்றப்படுகின்றன. தசைகளின் இறுக்கத்தை மசாஜ் குறைக்கிறது. தசை வலிகளை நீக்குகிறது. மசாஜ் செய்யப்பட்ட பகுதிகளில் ரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. நரம்புக்கு இதம் அளிக்கிறது. கீழ் வயிற்றுப் பகுதியில் மசாஜ் செய்வது, ஜீரண மண்டலத்தைத் தூண்டி, கழிவுகளை நன்றாக வெளியேற்ற வைக்கிறது. கல்லீரலின் திறன் அதிகரிப்பதால், உடலின் நோய் எதிர்ப்புத் திறன் வலுப்பெறுகிறது.

சிறுநீரக மண்டலத்தை மசாஜ் தூண்டுவதால் சிறுநீர் சேர்மானம் அதிகமாகிறது. உடலில் இருந்து நச்சுக்கழிவுகள் வெளியேற்றப்படுவதற்கு அதிக வாய்ப்பு ஏற்படுகிறது. முறையான மசாஜ், இதயத்தின் சுமையைக் குறைக்கிறது.

மசாஜை கை, கால்களில் இருந்துதான் தொடங்க வேண்டும். அடுத்து நெஞ்சு, கீழ்வயிறு, பின்புறம், பின்புற இடுப்பு என மசாஜ் செய்ய வேண்டும். முகம் மற்றும் தலையில் முடிக்க வேண்டும். பின்புறத்தில் மசாஜ் செய்வதற்கு துணியை பயன்படுத்தலாம். மசாஜுக்கு பின் குளிக்கலாம். அல்லது வெதுவெதுப்பான நீரில் நனைத்த துணியால் உடம்பை துடைக்கலாம்.

உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மசாஜை தலையில் இருந்து ஆரம்பித்து காலில் முடிக்க வேண்டும். காய்ச்சலின் போது மசாஜ் கூடாது. சரும வியாதி உள்ளவர்களுக்கும் மசாஜ் ஏற்றதல்ல.

**- கார்த்திக்.**

"ஒரு நிமிஷம்"

"..........?!"

"நானும் இதே டிரெய்ன்லதானே வரப் போறேன்? ஏன் விட்டுட்டு ஓடறீங்க?"

"வா... வாங்க..." சங்கடத்துடன் சிரித்து இணைந்து நடந்தான்.

"என் பேர் விதுபாலா!"

"ஓ... என் பேர் சுரேந்திரன்."

அவர்களை நோக்கி தூரத்தில் டிரெய்ன் வந்துக் கொண்டிருந்தது.

❀ ❀ ❀ ❀ ❀




"**சா**ர்... இதுல நிறைய ஸ்பெல்லிங் மிஸ்டேக்ஸ் இருக்கு... பார்த்து கவனமா அடிங்க சார். 'மயில்தோகை' பத்திரிகையில பேஜஸ் முடிக்கணும்னு அவசரப்படுத்தறாங்க. மூணு மணிக்கு ஆள் வந்திடுவாங்க...." சுரேந்திரன் இதமாய் அவசரப்படுத்தினான்.

"ஸாரி சார்... முடிச்சிடலாம்!"

திடீரென சந்தனப்பவுடரின் வாசம் காற்றில் மிதந்து நாசியை வருட... திரும்பி வாசலைப் பார்த்தான்.

நினைத்ததுப் போலவே விதுபாலா சின்ன காரிடாரைக் கடந்து படியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

சொல்லி வைத்தாற்போல் அவளும் திரும்பிப் பார்க்க.. சின்னப் புன்னகையை பரிமாறிக் கொண்டனர்.

❀ ❀ ❀ ❀ ❀

"**த**ம்பி..."

"என்னண்ணி..." குளித்து முடித்து சட்டையை அணிந்துக் கொண்டிருந்தான் சுரேந்திரன். அறைக்குள் நுழைந்தாள் வத்சலா.

"ம்ம்ம்... ப்ப்பா.. என்ன வாசனை இது! புதுசா? பவுடர் வாசனை மாதிரி இல்லையே!

"பாடி ஸ்ப்ரே அண்ணி!"

"இதெல்லாம் நீங்க யூஸ் பண்ண மாட்டீ... களே!" வியப்புடன் மச்சினனைப் பார்த்தாள்...

"ப்ரண்ட் குடுத்தான். பாரின் ஸ்ப்...

சும்மா... அடிச்சுப் பார்த்தேன்!"

"இப்பதான் கல்யாணக்களையே வ... உங்க ரூம்ல..." கிண்டலடித்து சிரித்தாள்.

"போங்கண்ணி... கேலிப் பண்ணிக்கி... இதென்ன பெரிய விஷயமா? எனக்கு இ... எல்லாம் ஆசைப்படவோ, அனுபவிக்க...

நேரமில்லே. அவ்வளவுதானேயொழிய... வேறெதுவுமில்லை."

"நான் இதை தப்புன்னாச் சொன்னேன்? இந்த மாதிரி இருங்கன்னுதான் சொன்னேன். பாருங்களேன், வந்த வேலைய மறந்துட்டேன். சேமியா புட்டு பண்ணியிருக்கேன். அதை சாப்பிட றீங்களா? இல்லை நேத்து மாவு இருக்கு... தோசைப் போட்டுத் தரவா?"

பேச்சுவாக்கில் ஒருமுறை விதுபாலா 'சேமியா புட்டு என்றால் உயிர். பேரன்ட்ஸ்க்கு உடம்பு முடியாததால் அதையெல்லாம் செய்ய நான் அனுமதிப்பதில்லை' என்று சொன்னது நினைவிற்கு வந்தது.

"ஓ... சேமியா புட்டா? வெரிகுட். அதிலே நிறைய தேங்காப் போட்டு ஒரு டிபன் பாக்ஸ்ல போட்டுக் குடுங்க. ஆபீஸ்ல சாப்பிட்டுக்கறேன். இப்ப சாப்பிட ரெண்டு தோசை... தட்ஸால்!"

வத்சலா... அவனை இன்னும் ஆச்சர்ய மாகப் பார்த்தபடி சென்றாள்.

சற்று நேரத்தில் சுடச்சுட தோசையுடன் வந்தாள்.

"இந்தாங்க தம்பி... நீங்க கேட்ட சேமியா புட்டு." டிபன் பாக்ஸை தட்டு பக்கத்தில் வைத்தாள்.

"தாங்க்ஸ்"

"உங்ககிட்டே என்னவோ வித்தியாசம் தெரியுது."

"ஏன் அப்படி சொல்றீங்க?"

"தினமும் சாப்பாட்டை வீட்லேர்ந்து எடுத்துட்டுப் போங்கன்னா... ஸ்கூல் பையன் மாதிரி... கேரியரை தூக்கிட்டு ஓடச் சொல் றீங்களான்னு கேப்பீங்க. இப்ப... கேட்டு வாங்கி..."

"இந்தாங்க... வேண்டாம்!" டிபன் பாக்ஸை தள்ளி வைத்தான்.

"ஐயோ... என்னங்க தம்பி. நான் ஜாலியா, விளையாட்டாச் சொன்னேன்!"

".........?!"

"தம்பி..."

"சொல்லுங்க..."

"மளிகைக் கடையிலே சாமானுக்கெல்லாம் பில் போட்டுட்டு வந்தேன்!"

"அதுக்குத்தான் நேத்து மூவாயிரம் கொடுத்தேனே அண்ணி!"

"பத்தலை தம்பி! இவனுங்க இஷ்டத்துக்கு விலைய ஏத்தி விக்கிறானுங்க. எல்லாப் பொருளோட விலையும் ஏறிப் போச்சு."

"இன்னும் எவ்வளவு வேணும்?"

"ஆயிரம் ஆகும்!"

பர்ஸை எடுத்தான்.

"கைப்பிடி பம்புல கைப்பிடி உடைஞ்சு போச்சு. வாஷரும் மாத்தணும். இந்த மாசம் கரண்ட் பில் வேற கட்ட வேண்டியிருக்கு."

"மொத்தம் எவ்வளவு வேணும்னு சொல் லுங்கண்ணி."

"மூவாயிரம் குடுங்க!"

மூன்று ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை உருவிக் கொடுத்தான்.

சுரேந்திரன் அலுவலகம் புறப்பட்டு சென்றபின் பார்வதி மருமகளிடம் வந்தாள்.

"வத்சலா!"

"என்ன அத்தை?"

"சுரேந்திரன்கிட்டே எதுக்கு பணம் வாங்கினே?"

"மளிகை சாமான் விலை எல்லாம் ஏறிப் போச்சு. கொடுத்த பணம் பத்தலை. தவிர பம்ப்பை மாத்தி வாங்கிப் போடணும். கரண்ட் பில் கட்டணும்."

"எல்லாம் சரிதாம்மா. ஆனா, வீட்டோட அத்தனை செலவையும் சுரேன் மேலேயே சுமத்தறது சரியில்லையே. நாளைக்கு அவனுக்கும் கல்யாணமாகி இந்த வீட்டுக்கு இன்னொருத்தி வருவா... அவ கேள்வி கேட்க மாட்டாளா? கோபாலும் கொஞ்சம் பொறுப்பேத்துக்கணும் இல்லையா?"

"பசங்களோட எக்ஸாம் பீஸ் கட்டிட்டோம் அத்தை" என்றபடி சங்கடத்துடன் தலை கவிழ்ந்தாள் வத்சலா.

அதற்கு மேல் பேச பார்வதிக்கும் தயக்கம் தடுக்க நகர்ந்து விட்டாள்.

❀ ❀ ❀ ❀ ❀

**"நா**னும் வந்ததிலேர்ந்து பார்க்கறேன். ஏதோ யோசனையாவே இருக்கே?" வத்சலாவின் அம்மா பங்கஜம் புதினா கீரையை ஆய்ந்தபடி கேட்டாள்.

"ப்ச்... ஒண்ணுமில்லேம்மா!"

"பெத்தவகிட்டே சொல்றதுக்கென்ன?"

"நேத்து என் மச்சினர்கிட்டே மளிகை சாமான் விலை ஏறிப் போச்சுன்னு கொஞ்சம் அதிகப்படியா பணம் கேட்டேன். உடனே என் மாமியார் ஏன் அதிகமா கேக்கறேன்னு கணக்கு கேட்க ஆரம்பிச்சிட்டாங்க...."

"ஓ... உன் மாமியாருக்கு அவ்வளவு விவரம் வந்துடுச்சா?"

"அவங்க கேட்டதிலேயும் என்னம்மா தப்பிருக்கு? 'சுரேன் மட்டுமே குடும்பபாரத்தை சுமந்தா ஆச்சா? உன் புருஷனையும் பகிர்ந்துக்க சொல்லு'ன்னு கேட்டப்ப உடம்பே கூசிப் போய்டுச்சும்மா!"

"..........?!"

"ரெண்டு பொட்டப்புள்ளைய வச்சுக்கிட்டு இவரோட சம்பாத்தியத்திலே என்ன குப்பை கொட்டிட முடியும்?"

"இப்ப எதுக்கு வருத்தப்படறே? அதான் சாமர்த்தியமா உன் புருஷன் சம்பாத்தியத்துல ஏலச்சீட்டு போட்டு, அதிலே இருபத்தஞ்சு பவுன் நகையும் வாங்கி பேங்க் லாக்கர்ல பத்திரப்படுத்தி வச்சிருக்கியே! இதோ இந்த சீட்டும் இன்னும் மூணு மாசத்துல முடியப் போகுது. அதிலே உனக்கு ஒண்ணரை லட்சம் கிடைக்கப் போகுது. இன்னும் பத்து பவுன் சேர்த்துடப் போறே! இதுக்கேன் கவலைப்படறே? நீ செஞ்சதுல எந்த தப்பு மில்லே. பொட்டைப் புள்ளைங்களுக்காக சேர்த்து வைக்கிறே! அவ்ளோ தானே?"

"எல்லாம் சரிதான். ஆனா, என் மச்சினர் ரொம்ப நல்லவர். அவர்கிட்டே பொய் சொல்லி பணம் வாங்கி... அந்தப் பணத்தை எங்க பங்குக்கு குடும்பம் நடத்தப் போட்டு... சே... நினைச்சாலே அசிங்கமாயிருக்கும்மா!"

"இதிலே ஒரு அசிங்கமுமில்லே. நீ சாமர்த்தியமா குடும்பம் நடத்தறேன்னு பெருமைப்படு. ஆமா, உன் மச்சினனுக்கு ஏதாவது வரன் அமைஞ்சதா, இல்லையா?"

"இல்லேம்மா...!"

"அந்தப் புள்ளை அந்தக் காரியம் மட்டும் பண்ணாம இருந்தா... எவ்ளோ நல்லார்ந்திருக்கும்?"

"அவர் மேல ஒரு தப்பும் இல்லேம்மா. இப்பக்கூட சீட்டுப் பணத்தைக் கட்டிட்டு முக்கியமா ஒரு விஷயத்தை பத்தி பேசணும்னுதான் இங்கே வந்தேன்!"

"என்ன சொல்லு?"

"அப்பா எங்கே?"

"சொன்னேனே... அவர் நண்பரோட மகளுக்கு கல்யாணம்னு காலையிலேயே பாண்டிச்சேரி போய்ட்டார். நாளைக்குதான் வருவார்."

"விந்தியா எங்கே?"

"உள்ளேதான் இருக்கா!"

"ஆபீஸ்க்கு போகலே?"

"தலைவலின்னு லீவுப் போட்டுட்டா!"

"அவளைப் பத்திதாம்மா பேச வந்தேன்."

"என்ன விஷயம்?" பங்கஜம் கீரையை ஓரமாய் ஒதுக்கி விட்டு மகளை கூர்ந்து கவனித்தாள்.

"நம்ம விந்தியாவை சுரேந்திரனுக்கு குடுத்தா என்ன?"

"என்னக்கா... இந்த விஷயத்தை தூக்கிட்டுதான் பழவந்தாங்கல்லே இருந்து சூளைமேட்டுக்கு வந்தியா?" உள்ளிருந்து ஹாலுக்கு வந்தாள் விந்தியா.

"யோசிக்க வேண்டிய விஷயம்தான். அப்பா வரட்டும் பேசலாம்!"

"இதிலே யோசிக்க என்ன இருக்கு? எனக்கு விருப்பமில்லேம்மா!"

"என்னடி இப்படி பட்டுன்னு சொல்றே? என் மச்சினனுக்கு என்னக் குறை?" சற்று கோபமாகவே கேட்டாள் வத்சலா.

❀ ❀ ❀ ❀ ❀



**வி**ந்தியா அக்காவை ஊடுருவிப் பார்த்து சிரித்தாள்.

"சுரேன் மாமாவுக் கென்ன? ஹாண்ட்சம்மா நல்லா இருக்கார். நல்லா சம்பாதிக்கிறார்."

"அப்புறமென்ன? அவரோட கடந்த கால வாழ்க்கைய பத்தி..."

"சேச்சே... அந்த விஷயம் பத்தியும் எனக்குத் தெரியும். சுரேன் சைடுல எந்த தப்புமில்லே!"

"இதுக்கு மேலே என்ன?"

"அங்கே நீ இருக்கியே...!"

"..........?!"

"சுரேனுக்கு எந்த பிரச்சினையுமில்லை. ஆனா, மக்கு! அவனைக் கட்டிக்கிட்டா, நான் ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைக்காது. எனக்கு கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்குப் போகிற ஐடியா இல்லை. வாழ்க்கையை ஜாலியா என்ஜாய் பண்ணணும். உன் வீட்டுக்கு வந்தா உன் குடும்பத்துக்கும் சேர்த்து உழைச்சுக் கொட்டணும். எனக்கு புருஷனா வர்றவனோட சம்பாத்தியத்தை மத்தவங்க அனுபவிக்கிறதில துளியும் சம்மதமில்லே. ஸோ... சுரேன் ரிஜக்டட்" என்றாள் விந்தியா... தெளிவாக.

வத்சலா வாயடைத்துப் போனாள்.

❀ ❀ ❀ ❀ ❀

**ரெ**ய்ன்கோட்டையும் மீறி சட்டை மழையில் நனைந்து விட்டிருந்தது. சுரேந்திர அவற்றைக் கழற்றி ஹாலில்... மழை காலத்தி திடீரென முளைக்கும் கொடிக்கயிற்றில் உ

விட்டான்.
வீட்டிற்குள் நுழைந்ததும் எதிர்படும் முகம் அம்மாவோடது. சத்தமே காணோம்.
லுங்கியை இறுக்கிக் கட்டிக் கொண்டு சுற்றிலும் பார்த்தான். அண்ணனின் அறைக்குள் வர்ஷிணியும், தர்ஷிணியும் வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருந்தனர். சமையலறையில் சப்பாத்தி சிவக்கும் மணம்... பசியைத் தூண்டியது. அண்ணியின் வளையல் சத்தம்... மாவைத் திரட்டிக் கொண்டிருக்கிறாள்.
உள்ளறைக்குச் சென்றான்.
பார்வதி கட்டிலில் படுத்துக் கிடந்தாள். துணுக்குற்ற சுரேந்திரன் வேகமாய் சென்று அம்மாவைத் தொட்டுப் பார்த்தான். காய்ச்சலுக்கான அறிகுறி தென்படவில்லை. பதற்றம் நீங்கியவனாய், "என்னம்மா சீக்கிரமே படுத்துட்டீங்க?" எனக் கேட்டான்.
''வந்துட்டியாப்பா?'' என்றவாறே எழுந்தமர்ந்தவளின் முகம் லேசாய் உப்பி, கண்கள் சிவந்திருந்தது.
"என்னம்மா... ஏன் டல்லா இருக்கீங்க?"
"ஒண்ணுமில்லே சுரேன்... காபி வேணுமா?" கேட்கும் போதே... கண்கள் கரைந்தன. சட்டென முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.
சுரேந்திரன் முகம் சுருங்க... பக்கத்தில் அமர்ந்து அம்மாவின் தோளில் கை வைத்தான்.
அவ்வளவுதான்... நெடியதொரு கேவலுடன் விசும்பினாள்.
"ஐய்யோ... ஏம்மா... எதுக்கு அழறே?"
"நான் சொல்றேன் தம்பி... இந்தாங்க டீ... சாப்பிடுங்க. அத்தை என்ன நீங்க... சின்னக் குழந்தையாட்டம்? அழுதழுது பிரஷரை ஏத்திக்காதீங்க. சாயந்திரத்திலிருந்து அழுதுக்கிட்டே இருக்காங்க தம்பி. என்ன சொன்னாலும் கேக்கலே!"
"ஏன் அண்ணி?"
"அந்த வீட்லேர்ந்து வந்தாங்க... என்னென்னமோ பேசிட்டுப் போய்ட்டாங்க!"
"எந்த வீட்லேர்ந்து?"
"கடைசியா சாலிகிராமத்துல பாண்ணு பார்த்துட்டு வந்தோமே... ந்தப் பொண்ணோட சித்தப்பாவாம். ன்டபடி பேசிட்டுப் போனான் அந்த ஆளு!"
"லெட்டர் சமாச்சாரம் தானே?"
"ம்!"
"அதுக்கேன் அண்ணி... அவங்களை நொந்துக்கணும்? பொண்ணைப் பெத்தவங்களுக்கு கோபம் வரத் தானே





செய்யும்? தெரிஞ்ச விஷயம்தானே? இதையேம்மா பெரிசா எடுத்துக்கறே? புதுசாவா நடக்குது? இதுக்குதான்... இந்தப் பொண்ணு பார்க்கற சமாச்சாரத்தை எல்லாம் ஏறக்கட்டுங்கன்னு சொல்றேன். கேட்டா தானே? திரும்ப திரும்ப வலியப்போய் சாணிய அள்ளி நாமளே முகத்துல பூசிக்கறோம். அசிங்கமாயிருக்கும்மா!" சுரேந்திரனின் மனசு வலித்தது.
"அதுக்காக... பொண்ணுப் பார்க்காம இருக்க முடியுமா?" எனக் கேட்டாள் பார்வதி.
"அதுக்குதான் அசிங்கப்படறோமே!"
"ஏம்ப்பா இப்படிப் பேசறே? இந்தக் காலத்துல பொண்ணுங்களே.... என்னென்னமோ தப்புப் பண்ணிட்டு, தைரியமா இன்னொருத்தனை கல்யாணம் பண்ணிக்குதுங்க. ஆம்பளை... உனக்கென்ன குறைச்சல்?"
"நம்ம வீட்டுக்கு இதேமாதிரி மொட்டைக் கடிதம் வந்தா நீ சும்மா விடுவியாம்மா?"
"வத்சலா... அந்தாள் வீசி எறிஞ்சிட்டுப் போன லெட்டரை எடுத்துட்டு வாயேன்!"
"எதுக்கு அத்தை?"
"அது எந்த கொரியர் ஆபீஸ்லேர்ந்து வந்ததுன்னு விசாரிச்சா... இந்த மாதிரி சுரேன் வாழ்க்கைக்கு கொள்ளி வைக்கிற கடங்காரனை கண்டுபிடிச்சிடலாம் தானே?"
"அடப்போம்மா! கண்டு பிடிச்சி என்ன பண்ணச் சொல்றே? அவன் ஒண்ணும் தப்பான தகவலை அனுப்பலையே... பிறகென்ன? உருப்படற வழியைப் பார்ப்போம். எந்திரி... சாப்பிட வா!"
சுரேந்திரன் தான் இயல்பாய் இருப்பது போல் காட்டிக் கொள்ள... பிரயத்தனப்பட்டான்.
பிள்ளை மனது கஷ்டப் படக் கூடாதென்று பார்வதியும் எழுந்து வந்தாள்.

❀ ❀ ❀ ❀ ❀

"தர்ஷிணி... இந்தா... இது உனக்கு. வர்ஷிணிக் குட்டி இந்தா... இது

உனக்கு! இந்தப் பணத்துல ரெண்டு பேரும் பொங்கலுக்கு பட்டுப்பாவாடை எடுத்துக் கணும்... சரியா?"

"தாங்க்ஸ் சித்தப்பா!" வாயெல்லாம் பல்லாக இருவரும் கோரஸாக சொல்ல...

"சித்தப்பாவுக்கு தாங்க்ஸா? உதைப்பேன்... ஓடுங்க!"

பார்வதி சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எதுக்கு தம்பி... பணமெல்லாம்? ஏற்கனவே இந்த வீட்டுக்காக எவ்வளவோ செய்யறீங்க?"

"யாருக்கு செய்யறான்? அவன் அண்ணன் பொண்ணுங்களுக்குதானே? செய்யட்டுமே! ஒவ்வொரு பண்டிகைக்கும் அவன்தானே புதுத்துணி எடுத்துத் தர்றான்? நீயேன் தடுக்கறே வத்சலா?" என்றாள் பார்வதி.

"தம்பி... தண்ணிமாதிரி செலவுப் பண்ணுது. அதுக்குதான் அத்தை சொல்றேன்! இந்த வீட்டுக்கு வரப்போற ரெண்டாவது மருமகள்தான்... இவர் கை ஓட்டையை அடைக்கணும்!" சிரித்தபடி அகன்றாள் வத்சலா.

"தர்ஷிணிக்கும், வர்ஷிணிக்கும் செலவுப் பண்றதை யார் வந்தும் தடுக்க முடியாது அண்ணி!" என்றான் சுரேந்திரன்.

❀ ❀ ❀ ❀ ❀

ஏதோ உள்ளுணர்வு உறுத்த ஷேர் ஆட்டோவில் அமர்ந்திருந்த விதுபாலா திரும்பிப் பார்த்தாள்.

அவன்... குருவின் நண்பன் பைக்கில் வந்துக் கொண்டிருந்தான்.

'இவன் எப்படி இங்கே? என்னை ஃபாலோ பண்ணி வருகிறானா? அல்லது யதேச்சையாய் நடக்கிறதா?' அவள் யோசித்து முடிப்பதற்குள் ஸ்டேஷன் வந்துவிட காசை கொடுத்துவிட்டு இறங்கி உள்ளேச் சென்றாள்.

கவுண்டரில் நின்று டிக்கெட் வாங்கி நகர்வதற்குள் பச்சைக் கொடி காட்டப்பட... ஓடிப்போய் பெண்கள் வகுப்பில் ஏறிக் கொண்டாள்.

கூட்டம் உள்ளே நகராமல் நிற்க... அவளும் வாசலிலேயே சாய்ந்து நின்றாள். அப்போதுதான் அவனை மீண்டும் பார்த்தாள்.

இவளைப் பார்த்து சிரித்தபடி ஓடி வந்து டைலாய் அடுத்த கம்பார்ட்மெண்டில் ாத்திக் கொண்டான்.

ாரிச்சலுற்றாள். வளைந்து, நெளிந்து ளேச் சென்று விட்டாள்.

கடற்கரை ஸ்டேஷன் வந்தபோது வேகமாய் திரும்பிப் பார்க்காமலே நடந்து வெளியேறினாள்.

அன்று முழுக்க பணிகளில் மனம் ஈடுபடவில்லை. 'வீடு திரும்பும்போது மீண்டும் பின் தொடருவானா?'

அவள் சந்தேகப்பட்டது போலவே ஆபீஸை விட்டு வெளியே வரும்போது... எதிரே இரண்டு கடை தள்ளி ஒரு பேன்ஸி ஸ்டோர் வாசலில் நின்றிருந்தான்.

தயக்கத்துடன் இவள் வாசலிலேயே நிற்க...

"இன்னைக்கு லேட்டா கிளம்பறீங்கப் போல..." என்ற குரலில் கலைந்தாள்.

சுரேந்திரன் சாவியை பாக்கெட்டில் போட்டபடி நின்றிருந்தான்.

"அ... ஆமாம்... கொஞ்சம் வொர்க் அதிகம். நீங்க சீக்கிரமா புறப்பட்டுட்டீங்க போல..."

"யெஸ்... லைட்டா பீவர். வாமிட்... பீலிங் வேற... அதான்... வாங்க... போகலாம்."

"உங்க பைக் எங்கே?"

"சர்வீஸுக்கு விட்டிருக்கேன். இன்னைக்கு ஸ்டேஷன் வரை நடைப்பயணம்தான்!"

'தாங்க் காட்' மனதிற்குள் நன்றி சொல்லிய படி அவனுடன் நடக்கையில் நிம்மதியாய் உணர்ந்தாள்.

அவனும் அவர்களை பின் தொடர்ந்தான்.

❀ ❀ ❀ ❀ ❀




இதுதான் முதல் முறை! அவளோடு இணைந்து நடக்கும்போது... இதுதான் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாத உணர்வு! மனதிலிருந்த வீட்டு சஞ்சலங்கள், மொட்டைக் கடித வலிகள் எல்லாம் அகன்று... ஹாவென்று இறக்கை விரித்து பறப்பது போன்றதொரு நிம்மதி. யாரோ அடித்த கல்லால்... ஒரு காலைத் தூக்கியபடி நொண்டி வந்த தெரு நாயை வாஞ்சையுடன் தடவிக் கொடுக்க வேண்டும்போல் மனிதாபிமான உணர்வு... பயத்தை மீறி பொங்கிப் புரண்டது.

"பிஸினஸ் எப்படிப் போகுது மேடம்?"

"கால் மீ விதுபாலா!"

"பேர் பெரிசா இருக்கே...!"

"அதுசரி...!" அவனை திரும்பிப் பார்த்து கிண்டலாய் சிரித்தாள். அவ்வப்போது பின்பக்கமும் பார்த்துக் கொண்டாள்.

அவனும் வேகமாகதான் வந்துக்



கொண்டிருந்தான்.

"விதுன்னு ஷார்ட்டா கூப்பிட்டா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே!"

"பாலான்னு கூப்பிட்டாலும் தப்பா எடுத்துக்க மாட்டேன்!"

"தாங்க்ஸ் விது! என்னப் படிச்சிருக்கீங்க?"

"அலோ சார்... கொஞ்சம் நகரு..." நெருங்கி வந்து சொன்னான் அவன்.

சுரேந்திரன் வியப்புடன் பார்த்து, "யாரு சார்... என்ன வேணும்?" என்றான்.

"நான் இதோ... இந்தப் பொண்ணுக்கிட்ட பேசணும்."

சுரேந்திரன் திகைக்க... விதுபாலா முகம் சிவந்தாள்.

"யூ... ராஸ்கல்... என்ன நினைச்சிட்டிருக்கே உன் மனசுல? மரியாதையா போய்டு... இல்லே..."

"யாருங்க இவரு?"

"தோ பார் சார்... இது எங்களுக்குள்ளே... நீ வராதே! என்ன நீ இப்படிப் பண்றே? காலைலேர்ந்து உனக்காக நாய்மாதிரி காத்திருந்தேன். தெரிஞ்சும் அவாய்டு குடுக்கறியே..."

அவனின் பேச்சும், நடைமுறையும், விதுபாலாவின் கோபமும் எளிதாக புரிய வைத்தது.

"சார்... யாரு நீங்க? எதுக்காக இப்படி நடுரோட்ல வந்து இன்டீசன்ட்டா பிஹேவ் பண்றீங்க?"

"யோவ்... நீ ஏன்யா நடுவால வந்து தலைய குடுக்கற..."

"டேய் மரியாதையாப் போய்டு..."

"ஏய்... என்னடி... வாடா போடான்னுப் பேசறே! மனசைத் தொட்டுட்டியேன்னு பின்னாடி வந்தா டேய்னு பேசிடுவியா... வருத்தப்படுவே!"

"என்னடாப் பண்ணுவே..." செருப்பைக் கழற்றி பளாரென அவனை அடித்தாள்.

"ஏய்... என்னையாடி அடிச்சே... உன்னை...!" அவள் கையைப் பற்ற முயற்சிக்க... ஓங்கி ஒரு குத்து விட்டான் சுரேந்திரன்.

"இந்த குலசேகரன் மேலேயே கைய வச்சுட்டியா? அவ்ளோ தைரியமா? வர்றேன்டா. உன்னை எப்படி கவனிக் கணுமோ அப்படி கவனிக்கறேன். ஆளை வச்சா அடிக்கறே? பார்த்துக்கறேன்டி!" ஆங்காரமாய் பேசி அகன்றான்.

வருவோரும், போவோரும் வேடிக்கைப் பார்க்க கூசிப் போனாள் விதுபாலா. கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது.

அவளின் அவஸ்தை புரிந்தவனாய், "ஆட்டோவுல போய்டலாமா?" என்றான்.

சரியெனத் தலையாட்டினாள்.

சற்று தூரத்தில் நின்றிருந்த ஆட்டோவின் அருகில் சென்றனர்.

'தம்' அடித்துக் கொண்டிருந்த டிரைவர், சிகரெட்டை நசுக்கிப் போட்டு விட்டு அருகில் ஓடி வந்தான்.

"என்ன சார் சவாரியா? எங்கேப் போகணும்?"

"பீச் ஸ்டேஷன்!"

"என்னது?" அவர்களை வியப்பாய் பார்த்தான்.

"தோ... பக்கத்திலேயே இருக்கு... நடந்தேப் போய்டலாமே!"

"கால்ல அடிபட்டிருக்கு சார்..."

"சரி... உக்காருங்க... முப்பது ரூபா குடுத்துடுங்க!" கூசாமல் கேட்டான்.

நியாயம் பேசமுடியாத சூழ்நிலை. மௌன மாய் ஏறி அமர்ந்தனர்.

"யாருங்க அவன்?" என்றான் சிறிதுநேரம் கழித்து.

"தெரியலே... பேரு கூட இப்ப அவன் சொல்லிதான் தெரியும். எங்க ஏரியாவுல இருக்கான். தினமும் ஃபாலோ பண்ணுவான். இன்னைக்குதான் ஆபீஸ் வரைக்கும் வந்திருக்கான்." அவள் முகத்தில் சர்க்கரைப் பொடிகளாய் வியர்வைத் துளிகள். பதற்ற மாய்... பயந்து போயிருக்கிறாள் என்பது புரிந்தது.

"பார்க்கவே ரவுடி மாதிரி இருக்கான். வீட்ல சொல்லி இருக்கலாமே!"

"பேரன்ட்ஸ் பயந்திடுவாங்க!"

மேற்கொண்டு அவள் குடும்பம் பற்றி பேசவோ, விசாரிக்கவோ சுரேந்திரனுக்கு தயக்கமாக இருந்தது.

"இஃப் யூ டோன்ட் மைன்ட்... நான் உங்களை உங்க ஏரியா வரை துணைக்கு வந்து விட்டுட்டுப் போகட்டுமா?"

"ஐயோ... எதுக்குங்க... பரவாயில்லை... நான் போய்க்கறேன்."

"அதுக்கில்லே... அவனும் உங்க ஏரியாங்கறீங்க... ஃபாலோ பண்ணி மறுபடி தொந்தரவு கொடுக்க மாட்டானா?"

"இல்லே சார்... அதுபத்தி யோசிக்கறேன். பட், இப்ப அவனால... எந்த டிஸ்டர்பன்ஸும் வராதுன்னு நினைக்கிறேன்... நான் பார்த்துக்கறேன்..." என்றாள் தோழமை

புன்னகையுடன்.

சுரேந்திரன் அவளைத் தனியே அனுப்ப மனமின்றி காமன் கம்பார்ட்மெண்டில் ஏறிக் கொண்டான். விதுபாலா லேடீஸ் கம்பார்ட்மெண்டில் ஏறிக் கொண்டாள்.

உட்கார இடம் கிடைத்தது. ஆனாலும் மனசுக்குள் பயவிதை முளைவிட்டு கிளை பரப்பியது.

'இன்று ஆபீஸ் வரை வந்தவன்... நாளை என்ன செய்வான்? வீட்டில் சொல்லலாமா? அம்மா ரொம்பவே பயந்துப் போவாள். பிரஷர் வேறு! பேசாமல் குருவிடம் சொல்லலாமா? அதுதான் சரி. இத்தனை நாளும் சொல்லாமல் விட்டதுதான்... அந்தப் பொறுக்கிக்கு தைரியத்தை வரவைத்து விட்டது.' தீர்மானித்தாள்.

வீடு போய் சேரும் வரை பயத்தில் அடிக்கடி பின்னே திரும்பிப் பார்த்தபடி நடந்தாள்.

வீட்டிற்குள் நுழையும்போதே... செல் போனில் பேசியபடி வாசலில் நின்றிருந்தாள் அண்ணி.

"நைட்டு வர லேட்டாகுமா? வரும்போது உங்களை ஓட்டல்லேர்ந்து சாப்பிடறதுக்கு கொத்து பரோட்டா வாங்கிட்டு வரச் சொல்லலாம்னு நினைச்சிருந்தேன்..."

".......?!"

"போப்பா... என் ஒருத்திக்கு என்னன்னு சமைக்கிறது? யாராவது பசங்ககிட்டே வாங்கி குடுத்து விட்ருங்க... ம்... சரி வச்சிடறேன்!"

விதுபாலாவுக்கு புரிந்து போனது. 'குரு வீட்டில் இல்லை. நாளைக்குதான் பேசணும்.'

"வாம்மா விது... இரு... டீ சூடு பண்ணிடறேன்" வெங்காயம் நறுக்கிக் கொண்டிருந்த பார்வதி மகளை பார்த்ததும் சமையலறைக்குள் சென்றாள்.

அம்மா டீ கொண்டு வருவதற்குள்... உடை மாற்றி, முகம், கை, கால் கழுவிக் கொண்டு வந்தாள்.

"என்னம்மா சமையல்... வெங்காயம் கட் பண்றே? உப்புமாவா?"

"இல்லே விது! அப்பாவுக்கும் எனக்கும் கோதுமை மாவும், ஓட்ஸூம் கலந்த சப்பாத்தி. உனக்கு மாவு இருக்கு... தோசை போட்டுத் தரேன்."

"அதென்னம்மா ஓட்ஸ் கலந்த சப்பாத்தி? நல்லா இருக்குமா?" ஆச்சரியமாய் கேட்டாள்.

"கூட வெங்காயம், இஞ்சி, கொத்துமல்லி, கருவேப்பிலை எல்லாம் கலந்து வெந்நீர் விட்டு பிசைஞ்சு உடனே சுட்டுடணும். சாப்பிடவும் டேஸ்ட்டா இருக்கும். சுகர், பிரஷருக்கும் ஆரோக்கியம்!"

"அப்ப எனக்கும் அதையே குடுத்துடு... தோசை வேணாம்"

"உனக்கு பிடிக்குமோ... பிடிக்காதோ?"

"உன் கையால எது செஞ்சாலும் எனக்குப் பிடிக்கும்..." என்றவளின் உள்ளம் இப்போது கொஞ்சம் இலகுவானது போல் இருந்தது.

மறுநாள் காலை அலுவலகம் கிளம்பும் போது அண்ணனின் அறைக்கதவு மூடியே இருக்க... புறப்பட்டு விட்டாள்.

அன்று... குலசேகரன் கண்களில் தென்படவே இல்லை.

ஆனால்... அலுவலகத்தில் அதிர்ச்சி காத்திருந்தது.

❀ ❀ ❀ ❀ ❀




மாடிப்படி ஏறும்போதே கவனித்தாள். சுரேந்திரனின் அலுவலகம் பூட்டிக் கிடந்தது.

'இன்னுமா வரவில்லை? அவனுக்குமுன் பணிபுரியும் மற்ற நபர்கள் வந்து விடுவார்களே! அவர்களில் ஒருவரிடம் சாவி இருக்கிறதே! என்னாச்சு?' குழப்பத்துடன் தன் அலுவலகத்திற்குள் சென்றாள்.

"அநியாயம்பா... எவன் பண்ணினதுன்னே தெரியலை. யார் பிரச்சினைக்கும் போக மாட்டாரே... ஒண்ணும் புரியலே..."

"பைக்ல வரும்போதே மடக்கி குத்திட்டு ஓடிப் போயிட்டிருக்கான். யாருன்னே தெரியலே..."

ஆபீஸில் ஆளாளுக்கு சலம்பிக் கொண்டிருக்க... குழப்பத்துடன்... எம்.டி. அறை நோக்கிச் சென்றாள் விதுபாலா. காலையில் முதல் வேலையாக அன்றைய அலுவல்களை நினைவூட்டுவது அவள் பணி.

"விது மேடம்... சார் இல்லே..." என்றார் பாரி.

"இன்னும் வரலையா?"

"வந்த உடனே ஹாஸ்பிடலுக்கு போயிட்டார்!"

"ஏன்... என்னாச்சு... உடம்பு சரியில்லையா?" பதற்றமாய் கேட்டாள்.

"அப்ப உங்களுக்கு விஷயமே தெரியாதா?"

".......?!"

"கீழே இருக்காரே சுரேந்திரன் சார்?! அவரை யாரோ ஒருத்தன் கத்தியால குத்திட்டானாம்!"

"ஐயோ...!" அலறி விட்டாள். உடம்பெங்கும் நடுக்கம் வெள்ளோட்டமாய் பாய்ந்தது.

"எ... எப்படி?"

"தெரியலே மேடம். வழக்கம்போல பீச்லேர்ந்து பைக்ல வந்துக்கிட்டிருந்தப்ப... நடராஜா ஓட்டல் பக்கத்து சந்துல... எவனோ ஒருத்தன் வழிமறிச்சு வயித்துல கத்தியை சொருகிட்டானாம்."

"இ... இப்ப... எப்படி இருக்கார்?"

"ப்ளட்... நிறைய லாஸ் ஆகியிருக்கு. அவரோட ப்ளட் குரூப் ரேர். நம்ம உசேன் சாருக்கும் அதே குரூப். காலையில வந்ததும் விஷயம் தெரிஞ்சு உடனே போயிட்டார்."

"எந்த ஹாஸ்பிடல்?"

"பக்கத்திலே... நேஷனல் ஹாஸ்பிடல் தான்!"

அடுத்த கணம்... ஒரே ஓட்டமாய் கீழிறங்கி ஆட்டோ பிடித்தாள்.

❀ ❀ ❀ ❀ ❀

இன்டன்சிவ் கேரிலிருந்து அப்போதுதான் வார்டுக்கு மாற்றியிருந்தார்கள்.

உசேன் ரத்தம் கொடுத்த களைப்புடன் விதுபாலாவை ஆச்சர்யமாய் ஏறிட்டார்.

"நீங்க... எப்படி இங்கே?"

"ஆபீஸ்ல சொன்னாங்க... இப்ப அவர் எப்படியிருக்கார் சார்!"

"பத்து தையல் போட்டிருக்கு. நல்ல வேளை... குடல் கிழிஞ்சிருக்கும்... அல்லா புண்ணியத்துல... தப்பிச்சிட்டார். நினைவோடதான் இருக்கார்... போய்ப் பாருங்க..." என்று போய்விட்டார்.

சுரேந்திரனின் அலுவலகப் பணியாளர்கள் கவலையுடன் அவனை சுற்றி நிற்க... அருகில் சென்றாள்.

வயிற்றில் அடர்த்தியாய் கட்டுப் போடப் பட்டிருக்க... சட்டையில்லாத உடம்புடன் களைப்புடன் படுத்திருந்தான். இவளைப் பார்த்ததும் கண்கள் மின்ன... சிறுமுறுவல் வெளிப்பட்டது.

"உங்க அண்ணனுக்கு போன்




பொதுவாக பாட்டிக்கு தாங்களது பேரன்களை விட பேத்திக்ளைத்தான் அதிகம் பிடிக்கும். இதற்கு அறிவியல் காரணங்கள் இருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர். லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இதுபற்றி ஒரு ஆய்வு நடத்தினார்கள். ஒரு பெண்ணுக்கு மகன் மூலம் பேரன், பேத்திகள் பிறக்கும் போது அந்த பெண்ணின் குரோமசோம்களின் ஒரு பகுதி பேரன், பேத்திக்கு செல்கிறது.

அதாவது பெண்ணுடைய 'ஒய்' குரோமசோமில் 31 சதவீதம் பேத்திக்கும், 23 சதவீதம் பேரனுக்கும் செல்கிறது. பேரனுக்கு செல்லும் குரோமசோமின் அளவை விட பேத்திக்கு செல்லும் குரோமசோம் அளவு அதிகமாக இருக்கிறது.

எனவேதான் பேரனை விட பேத்தி மீது பாட்டிக்கு பாசம் அதிகமாக உள்ளது. இந்த குரோமசோமால் பேத்தி உடலில் இருந்து வரும் ஒருவித வாசனை பாட்டியை ஒத்து இருக்கிறது. அதேபோல் பேத்திகளின் உடல் ரீதியான நடவடிக்கைகளும் பாட்டியை ஒத்து இருக்கிறது. இதனால் பேத்தி மீது பாட்டிக்கு தன்னை அறியாமலேயே ஒருவித ஈர்ப்பு ஏற்படுகிறது. அதே போல் பேத்திக்கும் பாட்டி மீது ஈர்ப்பு ஏற்படுகிறது.

அதே நேரத்தில் மகள் மூலம் பிறக்கும் பேரன், பேத்திகளுக்கு பாட்டியிடம் இருந்து தலா 25 சதவீத குரோமசோம் செல்கிறது. எனவே மகள் வயிற்று பேரன்-பேத்திகள் மீது பாட்டிக்கு சமஅளவில் மட்டுமே பாசம் இருக்கும். ரத்த உறவுகளில் ஒருவர் மீது ஒருவர் காட்டும் பாசத்துக்கு மரபு அணுவே காரணம் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

-பாலாஜி.

பண்ணிட்டேன் சார்... வந்துக்கிட்டிருக்காராம்."

"வீட்டுக்கு யாரும் போன் பண்ணிடலையே!"

"இல்லே சார்... லேடீஸ் பயந்துடுவாங்கன்னு... சொல்லலே..."

"நல்லதாப் போச்சு... நீங்க எல்லாரும் ஆபீஸ்க்கு போங்க..."

"எப்படி சார்... உங்களை தனியா விட்டுட்டு..."

"வீட்லேர்ந்து வந்துடுவாங்க... நீங்க போங்க..."

அனைவரும் அகன்ற பிறகு... விதுபாலா அருகில் வந்தாள்.

"எ... எப்படி... இது?"

"தெரியலே விது... எவனோ திடீர்னு வழிமறிச்சு..."

"யாருன்னு தெரியலியா?"

"ம்ஹூம்... நான் பார்த்ததே இல்லை!"

"எனக்குப் புரிஞ்சு போச்சு!"

"......?!"

"இது அவனோட... அந்த குலசேகரனோட வேலைதான்... ஆளை வச்சு..." குரல் அழுகையில் பிசறியது.

"ஸ்ஸ்... மெதுவாப் பேசுங்க..."

'ஏன்?' என்பதுபோல் நெற்றி சுருக்கினாள்.

"எனக்கும் தெரியும் விது? 'என்னடா... யார் லைன்ல க்ராஸ் பண்றே'ன்னு சொல்லிட்டுதான் குத்தினான். வெளியில யாருக்கும் தெரிய வேண்டாம்னுதான் சொல்லலை. இல்லேன்னா... இது போலீஸ் கேஸா பதிவாகிடும். தெரிஞ்ச டாக்டர்ங்கறதால... ட்ரீட்மெண்ட் குடுத்தார்!" சன்னமாகப் பேசினான்.

"போலீஸ்ல ஏன் கம்ப்ளைண்ட் பண்ணலே?"

"உங்களுக்காகதான்!"

"எனக்காகவா?"

"ம்... உங்க பேரை எல்லாரும் மெல்ல ஆரம்பிச்சிடுவாங்க. அது உங்களதிர்காலத்துக்கு நல்லதல்ல. விட்ருங்க..."

அவளுக்கு மேற்கொண்டு என்ன பேசுவதென்றே புரியவில்லை. பலவித உணர்ச்சிக் குவியல்கள் அவளை அழுத்த... கண்கள் பொங்கியது.

"என்னால்தானே...?"

"ப்ச்... என்னங்க இது? முதல்ல கண்ணைத் துடைங்க. என்னாகிப் போச்சு? நல்லாதானே இருக்கேன்? இதைப் பத்தி எதுவும் இனிப் பேச வேண்டாம். நீங்க ஆபீஸ்க்கு கிளம்புங்க."

"நான் லீவுப் போட்டுட்டு உங்க கூடவே இருக்கேன்."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாங்க. எங்க வீட்லேர்ந்து அம்மா வந்துடுவாங்க. அவங்க பார்த்துப்பாங்க."

"சரி... அவங்கள்லாம் வர்ற வரைக்கும்... நான் இருக்கேன்."

அவன் மறுக்கவில்லை.

சோர்வும், வலியும், மிச்சமிருந்த மயக்க மருந்தின் வீர்யமும்... அவனை கண்ணயரச் செய்தன.

ஒரு மணிநேரம் கடந்த பிறகு... கோபாலும், பார்வதியும், வத்சலாவும் கண்களில் நிறைந்த பயத்துடன் அரக்க பரக்க வந்தனர்.

"ஐயோ... சுரேந்திரா... என்னாச்சுப்பா... காலையிலே நல்லாப் புறப்பட்டியே... ஈ எறும்புக்குக்கூட கெட்டது நினைக்க மாட்டியே... உன்னை யாருப்பா இப்படி குத்தி படுக்க வச்சிருக்காங்க..." பார்வதி ஹாஸ்பிடல் என்றும் பாராது கதறி விட்டாள்.

கண் திறந்த சுரேந்திரன், "அழாதேம்மா... டாக்டர் திட்டுவார்... எனக்கொன்னுமில்லே... நான் நல்லாதான் இருக்கேன். அண்ணா... நீங்களாவது சொல்லுங்க."

"என்னன்னு சொல்றது? போன் வந்ததும் என் உயிர் என்கிட்ட இல்லே. யாரவன்... எதுக்காக உன்னை குத்தினான்?"

"தெரியலேண்ணா... அவனை நான் முன்னபின்ன பார்த்ததுக் கூட இல்லே. அவன் யாரையோ நினைச்சு தப்பா என்னை தாக்கியிருக்கான்னு நினைக்கிறேன்."

"போலீஸ் என்ன சொன்னாங்க?"

"அண்ணா... நான் போலீஸ்ல கம்ப்ளைண்ட் பண்ண வேண்டாம்னு சொல்லிட்டேன்!"

"ஏன்?" அதிர்ச்சியுடன் கேட்டான்.

"எதுக்குண்ணா? எனக்கு யாரும் விரோதின்னு கிடையாது. கம்ப்ளைண்ட் பண்ணினா, கேஸ், அது இதுன்னு அலையணும். அதுக்கெல்லாம் ஏது நேரம்?"

"அதுக்காக?"

"விடுங்கண்ணா... இதைப்பத்தி அப்புறம் பேசிக்கலாம். என்ன அண்ணி... நீங்க அமைதியா இருக்கீங்க?"

"உங்களைப் பார்த்து உறைஞ்சு போயிட்டேன் தம்பி. எங்க வீட்டு குலவிளக்கு... உங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தா... ஐயோ...?!" வத்சலாவிற்கு விம்மலை வெடித்துக் கொண்டு புறப்பட்டது அழுகை.

"அண்ணி... ப்ளீஸ்... எனக்கொன்னுமில்லே... அழாதீங்க...!"

அந்த சூழ்நிலையில் விதுபாலா மேலும் அங்கு இருந்து சங்கடப்படுத்த விரும்பாமல், "சார்... நான் வர்றேன்" என்றாள்.

"நேரமாச்சு புறப்படுங்க!"

"யாருப்பா இவங்க?" என்றாள் அம்மா.

வத்சலாவும் அப்போதுதான் அவளை திரும்பிப் பார்த்தாள்.

'யாரிது?'

"என் ஆபீஸ் பில்டிங்ல... இன்னொரு ஆபீஸ்ல வொர்க் பண்றாங்க... பேரு விதுபாலா. நீங்கள்லாம் வர்ற வரைக்கும் துணைக்கு இருக்கேன்னு பார்த்துக்கிட்டாங்க!"

"அப்படியா... ரொம்ப நன்றிம்மா!"

"பரவாயில்லேங்க... வர்றேன் சார்... டேக் கேர்!"

❀ ❀ ❀ ❀ ❀

**போ**கவர சிரமம் என்று சுரேந்திரனை டிஸ்சார்ஜ் செய்து தாம்பரத்திலுள்ள தனியார் ஹாஸ்பிடலில் சேர்த்தனர்.

பத்து நாட்கள் சிகிச்சை பெற வேண்டியிருந்தது. அந்த பத்து நாட்களும் விதுபாலா தினமும் அலுவலகம் முடிந்து அவனை ஹாஸ்பிடல் சென்று பார்த்து விட்டு வந்தாள். வீட்டில், ஆபீஸில் வேலைபளு... என்று தாமதத்திற்கு காரணம் சொன்னாள்.

சுரேந்திரன் சொல்லியும் அவள் கேட்கவில்லை.

வத்சலா வியப்புடன் விதுபாலாவை நோட்டமிட்டு வந்தாள்.

❀ ❀ ❀ ❀ ❀




**சு**ந்தரி சாதம் வைத்து... சூடாய் மணக்க, மணக்க கத்தரிக்காய் காரக்குழம்பை ஊற்றினாள்.

வாசனையில் மதி மயங்கிய விதுபாலாவின் கண்கள் அம்மாவின் கையை கவனித்தது.

விரல்களில் பிளாஸ்திரி.

"என்னம்மா காயம்?" புரிந்தாலும் கேட்டாள்.

"ப்ச்..."

"காய்கறி நறுக்கும்போது வெட்டிக்கிச்சா? நான் சொன்னாலும் பிடிவாதமா அந்த வேலைக்கு போயே தீருவேன்னு நிக்கறே! ஏம்மா... என் சம்பாத்தியம் நமக்கு தாராளமா போதுமே!"

"வயித்துப்பாட்டுக்கு போதும்தான். என் பொண்ணு வாழ்க்கைப்பாட்டத்துக்கும் பணம் வேணுமே...!"

"ஓரளவு சேமிப்பு இருக்கேம்மா..."

"உனக்குப் புரியாது... பேசாம சாப்பிடு!"

"கண்ணெல்லாம் வீங்கியிருக்கு. அழுதியாம்மா?"

"சாப்பிடு... அப்புறம் பேசலாம்!" முகத்தின் விறைப்புக்குள் கோபம் அமர்ந்திருப்பது தெரிந்தது.

அப்பாவின் முகம்கூட சரியில்லை. எதைப்பற்றியோ யோசித்து, வருத்தப்பட்டு, வழக்கமான சிறு பேச்சுக்கூட மிஸ்ஸிங்.

பலதையும் நினைத்து... அவசர அவசரமாய் சாப்பிட்டு முடித்தாள்.

"நீ இன்னும் சாப்பிடலையேம்மா. அப்பாக்கூட பசியில்லே... அப்புறமா சாப்பிட்டுக்கறேன்னுட்டார். என்ன விஷயம்மா... ஏதாவது பிரச்சினையா?"

"நீ ஏன்டி என் வயித்துல வந்துப் பிறந்தே?" சுந்தரி உடைந்து அழுதாள்.

"அ..ம்...மா!"

"என்னடி குறை உனக்கு? கோவில் விக்ரகம் மாதிரி இருக்கே. நல்லா படிச்சு வேலைக்குப் போய் சம்பாதிக்கறே! ஆனா, பணமில்லாதது ஒரு குறையாப் போச்சா... அந்த கடங்காரனுக்கு!"

"எனக்கு எதுவுமே புரியலே. முதல்ல அழறதை நிறுத்து."

சுந்தரியால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.

பரிதவித்துப் போனாள் விதுபாலா.

"அம்மா! அப்பா... என்னாச்சுப்பா... நீங்களாவது சொல்லுங்க!"

"அவரால மட்டும் என்னடி பேச முடியும்? காலைல நீ ஆபீஸ் புறப்பட்டதும் குரு வந்தான்."

"அண்ணனா?"

"அவனா அண்ணன்? எனக்கு பிள்ளைன்னு சொல்லிக்கவே கசக்குதுடி. எவனோ குலசேகரனாம். இந்த கடங்காரனுக்கு கூட்டாளியாம். உன்னைப் பார்த்திருக்கானாம். பிடிச்சு போச்சாம். இவன்கிட்டே பொண்ணு கேட்டானாம். நல்லா சம்பாதிக்கிறவன் சந்தோஷமா வச்சுப்பான்... கட்டிக்குடுன்னு ஆர்டர் போடறான்."

விதுபாலா தொண்டைக்குள் ஈட்டி இறங்கின வலியில் விக்கித்துப் போனாள்.

"உங்கப்பாவுக்கும் எனக்கும் தாங்கலே. சண்டையே வந்துடுச்சு. கூடப் பொறந்தவன்ற பாசமேயில்லாம பேசறான்டி. உங்க தகுதிக்கு குலசேகரனே அதிகம். அவன் எதையும் எதிர்பார்க்கலே... நீங்க மறுத்தாலும் அவளை தூக்கிட்டுப் போய் கல்யாணம் பண்ணிப்பான்னு மிரட்டறான்."

"நான் பார்த்துக்கறேம்மா... அவன் சொன்னா ஆச்சா? இதுக்கேன் நீங்க ரெண்டு பேரும் உங்களை நீங்களே கஷ்டப்படுத்திக்கறீங்க? இன்னைக்கு பெண்களை பாதுகாக்க எத்தனையோ சட்டங்கள் வந்தாச்சு. யாரும் யாரையும் பணிய வச்சிடமுடியாது... அன்பைத் தவிர வாப்பா... வாம்மா... உக்காருங்க... நான் பரிமாறறேன்!" அவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டு வர முயன்றாள்.

❀ ❀ ❀ ❀ ❀

**பா**ர்வதி ஃபிளாஸ்கில் சூடான காபியை நிரப்பி பிளாஸ்டிக் கூடைக்குள் வைத்தாள்.

பூப்போன்ற சூடான இட்லிகளை சின்ன ஹாட்பேகில் வைத்து மூடிய வத்சலா, "இந்த சின்ன டப்பாவுல புதினா சட்னி வச்சிருக்கேன் அத்தை" என்றாள்.

".......?!" கவனம் சிதறியிருந்தது பார்வதிக்கு.

"அத்தை... அத்தை உங்களைத்தான்!"

"ஆங்... எ... என்ன?"

"இட்லி, சட்னியெல்லாம் வச்சிட்டேன்!"

"ஆமாமா... சுரேனுக்கு புதினா சட்னின்னா உசிருல்ல. என் புள்ளை... இன்னைக்கு ஹாஸ்பிடல்லேர்ந்து வீட்டுக்கு வர்றான். ஒரு பூசணிக்காயை வாங்கி வச்சிடு வத்சலா. வந்ததும் திருஷ்டி சுத்தி உடைக்கணும்."

"சரி அத்தை. உங்க பெரிய பிள்ளைக்கும் டிபன் வச்சிடவா?"

"வேணாம்மா... நான் போனதும் அவனை அனுப்பி வச்சிடறேன். வந்து குளிச்சி, சாப்பிட்டு பேங்க்குக்கு போகணும். ஹாஸ்பிடலுக்கு பில்லு கட்டணுமே! சுரேன் செக்கு குடுத்திருக்கான். பணம் எடுக்கணுமாம்."

".....?!"

"அந்தப் பொண்ணைப் பத்தி என்ன நினைக்கிறே வத்சலா?"

பிளாஸ்டிக் கூடையின் மீது சின்ன லஞ்ச் துணியை போர்த்தி மூடியவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"எந்தப் பொண்ணு?"

"அதான்... விதுபாலா! தெனமும் மெனக்கெட்டு நம்ம சுரேனை ஹாஸ்பிடலுக்கு வந்து பார்த்துட்டுப் போகுதே... அவளைச் சொல்றேன்."

"அவளுக்கென்ன?"

"இல்லே உன் மனசுக்கு எப்படிப் படுது?"

"தம்பியே சொல்லுச்சே... ஒரே பில்டிங்ல வேலை பார்க்கிறப் பொண்ணுன்னு. சிநேகிதத்தோட வந்துப் பார்க்குது."

"இல்லே வத்சலா. எனக்கென்னவோ ரெண்டு பேரும் காதலிக்கிறாங்களோன்னு தோணுது."

"சேச்சே... இப்பல்லாம் இந்த மாதிரி பழகறது சகஜம் அத்தை. படிச்சவங்க... நாகரீகமா பழகறாங்க."

"அதுக்காக தினமுமா வந்துப் பார்ப்பா... என்னதான் சிநேகமா இருந்தாலும்?! சுரேன் கூட அவ வந்ததும் முகமே மலர்ந்துப் போகுது."

"எனக்கு அப்படித் தோணலே!"

"சரி... அப்படி இல்லேன்னாலும்... பொண்ணு அழகா, பாந்தமா, அமைதியா இருக்கா. அவளையே நம்ம சுரேனுக்கு முடிச்சா என்ன?"

"அ... ம்... நல்ல விஷயம்தான். எதுக்கும் தம்பிகிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு செய்ங்க."

"பின்னே... அவனைக் கேக்காம செய்ய முடியுமா? வீட்டுக்கு வரட்டும்."

"அதுக்காக தம்பி வந்த உடனே இதுபத்தி பேசிடாதீங்க. கொஞ்சம் ஆறப்போட்டு பேசுங்க."

"புரியுது... கொஞ்சநாள் போகட்டும். நான் வர்றேம்மா. மதிய சாப்பாட்டுக்கு நெஞ்சு எலும்பு வாங்கி சூப் வச்சிடு. மண்ணீரல் வறுவல், கொஞ்சம் ரசம் பண்ணிடு."

"ம்..."

❀ ❀ ❀ ❀ ❀

**வா**சல்வரை மகளின் கூடவே வந்தாள் சுந்தரி.

"பார்த்துப்போம்மா..."

"சரிம்மா!"

"இன்னைக்கும் வர லேட்டாகுமா?"

"இல்லேம்மா... சீக்கிரம் வந்துடுவேன்" என்றாள் விதுபாலா.

"இரு... மழை வர்றா மாதிரி இருக்கு. குடை எடுத்துட்டு வர்றேன்."

"வேணாம்மா. நான் ஆபீஸ் போய் சேர்ற வரைக்கும் வராது. ஆபீஸ்ல ஒரு குடை இருக்கு. தேவைப்பட்டா யூஸ் பண்ணிக்கறேன்."

"விது..."

"என்னம்மா?"

சுந்தரியின் முகத்தில் ஆயிரம் கவலை ரேகைகள். அம்மாவை பரிதாபமாய் பார்த்தாள்.

"வித்யாவை நான் என்னைக்கோ மன்னிச்சிட்டேன். நேத்து உங்கப்பாக்கூட அவளை நினைச்சு வருத்தப்பட்டு பேசினார் தெரியுமா?"

"நிஜமாவா?"

"பெத்தவங்க கோபம் அர்த்தமில்லாதது விது. எங்களுக்கு நல்ல வாழ்க்கையை உண்டாக்கித் தர பவிசு இல்லேன்னாலும்... கோபமும், வீம்புமாய் அவளை விரட்டியடிச்சோம். இப்ப உனக்காக ஓரளவு சேமிப்பு இருக்கு. இந்தப் பாழாப் போனவனால எந்த வரனும் இந்த வீடு தேடி வரமாட்டேங்குது. அந்தப் பொண்ணு யாரையாவது நேசிச்சா தைரியமா சொல்லச் சொல்லு முடிச்சிடலாம். முதல்ல இந்த ஜெயிலைவிட்டு என் பொண்ணை அனுப்பணும்னார் அப்பா. அப்படி ஏதாவது பழக்கமிருந்தா..." அம்மா தயங்கி, தடுமாறி, குரு அறை பூட்டியிருக்கும் தைரியத்தில் பேசினாள்.

ஏனோ... சட்டென சுரேந்திரன் முகம் உள்ளத்திற்குள் எட்டிப் பார்த்தது.

பெத்தவளே... தன் மகளிடம் இப்படியொரு கோரிக்கையை வைக்கும் அவலம் தன் தாய்க்கு நேரிட்டதே என்ற வேதனையும், பரிவுமாய்... அம்மாவின் மென்மை அற்றுப் போன கரத்தை பற்றிக் கொண்டாள்.

"நீ நினைக்கிற மாதிரி எதுவும் இல்லேம்மா. ஏன் நீயும் அப்பாவும் கண்டபடி சிந்திக்கறீங்க? யாரும் நம்மளை ஒண்ணும் பண்ணிட முடியாது. சரியா? நான் வர்றேம்மா!"

சின்ன சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு தெருவில் இறங்கி நடந்தாள்.

❀ ❀ ❀ ❀ ❀

**தி**வனாகு. உலகின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்று. நாலாயிரம் மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கும் நகரம் இது. உலகத்தில் மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள நகரம் இதுவொன்றேயாகும். தென் அமெரிக்க நாடான பொலிவியாவின் தலைநகரம் 'லாபாஸி'ற்கு அருகில் டிடிகாகா ஏரிக்கு பக்கத்தில் இந்நகரம் உள்ளது.

இந்நகரில் வாழ்ந்த திவனாகு மக்களைப் பற்றிய எழுத்துப்பூர்வமான சான்றுகள் எதுவும் இல்லை. கி.பி.1000 வரை இவர்கள் இந்நகரில் வாழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவர்களைப் பற்றிய விவரங்கள் கிடைக்கா விட்டாலும், இவர்கள் நிர்மானித்த நகரமும், இப்போது எஞ்சி நிற்கும் கட்டிடங்களும், எழில் மிகு சிற்பங்களும், தூண்களும், சிதைந்த பிரமிட்களும் திவனாகு மக்களின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

10 மைல் தொலைவில் கல்குவாரிகள் இல்லாத போது 100 டன் எடையுள்ள தூண்களை எப்படி நிற்க வைத்தார்கள் என்பதை நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. சூரியனை திவனாகு மக்கள் கடவுளாக வழிபட்டிருக்கிறார்கள். 15-ம் நூற்றாண்டு வரை வெளி உலகுடன் தொடர்பு இல்லாமல் இருந்த இந்நகரம், ஸ்பானீஸ் படையெடுப்புகளாலும், புதையல் தேடுபவர்களாலும் சிதைக்கப்பட்டது. இந்நகரை இப்போது பொலிவியா அரசு பாதுகாத்து வருகிறது.

- கார்த்திக்.






**போ**கிற வழியில் அவன் எதிர்பட்டான். அன்றைய சம்பவத்திற்கு பிறகு இன்றுதான் பார்க்கிறாள். அவன் முகத்தில் திமிர்த்தனமான சிரிப்பு.

'நீ என்ன தடுத்தாலும்... நீ எனக்குத்தான்டி.' என்று சொல்லாமல் சொல்லியது முகம்.

சலனமின்றி... தன் கோபத்தை அடக்கிக் கொண்டு கடந்தாள். குலசேகரன் பின் தொடரவில்லை.

❋ ❋ ❋ ❋ ❋

சுரேந்திரன் வரவில்லை என்றாலும் ஆபீஸை பணிபுரிபவர்கள் அருமையாக கவனித்துக் கொண்டனர்.

ஹாஸ்பிடலில் இருந்தவரை... தினமும் வேலை முடிந்து தாம்பரம் சென்று பார்த்துவிட்டு வருவாள். அவன் டிஸ்சார்ஜ் ஆனபின்பு... வீட்டிற்கு சென்று பார்க்கும் தைரியம் இல்லை. எப்படி எடுத்துக் கொள்வார்களோ என பயந்தாள்.

ஆனால்... இப்போது எண்ணும்போது ஒரு சின்ன திகில் பரவியது.

'தினமும் ஹாஸ்பிடல் சென்று பார்த்ததை மட்டும் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டார்களா என்ன?'

'இது ஏன் அப்போது தோணவில்லை? எப்படியோ... அவர் நல்லபடி தேறி வந்ததே போதும்.'

அலுவலகம் வரும்போதும் சரி, ஹாஸ்பிடலில் இருந்தபோதும் சரி... தினசரி ஓரிரு முறையாவது அவனைப் பார்த்து விடும் சந்தர்ப்பம் அமைந்தது.

டிஸ்சார்ஜ் ஆனபின்பு இந்த ஒரு வார காலமாய் அவனை பார்க்காத போதுதான்... அவள் தன்னையே உணர முடிந்தது.

புல் பூண்டுகளற்ற பாலைவனத்தில் அவள் மட்டுமே வசிப்பது போன்ற வெறுமை. பார்க்கிற வேலை கடும் சுமையாய் தெரிந்தது. முண்டியடித்து ஏறிய ரெயில் பயணிகளின் மீது ஏகமாய் கோபம் வந்தது. மொத்தத்தில் வாழ்க்கையே பிடிப்பற்று சலிப்படைந்தாள்.

சுரேந்திரன் வழக்கமாக அமரும் சேரில் சோமசுந்தரம் அமர்ந்திருப்பதை பார்த்தபோது... அவனின் இளம் வழுக்கையில் ஓங்கி குட்டவேண்டும்போல் ஆத்திரம் வர... தன்னை மீறி அவளுக்கு சிரிப்பு வந்தது.

'ஏன் இப்படியாகி விட்டேன்? உண்மையில் இதற்கு பெயர்தான் என்ன?'

வீட்டில் சுரேந்திரன் நிலைமை வேறுமாதிரி இருந்தது.

காலிங்பெல் அலறிய போதெல்லாம் 'விதுபாலாவாக இருப்பாளோ?' என்று பரபரத்து ஏமாந்த போதெல்லாம், தாடையில் வளர்ச்சி ஷேவ் பண்ணாத தாடியின் வழக்கத்தை விட வேகமாய் இருந்தது.

வேகமாய் ஆறாத காயத்தின் மீது ஓங்கி மறுபடி கத்தியை எடுத்து செருகிக் கொண்டால் என்ன என்று தோன்றியது.

சமீபகாலமாய்தான் என்றாலும்... ஓரளவு சகஜமாய் பேசத் தொடங்கி விட்ட நட்பு அவர்களுடையது. ஆனால், அவளிடம் செல் போன் இருக்கிறதா என்ற தகவல்கூட அறிந்துக் கொள்ளாமல் இருந்தது முட்டாள்தனம் அல்லவா? அட்லீஸ்ட் அவள் ஆபீஸ் போன் நம்பரையாவது கேட்டறிந்திருக்கலாம். இப்போதும் ஒண்ணும் கெட்டுவிடவில்லை. உசேன் ஆபீஸ் சோமசுந்தரம் மூலமாக நம்பரை தெரிந்துக் கொள்ளலாம். ஆனால், அது வலிய... எல்லார் வாயையும் திறந்து... பிடிபிடியாய் அவலை அள்ளிப் போட்ட கதையாக அல்லவா ஆகிவிடும்?!

மழையில் பூத்த காளானாய்... அவன் உடம்பின் ஒவ்வொரு செல்லிலும் விதுபாலாவை பற்றிய நினைவுகள் முளைத்துக் கொண்டே இருந்தன.

அவளைப் பார்க்காமல் வீட்டிலேயே வகை வகையாய் சாப்பிட்டு ஓய்வாய் அவஸ்தைப்பட இனியும் முடியாது என்ற நிலை அவனை உந்தித் தள்ளியபோது... அம்மா கத்த... கத்த... அலுவலகம் கிளம்பி விட்டான் மறுநாள்.

ரெயில் நிலையத்திலேயே சல்லடையாய் தேடி களைத்துப் போயினக் கண்கள்.

அலுவலகத்திலோ... எப்படியும் அவன் இருப்பிடம் தாண்டிதானே சென்றாக வேண்டும் என்ற பொறுமையின்றி பால் கனியிலேயே... யாருக்கோ போன் பண்ணுவது போன்ற பாவனையில் காத்திருந்தான்.

அவனை வெகுநேரம் காக்க வைக்கவில்லை விதுபாலா.

இவனைப் பார்த்ததும் முகத்தில் வெள்ளமாய் பொங்கி வந்தன ஆச்சர்யமும், சந்தோஷமும்.

"எ... எப்படி இருக்கீங்க?"

"ம்..." என்றான் பரவசமாய்.

"உங்க வீட்டிற்கும் வரணும்னு இருந்தேன். தயக்கமாயிருந்துச்சு... அதான்."



"பரவாயில்லீங்க."

"பாருங்க... உங்க செல்நம்பரை வாங்கி வச்சுக்காம இருந்துட்டேன்."

"இப்ப குறிச்சுக்குங்களேன். உங்ககிட்டே மொபைல் இருக்கா?"

"ம்... உசேன் சார் ஆபீஸ்ல வொர்க் பண்ற அத்தனை பேருக்கும் குடுத்திருக்கார். நம்பர் சொல்லுங்க."

"குடுங்க... அதிலிருந்து எனக்கு மிஸ்டு கால் குடுத்திடறேன்."

அவள் கொடுத்த செல்லை வாங்குகையில் ஒருவித கதகதப்பை உணர்ந்தான்... அந்த இயந்திரத்தின் மூலம் கூட!

"முழுக்க குணமாய்டுச்சா?"

"ம்... ரொம்ப லேசாதான் வலி இருக்கு."

அந்த பதிலுக்கே விதுபாலாவின் முகம் சோர்ந்ததைப் பார்த்து... உற்சாகமானான்.

அடுத்த கணமே... அவனின் கடந்த காலமும் மொட்டைக் கடிதமும் நினைவிற்கு வர... காதலை அடைத்து வைத்திருந்த பலூன் பட்டென உடைந்துப் போனது.

❋ ❋ ❋ ❋ ❋

**மே**லும் ஒரு வாரம் கடந்தது. குரு. குலசேகரன் விதுபாலா திருமண விஷயமாய் மன உளைச்சலை ஏற்படுத்திக் கொண்டே இருந்தான். அதைப் பற்றி சுரேந்திரனிடம் சொல்லி 'அழவேண்டும்போல் இருந்தது. அச்செயல்... தன் மனதில் அவனுக்குள்ள இடத்தை வெளிச்சம் போட்டு காட்டி விடுமோ என்று பயந்து தவிர்த்தாள்.

அன்று...

பீச் ஸ்டேஷனிலிருந்து அலுவலகம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது... அவளின் மொபைல் போன் அலறியது.

'புது நம்பர். அதுவும் அவள் குடியிருக்கும் ஏரியா நம்பர்.'

எடுத்துப் பேசினாள்.

பதற்றமாய் ஒரு பெண்ணின் குரல்.

"ஹலோ..."

"ஹலோ... யாரது விதுபாலாவா?"

"ஆமாங்க... நீங்க..."

"நான் உங்க எதிர்வீட்ல இருக்கிற பத்மா பேசறேன்" என்றபடி தொடர்ந்து அவள் சொன்ன தகவலைக் கேட்டு ஆடிப்போய் விட்டாள்.

"எ... எ...ன்..ன?"

"ஆமாம்மா... சீக்கிரம் கிளம்பி வா!"

விஷயம் இதுதான்!

குருவைத் தேடி ஏகப்பட்ட போலீசார் வீட்டிற்கு வந்திருக்கின்றனர். இதுநாள் வரை அவன் சாராய வியாபாரம்தான் செய்துக் கொண்டிருக்கிறான் என்று நினைத்ததற்கு மாறாக, பிரவுன் சுகரும், கஞ்சாவும் வெளிமாநிலங்களிலிருந்து வரவைத்து கல்லூரி மாணவர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளான். இதில் அவன் கூட்டாளி குலசேகரன் கையும் பொருளுமாக சரக்குடன் போலீசில் பிடிபட, குருவை தூக்கிச் செல்ல பெரிய பட்டாளமே வந்திருக்கிறது. விஷயம் அறிந்த குரு மனைவியுடன் எஸ்கேப்பாகிவிட, அவனைப் பிடிப்பதற்காக வீட்டிலிருந்த அம்மாவையும், அப்பாவையும் போலீசார் இழுத்துச் சென்றிருக்கின்றனர். அதுவும் சரிவர நடக்க முடியாத பாண்டியனை அடித்து தள்ளி விட்டதில் ரோட்டில் கீழே விழுந்து விட்டாராம். சுந்தரியோ பயத்தில் வெடவெடவென நடுங்கினாளாம்.

விதுபாலாவின் உடம்பு நடுங்கியது. உஷ்ணம் ஏறியது.

'ஐயோ... அம்மா... அப்பா... என்ன செய்யப் போகிறேன்? போலீஸ் ஸ்டேஷன் எந்த திசையில் இருக்கிறது என்று கூட தெரியாத உங்களையா நடுத்தெருவில் அடித்து இழுத்துப் போனார்கள்? கவுரவமாய் உழைத்து சாப்பிடும் நமக்கா இந்தக் கொடுமை? எப்பேர்ப்பட்ட அவமானம்? எப்படி தாங்கிக் கொண்டீர்கள் இருவரும்?'

சாலை என்றும் பாராது அழுதாள். நெஞ்சு சுனாமி அலையாய் பொங்க... கண்களில் உப்பு நீர் கொட்டியது.

'அடுத்து என்ன செய்வது?'

சட்டென கண்முன் வந்து நின்றது சுரேந்திரன்தான்!

❋ ❋ ❋ ❋




**அ**தன்பின் நிகழ்வுகள் நல்லதும் கெட்டதுமாய் மாறி, மாறி நடந்தன.

சுரேந்திரனை வரவழைத்து விஷயத்தை சொன்னபோது, அவனே அரண்டுதான் போனான்.

விதுபாலாவின் இளம் தோள்களில் இத்தனை சோகங்களா சுமையாக்கப்பட்டிருந்தன என நினைக்கையில் அவனுக்குள்ளும் வேதனைக் குமிழ்கள் வெடித்தன.

அடிதடி கேஸ் என்றால் எளிதாயிருக்கும்.

கஞ்சா கேஸ் எனும்போது சிரமம் என்பதை உணர்ந்தான். தனக்குத் தெரிந்த வக்கீலை அழைத்துக் கொண்டு விதுபாலாவுடன் போலீஸ் ஸ்டேஷன் சென்றான்.

போலீசார் கறாராய் பேசினர்.

"குடும்பமே கஞ்சா வித்திருக்கு. இவங்களால எத்தனை குடும்பம் நாசமாப் போயிருக்குத் தெரியுமா? அவனவன் தாலியை முதற்கொண்டு வித்து பசங்களை படிக்க [illegible] அந்த பசங்களை சாம்பலா ஆக்கற பிரவுன்சுகரை வித்து அந்தப் பணத்துல கும்மாளம் போட்டுக்கிட்டிருக்காங்க... இவங்கள்லாம்! எப்படி சார் விடச் சொல்றீங்க? அந்த குரு வரட்டும்."

''சார்... அவனுக்கும் இவங்களுக்கும் சம்பந்தமே இல்லே சார்!"

''சம்பந்தமில்லாமதான் ஒரே வீட்ல இருக்காங்களா?"

"சார்... நம்புங்க... எங்களுக்கும் குருவுக்கும் தொடர்பில்லை. அப்பாவுக்கு சரியா நடக்க முடியாது. அம்மா ஒரு சின்ன ஓட்டல்ல காய்கறி நறுக்கித் தந்து மூவாயிரம் சம்பாதிக்கிறாங்க. நானும் வொர்க் பண்றேன். எங்க சம்பாத்தியத்துலதான்... நாங்க..." என்ற விதுபாலாவை இன்ஸ்பெக்டர் கோபமாய் இடைமறித்தார்.

"நிறுத்து... நீ யாரு?"

"அவங்களோட பொண்ணு!"

"நியாயமா உன்னையும் தூக்கி உள்ளே உக்கார வைக்கணும். உக்கார்றியா?"

"சார்... இதென்ன அநியாயம்? வயசானவங்கனும் பார்க்காம... சம்பந்தமேயில்லாத அவங்களை..."

"என்ன சம்பந்தமில்லே? உங்கம்மா அந்த குருவை இந்த அப்பனுக்குதானே பெத்தா?"

அசிங்கமாய் கேட்டான்.

உடம்பு கூசிப் போனாள் விதுபாலா.

சுரேந்திரன் அவள் தோளைத் தொட்டு மென்மையாய் பின்னுக்கு இழுத்தான்.

வக்கீல் காரசாரமாய் பேசினார்.

"மனிதாபிமானமில்லாம நடந்துக்கறீங்க. ஹியூமன் ரைட்ஸ்னு இருக்கு... தெரியுமில்லையா?"

''எல்லாம் தெரியுமய்யா... நீங்க எங்க போய் என்ன புடுங்கினாலும்... இங்கே வேலை நடக்காது. அந்த குரு வராம... இவங்க செத்தாலும் அனுப்ப மாட்டேன்!" என்றான் உறுதியாக.

லாக்கப்பில் அரை மயக்கத்தில் விதுபாலா வந்திருப்பது கூட அறியாமல் முடங்கிக் கிடந்தனர் முதியவர்கள்.

"கவலைப்படாதேம்மா... நாளைக்கே உங்க பேரன்ட்ஸை வெளியே அழைச்சிட்டு வந்திடலாம்."

"நாளைக்கா?" அரண்டுப் போனாள்.

"என்னம்மா பண்றது? மாட்டினது மூணு கிலோ சரக்கு. பெரிய கேஸ். உங்கண்ணன் கிடைச்சான்னா ஆயுசுக்கும் வரமுடியாதபடி கேஸ்."

விதுபாலா இதயம் பீஸ் பீஸானதுப்போல் உடைந்து அழுதாள்.

அன்று மாலை பேப்பர்களில் நான்காம் பக்கத்தில் செய்தியே வந்து விட்டது.

'போதை பவுடர் சிக்கியது.

பிரபல ரவுடி குரு தலைமறைவு! பெற்றோர் பிடிபட்டனர். வலது கையாக செயல்பட்ட குலசேகரன் சரக்குடன் பிடிபட்டான்.'

என்று செய்தி விலாவரியாக நீண்டது.

சுரேந்திரன் வெகுண்டெழுந்தான். பிரபல புலனாய்வு பத்திரிகையின் சிறப்பு நிருபர் உத்சவ் அவனின் கல்லூரித் தோழன்.



சுந்தரி பணிபுரியும் இடத்தின் ஆதாரபூர்வமான விவரங்கள், தெருவாசிகளின் கருத்துக்கள் என்று இன்னபிற தகவல்களுடன் சென்றான் உத்சவ்.

வாதத்திற்கு பயப்படாதவர்கள் பேனா முனைக்கு பயப்படாமல் இருக்க முடியுமா?

அவன் கேட்ட கேள்விகளுக்கு மிரண்டுப்போன இன்ஸ்பெக்டர், மன்னிப்பு கடிதத்துடன் இருவரையும் விட்டபோது மணி இரவு ஒன்பது.

உத்சவ்... தன் பத்திரிகையில் அந்த பெரியவர்களின் பரிதாப நிலையை, போலீசாரின் அராஜகத்தை எழுதி பிரசுரித்தான்.

ஆனாலும் தன் பிள்ளையால் ஏற்பட்ட பெரும்காயத்தை எப்படி ஆற்ற முடியும் அவர்களால்?

அழுது கொண்டேயிருந்தனர்.

தவறான முடிவினை எடுத்து விடுவார்களோ என்ற அச்சத்திலேயே அவர்களை விட்டு அகலாமல் கொட்டக் கொட்ட விழித்திருந்தாள் விதுபாலா.

உண்மையிலேயே அந்த மனநிலையில் இருந்த இருவரும் மகளின் முகம்பார்த்து செய்வதறியாது தவித்தனர்.

இரண்டு நாட்களில் ஆளும்கட்சி
...மைச்சரின் உதவியுடன், வக்கீலுடன்
...மீன் பெற்று ஸ்டேஷன் சென்றான் குரு.
அவனை சுண்டுவிரலால் கூட தீண்ட
...டியவில்லை இன்ஸ்பெக்டரால்.
...மாப்பிள்ளைப் போல் அலுங்காமல்,
...ங்காமல் வெளியில் வந்தான்.
...கேஸ் மட்டும் பதிவானது. குலசேகரன்
...ாய் மாட்டிக் கொண்டதால்
...க்கு அனுப்பி வைக்கப்பட்டான்.
...ங்கள் குற்றமற்றவர்கள் என்று
...க்கப்பட்டாலும் விதுபாலாவின் பெற்
...ளால் தெருவில் இறங்கி நடக்க
...ில்லை. அத்தனை கண்களும்
...து களைத்துப் போக வைத்தது.
...ால் வேலைக்கும் போக முடிய

...னை நாளா தெரியாமப் போச்சு.
...ஞ்சா குருவோட அம்மாவா நீ?
கொட்டுமே! அப்புறம் எதுக்கு
...ம்? போலீசை நம்ப வைக்கவா?"
...ந்து விழுந்தன வார்த்தைகள்
...ாய்.
...ள்ளேயே நத்தையாய் சுருண்டு,
குமைந்துப் போயினர்.

"விது..."

"என்னம்மா... உப்புமா ரெடி பண்ணிட்டிருக்கேன்... இதோ ஆச்சு!"

"அதுக்கில்லே... ஆபீஸ்க்கு போகலே?"

"லீவுப் போட்டுட்டேன்... ரெண்டு நாள் கழிச்சுதான் போவேன்!"

"ஏற்கனவே மூணுநாள் லீவுப் போட்டுட்டே... உங்க முதலாளி ஒண்ணும்..."

"பன்றிக் காய்ச்சல் மாதிரி தோணுதுன்னு... காரணம் சொல்லியாச்சு..."

"ஒரு விஷயம் பேசணும்..."

"சொல்லும்மா...!" ரவையைக் கொட்டிக் கிளறி அடுப்பை சிறுதீயில் வைத்து விட்டுத் திரும்பினாள்.

"வெளியிலே தலைகாட்ட முடியலே விது..."

".....?!"

"உங்கப்பாவை அடிச்சு இழுத்துட்டுப் போனதை தெருவே வேடிக்கை பார்த்துச்சு. எத்தனை நாள் வீட்டுக்குள்ளேயே அடைஞ்சுக் கிடக்க முடியும்?"

".....?!"

"இந்தப் போர்ஷனை வாடகைக்கு விட்டுட்டு வேற ஏரியாவுக்கு போய்டலாமா விது?" மெல்லியக் குரலில் தயங்கித் தயங்கி கேட்டாள்.

"தாங்க்ஸ்ம்மா..."

".....?!"

"இதை நான் எப்படி உங்கக்கிட்டே சொல்றதுன்னு தயங்கிக்கிட்டிருந்தேன். நல்லவேளை... நீயே சொல்லிட்டே. சுரேந்திரன் சார்கூட இதைதான் சொன்னாரு. அவர்கிட்டேயே சொல்லி ஒரு வீடு பார்த்துடலாம்."

"சரி... நடந்த களேபரத்துல கேட்க முடியலே. அந்த சுரேந்திரன் தம்பி யாரு... எப்படிப் பழக்கம்?"

விதுபாலா, ஆரம்பத்திலிருந்து... குலசேகரன் அனுப்பிய ஆள் மூலம் கத்திக்குத்து வாங்கியது வரை சொல்லி முடித்தாள்.

"ஐயோ... அந்த நாசமாப் போறவன் உன் பின்னாடியே வந்து தொந்தரவுக் கொடுத்தானா? கத்தியால குத்தற அளவுக்கு கொலைகாரப் பாவியா அவன்? இதை ஏன்டி முன்னாடியே சொல்லலே?" சுந்தரியின் முகம் வெளிறிப் போயிருந்தது.



"நீ பயந்துடுவியோன்னுதாம்மா மறைச்சேன்."

"உடம்புல ரணத்தை வச்சுக்கிட்டா நமக்காக இவ்ளோ பாடுபட்டுச்சு அந்தப் புள்ளை? அமோகமா இருக்கட்டும். மறுபடி அந்த குலசேகரனால் பிரச்சினை வருமா விது?"

"அவன் ஜென்மத்துக்கும் வெளியே வரமாட்டான்ம்மா! ஏற்கனவே ஒரு கொலை கேஸ் இருக்காம் அவன் மேல... ஒரு ஆயுள் தண்டனை இல்லே ரெட்டை ஆயுள் தண்டனை கிடைக்கவும் வாய்ப்பிருக்கு" என்றாள்.

"எல்லாம் இவனாலதானே? இப்படி ஒரு பிள்ளைய பெத்த பாவத்துக்கு... கடவுள் எங்களை தானே தண்டிக்கிறான்? பாரேன்... போலீஸ் தொல்லைக் கூடாதுன்னு பொண்டாட்டி கூட சேர்ந்துக்கிட்டு ஜாலியா ஊர் சுத்தறான். ஒரு வார்த்தை... 'என்னாலதானே உங்களுக்கு இந்த கஷ்டம்'னு மனசு வருந்தி சொல்றானா அவன்?" பெற்றவளின் உதடு கழிவிரக்கத்தில் துடித்தன.

"மனசுன்னு ஒண்ணு இருந்தாதானே? விடும்மா..."

❀ ❀ ❀ ❀ ❀




சுரேந்திரன் தாம்பரத்திலேயே, தன் நண்பனின் வீட்டில் விதுபாலாவின் குடும்பத்தை குடியமர்த்துகிறான்.

சுரேந்திரனின் கண்ணியமான தோற்றமும், குணமும் அந்த பெரியவர்களுக்கு ரொம்பவே பிடித்திருந்தது. மனதிற்குள் ஒருவித ஆசையை வளர்த்தனர்.

ஒரே ரெயிலில் ஒரே நேரத்தில் பயணம் செய்து, ஒரே நேரத்தில் வீடு திரும்பி... அவளுக்குத் துணையாக அவள் வீடுவரை பேசியபடி வண்டியை தள்ளிக் கொண்டு வருவான்.

அந்த வீட்டிற்கு குடிவந்து பத்து நாள் சென்றிருக்கும்.

விதுபாலா... அலுவலகம் புறப்படும் பிஸியில் இருந்தாள்.

"அம்மாடி..."

"என்னம்மா?"

"இந்த ஏரியாவுல எனக்கேத்த மாதிரி ஏதாவது வேலை பார்க்கலாம்னு..."

"என்னம்மா வயசாகுது உனக்கு?"

"அம்பத்தொன்பது முடியப்போகுது."

"ரிடையர் ஆகிட்ட வயசு. போதும் நீ உழைச்சது. வர்ற வருமானமேப் போதும்... மூணு பேருக்கு..."

"எத்தனை நாள் நீ எங்கக் கூட..."

பேசிக் கொண்டிருக்கும்போதே... காலிங்பெல் அழைத்தது.

"இரு... நான் பார்க்கறேன்" வாட்ச்சை கட்டிக் கொண்டே... கதவைத் திறந்தவள்... அயர்ந்துப் போனாள்.

"அ...க்..கா!"

விதுவின் ஆச்சர்யக் குரல் கேட்டு வந்த சுந்தரி, கண்கள் தெறித்து விழும்போல் நம்பமுடியாமல் பார்த்தாள்.

வித்யாவும், அவள் கணவனும், கையில் சாக்லேட்டை வைத்து கடித்தபடி வித்யாவின் சாயலில் ஒரு சிறுவன்.

"உ... உள்ளே வாக்கா... வாங்க... டேய் குட்டிப் பையா... ச்சோ ஸ்வீட்!" ஆசையாய் தூக்கிக் கொண்டாள்.

அவர்கள் வாசலிலேயே நிற்க...

புரிந்துக் கொண்டவளாய், "அம்மா... கூப்பிடும்மா..." என்றாள்.

சுந்தரி தயங்கி தலைகுனிய...

"அவங்களை உள்ளே வரச் சொல்லு..." என்றார் பாண்டியன்.

அடுத்த கணம் வித்யா ஓடிவந்து அம்மாவைக் கட்டிப்பிடித்து கண்ணீர் வடித்தாள். சுந்தரியும் அழ, பாண்டியன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"கஷ்டப்பட்டு இந்த வீட்டைத் தேடி கண்டுபிடிச்சு வந்தோம்... எங்கமேல கோபமில்லையேப்பா!"

"நாங்க பெத்த பையன் செய்த துரோகத்தை விடவும் நீங்க பண்ணினது பெரிசில்லேன்னு உணர்ந்துக்கிட்டேன்!" என்றார் பாண்டியன்.

"எங்களைமன்னிச்சதேபெரியசந்தோஷம்... இந்தாங்க... இனி டி.வி.யைப் பார்க்கறதை குறைச்சு... இவனோட விளையாட நேரத்தை ஒதுக்குங்க..." என்றான் வித்யாவின் கணவன் கிறிஸ்டோபர்.

எல்லோரும் புரியாமல் பார்க்க...

"எல்லாத்தையும் நாங்க பேப்பர்ல படிச்சோம். வித்யா துடிச்சுப் போய்ட்டா. மூணுநாளா எதுவுமே சாப்பிடலே. ஏற்கனவே நான் டிரான்ஸ்பர் கேட்டுட்டு இருந்தேன். போன வாரம் எனக்கு சென்னையிலே டிரான்ஸ்பர் ஆர்டர் வந்துடுச்சு. அங்கே

இருக்கிற வீட்டை விற்க ஏற்பாடு பண்ணிட்டேன். அடையாறுல வீடு வாங்கப் போறோம். அதனால நீங்க எங்கக் கூடதான் இனி இருக்கணும்னு வேண்டிக்கறேன்" என்று கைகூப்பினான் ஜெஸ்டோபர்.

சுந்தரியும், பாண்டியனும் அதிர்ச்சியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஆமாம்ப்பா... எங்களை பெத்து வளர்த்து ஆளாக்கற கடமை உங்களுக்கு இருந்தது. இப்ப உடம்புல சக்தி எல்லாம் குறைஞ்ச குழந்தைகளா இருக்கிற உங்களை காப்பாத்தற உரிமையும், கடமையும் எங்களுக்கும் இருக்குதானே? அவர் கிறிஸ்தவரா இருந்தாலும் எங்க வாழ்க்கையிலே மதமே இல்லேப்பா. நான் மஞ்சள் பூசி, நெத்தி நிறைய குங்குமம் வச்சுக்கறேன். என் கூட அவர் கோவிலுக்கு வருவார். நான் சர்ச்சுக்குப் போவேன். பையனையும் அப்படித்தான் வளர்க்கிறோம். உங்களுக்கு எந்த சங்கடமும் வராது. இவரோட பேரன்ட்ஸ் இப்ப துபாயில இருக்காங்க. சமீபமாக தான் அவங்களும் எங்களை ஏத்துக்கிட்டாங்க. விது கல்யாணமாகிப் போய்ட்டா தனியாதானே இருக்கணும். அது எங்களோட இருக்கலாமே... என்னம்மா சொல்றே?" கெஞ்சலாய் கேட்டாள் வித்யா.

"சுந்தரி... அவங்களுக்கு சாப்பிட ஏதாவது ஏற்பாடு பண்ணு. இப்படி வா... வா... உன் பேரென்ன?" பாண்டியன் பேரனை கைப்பற்றி இழுத்தார்.

"என்னம்மா... அப்பா ஒண்ணுமே சொல்லலியே..."

"இப்ப என்ன அவசரம்... அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்னு சொல்லு!"

"போதும்ப்பா... இதுபோதும்..." கண்ணீர் மல்க சிரித்தாள் வித்யா.

"இப்ப எங்கே தங்கியிருக்கீங்க?"

"அவரோட ஃப்ரண்ட் வீட்ல..."

"பாரேன். பெரிய பொண்ணு வந்ததும், இந்த சின்னப் பொண்ணை மறந்துட்டே இல்லே?" பொய்க்கோபம் காட்டினாள் விதுபாலா.

"சேச்சே... கொஞ்சம் இரு.. டிபன் பாக்ஸ் எடுத்துட்டு வர்றேன்!" சுந்தரி உள்ளே ஓடினாள்.

"அக்கா... நீங்க இங்கேயே இருக்கணும். நான் வந்து பேசவேண்டியது நிறைய

## தண்ணீர் நகரம்

சுற்றுலா தலம் போல் காணப்படும் இந்த ஏரியின் பெயர் 'இன்லே'. இந்த ஏரியின் மேற்பரப்பில்தான் மக்கள் வசிக்கிறார்கள். விவசாயம் செய்கிறார்கள் என்றால் வியப்பாக இருக்கிறதா? ஆனால் அது உண்மை தான்.

மியான்மர் நாட்டில் 'ஷான்' மலைத் தொடர்களின் மத்தியில் அமைந்துள்ள இந்த ஏரியின் பரப்பளவு 116 சதுர கிலோ மீட்டர்.

இந்த ஏரியில் நான்கு நகரங்களும், சில கிராமங்களும் உள்ளன. கிட்டத்தட்ட 70 ஆயிரம் மக்கள் இங்கு வசிக்கிறார்கள்.

ஏரியின் நீரின் மேலேயே வீடுகளையும், ஆலயங்களையும், கட்டி உள்ளார்கள். இங்கு வசிக்கும் மக்களின் முக்கியமான தொழில் மீன் பிடித்தல் என்றாலும், நீர்பரப்பின் மேலேயே மூங்கில்கள் கொண்டு சிறு சிறு பாத்திகள் அமைத்து விவசாயமும் செய்கிறார்கள்.

போக்குவரத்து, வியாபாரங்கள் எல்லாம் படகு மூலமாக நடை பெறுகிறது. அதோடு சுற்றுலா பயணி களுக்காக ஓட்டல்களையும் அமைத்துள்ளார்கள். -சாமி.

இருக்கு. உன் பையன்கிட்டே கொஞ்சணும். உன்னால பட்ட அவஸ்தைகளை மாமாகிட்டே கேக்கணும்... வர்றேன்!" டிபன் பாக்ஸை வாங்கிக் கொண்டு வேகமாய் வெளியேறினாள்.

வெக்கையில் உடம்பெங்கும் கசகசத்திருக்க... சில்லென்று ஒரு காற்று வந்து ஒட்டு மொத்த வியர்வையையும் துடைத்துவிட்டு ஓடுமே!

அப்படி இருந்தது நெஞ்சம். வித்யாவின் வருகை வசந்தத்தை சுமந்து வந்திருந்தது. 'அப்பாவின் முகமும், அம்மாவின் முகமும்தான் எவ்வளவு சந்தோஷமாயிருந்தது? இதற்குமுன் ஒருமுறைக் கூட அவர்களை இப்படி பார்த்ததே





இல்லையே!'

❀ ❀ ❀ ❀ ❀

கோவிலுக்கு போய்விட்டு ஆட்டோவில் வந்துக் கொண்டிருந்த வத்சலா... தன் கண்களை நம்பமுடியாமல் மறுபடி கூர்ந்துப் பார்த்தாள்.

தெருவிளக்கொளியில்... சுரேந்திரனும், விதுபாலாவும் சிரித்துப் பேசியபடி நடந்துச் சென்றதை பார்த்தாள்.

'ஓ... தினமும் வீடுவரை இவன்தான் பாடிகார்டா? இது காதலா, அல்லது வெறும் நட்பா?' குழம்பிப் போனாள்.

வீடு வந்து சேர்ந்தபின்பும் மனசு இதுவா, அதுவா என்று பெண்டுலமாய் ஆடித் தவித்தது.

"அந்த விதுப்பொண்ணு பக்கத்து ஏரியாவுலதான் குடி வந்திருக்கா?" பார்வதி மகனிடம் கேட்டாள்.

"ஆமாம்மா!"

"ஏன் நம்ம வீட்டுக்கு வரவே இல்லே?"

"அதான் என் காயம் ஆறிடுச்சே?"

"ஏன்... என்னைப் பார்க்க வரக் கூடாதா?"

"வரச் சொல்றேன்ம்மா!" மந்தகாசமாய் சிரித்தான் சுரேந்திரன்.

சாப்பாடு பரிமாறும்போது வேண்டுமென்றே வாயைக் கிளறினாள் வத்சலா.

"ஏந்தம்பி... பேசாம யாரையாவது காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கலாமில்லே?"

சுரேந்திரன் வாய்க்கு கொண்டுபோன கவளத்தை தட்டிலேயே போட்டுவிட்டு, சுட்டுக் கொண்ட தினுசில் நிமிர, கோபால் முகம் சுளித்தான்.

"ஏய்... லூசா நீ? என்ன பேசறதுன்னு விவஸ்தை இல்லே?"

"ஏன்... நான் என்ன தப்பாவாக் கேட்டுட்டேன்? தம்பி நீயே சொல்லு... நான் கேட்டதுத் தப்பா?"

"இல்லே அண்ணி"

"அப்ப பதிலை சொல்லு!"

"எதுக்கண்ணி வம்பு? அங்கேயும் மொட்டைக் கடிதம் போகாதா என்ன?"

'ஆக... இவனுக்கு காதல், ஊதல் ஏதுமில்லை. ஒருவேளை அவளுக்கு இருக்குமோ?'

❀ ❀ ❀ ❀ ❀

ஸ்டேஷன் நோக்கி நடக்கும் போதுதான் விதுபாலாவிற்கு ஞாபகம் வந்தது.

மும்பைக்கு கூரியர் அனுப்ப வேண்டும் என்று உசேன் ஒரு கவரை கொடுத்திருந்தார். இன்று காலைதான் அனுப்ப வேண்டும். முக்கியமான டெண்டர் விஷயம் என்பதால்... அந்தப் பொறுப்பை அவளிடமே ஒப்படைத்திருந்தார்.

நல்லவேளை... சரியான நேரத்தில் ஞாபகம் வந்து விட்டது.

ஸ்டேஷனின் எதிர்சாலையிலேயே கூரியர் ஆபீஸ் இருந்தது.

அங்கிருந்து வத்சலா வேகவேகமாய் வெளியேறிக் கொண்டிருந்தாள். உள்ளே நுழைந்த விதுபாலாவை கவனிக்கவில்லை.

கூப்பிட்டு பேசலாமா என்று தோன்றிய எண்ணத்தை கைவிட்டாள்.

தன் கவரை எடுத்து டேபிள்மேல் வைத்தவளின் கண்களில் பட்டது இன்னொரு கவர்...

உட்கார்ந்திருந்தவர்... ஸ்லிப் எழுதி பின் பண்ணி... ஸ்டாம்ப் குத்திய கவரில்...

இவள் பெயர் எழுதி, புதிய வீட்டின் முகவரி எழுதி, அனுப்புநர் முகவரியில் காந்தி என்ற பெயரிட்டு திருவொற்றியூர் முகவரி எழுதப்பட்டிருந்தது.

'எனக்கு கவரா? யார் இந்த காந்தி?'

"சார்..."

"சொல்லுங்க!"

"இந்த கவரை யார் கொடுத்துட்டுப் போனாங்கன்னு சொல்ல முடியுமா?"

"ஏம்மா?" அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

"இது... என் அட்ரஸ்தான்... அதுக்குதான் கேட்டேன்"

"ஓ... இப்ப ஒரு லேடி போனாங்களே... அவங்கதான்..."

"அப்படீங்களா... தாங்க்ஸ்."

குழப்பம் அதிகரித்தது அவளுக்கு.

❀ ❀ ❀ ❀ ❀




அன்று மாலை வீடு திரும்பியபோது, அம்மா வந்ததும் வராததுமாய் கவரை தூக்கிக் கொண்டு வந்தாள்.

"உன் பேருக்கு ஒரு லெட்டர் வந்திருக்கு விது. யாரு காந்தி? நான் கேள்விப்பட்டதே இல்லையே."

"ஓ... அவளா? குடு... குடு. என்கூட படிச்சவம்மா. திருவொற்றியூர்ல இருக்கா. எதேச்சையா டிரெய்ன்ல பார்த்துக் கிட்டோம். அட்ரஸ் கேட்டிருந்தா. அவங்க மச்சினருக்கு நல்ல வேலை இருந்தா சொல்லு... பயோடேட்டா அனுப்பி வைக்கிறேன்னு. அதுதான் போலயிருக்கு."

"அப்படியா? இரு டீ எடுத்துட்டு வர்றேன்" என்று சுந்தரி நகர, விதுபாலா உடை மாற்றும் சாக்கில் தன்னறைக்கு வந்து கதவை சார்த்திக் கொண்டு கவரைப் பிரித்தாள்.

அதிலிருந்து இரண்டு பேப்பர்கள் விழுந்தன. ஒன்று... கடிதம். மற்றொன்று தினசரி நாளிதழில் வந்திருந்த செய்தியின் ஜெராக்ஸ்.

'பெண்ணை பலவந்தமாக கடத்திச் சென்று கற்பழிக்க முயற்சி. இளைஞர் கைது!'

என்ற தலைப்பிட்டு வந்த செய்தியின் கீழ் சுரேந்திரனின் இளவயது புகைப்படமும், பக்கத்தில் காயத்ரியின் புகைப்படமும் பிரசுரமாகியிருந்தது.

'அப்படியானால்... காயத்ரி சொன்ன அந்த நபர் சுரேந்திரனா?'

'அன்று திருமண மண்டபத்தில் கூட அவள் இவனைதான் சுட்டிக் காட்டினாளா?'

கடிதத்தை படித்தாள்.

'அன்புள்ள விதுபாலா அவர்களுக்கு!

ஒரு உண்மை விளம்பியின் கடிதம்.

தாங்கள் பழகி வரும் சுரேந்திரன் எனும் ஆண்... ஒரு பாலியல் குற்றவாளி. விளக்கி கூற விரும்பவில்லை. அதற்கான ஆதாரத்தை இத்துடன் இணைத்துள்ளேன். தாங்கள் அவருடன் தொடர்ந்து பழகி வந்தால்... நட்பென்றாலும் உங்கள் எதிர்காலம் பாழாகும் என்பதை அக்கறை கலந்த கவலையுடன் கூறிக் கொள்கிறேன்.

இப்படிக்கு...

உங்கள் நலம் விரும்பி!'

சிறிதுநேரம் ஒன்றுமே புரியவில்லை. 'வத்சலா தான் அந்த நலம் விரும்பி என்று தெரிந்து விட்டது. ஆனால், எனக்கு எதற்காக இதை அனுப்ப வேண்டும்? சுரேந்திரனை நான் நேசிக்கிறேன் என்பது எனக்குள் மட்டுமே காக்கப்பட்டு வரும் ரகசியம். ஒரு வேளை எங்கள் பழக்கத்தை சந்தேகப்பட்டாலும், எதற்கு அதை முறிப்பதற்காக திட்டமிடுகிறாள்?'

காயத்ரி... ஒருவரை விரும்பினது... இருவரும் முழு சம்மதத்துடன் (பெற்றோர் சம்மதிக்காததால்) ஓடிச் சென்று திருமணம் செய்துக் கொள்ள முடிவு செய்தது... அதை அறிந்த காயத்ரியின் அண்ணன் அவர்களை பாதி வழியிலேயே மடக்கி தன் அரசியல் பலத்தால் பிரித்தது மட்டுமின்றி... அவனை நையப்புடைத்து போலீசில் பிடித்துக் கொடுத்து... தங்கையை மிரட்டி, அவளை கடத்திச் சென்று வலுக்கட்டாயமாக பலாத்காரத்தில் ஈடுபட்ட தாகவும், எப்படியோ தப்பித்து வந்ததாகவும் பொய்யாக வாக்குமூலம் கொடுக்க வைத்து... அவனை ஜெயிலில் அடைத்ததும், பின்பு காயத்ரிக்கு சொந்தத்திலேயே வரன் பார்த்து அடுத்த ஒரு வாரத்திலேயே திருமணம் முடித்ததும்... அத்தனையும் காயத்ரி தன் வாயாலேயே தோழி விதுபாலாவிடம் சொல்லி அழுததும்... யாருக்கு தெரிந்திருக்கப் போகிறது?

❀ ❀ ❀ ❀ ❀

"ஏதோ அவசரமா பேசணும்னு சொன்னீங்களே விது?" சுரேந்திரன் மெல்லிய புன்னகையுடன் கேட்டான்.

இடம்... பாரீஸிலிருந்த ரெஸ்டாரெண்ட்!

"ஆமாங்க..."

"என்ன சாப்பிடறீங்க?"



"ம்..ம்... ஸ்வீட்?"

"ஓ... ஏதோ ஹாப்பி நியூஸ் சொல்லப் போறீங்கன்னு நினைக்கிறேன்."

"ம்... இருக்கலாம்... ஒரு பிரச்சினை முடிவுக்கு வரப் போகுதுன்னா... அதுவும் ஹாப்பி நியூஸ்தானே?"

"புதிர் போடாதீங்க... தாங்கலே... சொல் லிடுங்க."

"நீங்க ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலே சுரேந்திரன்?"

இந்த கேள்வியை அவன் சிறிதும் எதிர்பார்க்காததால் முகம் சற்றே வாடிப் போனது.

"நான்... தப்பா எதுவும்...?"

"சேச்சே..." என்றவன், 'என் மனதில் உள்ள காதலை சொல்லணும் என்றால்... அதற்கு முன்பு என் கடந்தகால வாழ்க்கையை கண்டிப்பாய் சொல்லியாக வேண்டும்' என்றெண்ணினான்.

"எங்க வீட்ல எனக்கு நிறைய அலையன்ஸ் பார்த்தாங்க விது... ஆனா, எல்லா அலை யன்ஸ் வீட்டுக்கும் ஒரு மொட்டைக் கடிதம் வந்து தடைப் போட்டுடும்..."

"மொட்டைக்கடிதமா?"

"ஆமாங்க..." என்றவன் சற்று விளக்கமாக எல்லா விஷயத்தையும் சொன்னான்.

"பக்குவம் இல்லாத வயசுல காதல் விஷயத்தில் தைரியமா முடிவெடுத்தேன். பெத்தவங்க, உறவினர்களோட வேதனை களை பற்றி கவலைப்படாத பருவத்தில் நான் செய்த மிகப்பெரிய தவறு அது. தப்பான காதல்னு சொல்லமாட்டேன். ஆனா ஸ்ட்ராங்கான காதல் இல்லை. பாவம் அந்தப் பொண்ணு காயத்ரி, அடிக்கும் உதைக்கும் மிரட்டலுக்கும் பயந்து என்னை தப்பானவனா இந்த உலகத்துக்கு கையை காட்டி விட்டுட்டா. ரெண்டுமாச ஜெயில், மூணு லட்சம் அபராதம்னு நான் மட்டுமே பாதிக்கப்பட்டேன். பத்திரிகையிலேயும் என்னை காமாந்தகனாதான் எழுதினாங்க..."

"தெரியும் சுரேந்திரன்!"

"தெரியுமா? என்னைப் பத்தியா?"

"அது நீங்கதான்னு எனக்கு இப்பதான் தெரியும். ஆனா, இப்படியொரு சம்பவம், முழுக்க உங்கமேல சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எல்லாமே எனக்கு எட்டு வருஷத்துக்கு முன்னாடியே தெரியும். ஏன்னா, காயத்ரி என்னோட கூட படிச்சத் தோழி. அவளோட அண்ணன் எல்லா சினிமா படத்திலேயும் வர்றமாதிரி உங்க மேல பொய்யான குற்றச்சாட்டை சொல்லச் சொல்லி, சொல்லலேன்னா உங்களை உயிரோடயே விட்டு வைக்க மாட்டேன்னு காயத்ரியை மிரட்டிதான் சொல்ல வச்சாங்க..."

"ம்..." எனத் தலையாட்டிய சுரேந்திரனின் முகம் முழுக்க அவமானம் படர்ந்த வேதனை.

"இதிலே உங்கமேல என்ன தப்பிருக்கு? அதுக்கும் உங்க கல்யாணம் நிக்கறதுக்கும் என்ன சம்பந்தம்? எல்லாரும் மறந்துப் போன விஷயத்தை நினைவுபடுத்தற மாதிரி யார் இப்படி லெட்டர் அனுப்பறது?"

"தெரியலே..." உதட்டை பிதுக்கினான்.

"சரி... மத்தவங்களுக்கு அனுப்பறதுல ஒரு சின்ன காரணமோ, நியாயமோ இருக் கலாம். ஆனா நான் உங்களோட பழகறது பிடிக்காமக் கூடவா மொட்டைக்கடிதம் அனுப்புவாங்க?"

"எ... என்னது?"

"ஆமாங்க... இது நேத்து எங்க வீட்டுக்கு வந்தது" என்று கவரை நீட்டினாள்.

அதிர்ச்சி விலகாமல் பிரித்துப் படித்தவன் ஸ்தம்பித்துப் போனான்.

"பாலியல் குற்றவாளியா? நானா?" வார்த்தைகள் வலியில் நைந்துப் போயிருந்தது.

"யார் விது? யாரிப்படி என் வாழ்க் கையில் விளையாடறாங்க. ரொம்ப நாளைக்குப் பிறகு நான் சந்தோஷமா இருக்கேன்னா... அது உங்க நட்பாலதான். அதுக்கூட பிடிக்காம... யாராயிருக்கும் விது?" உடைந்துப் போய் கேட்டான்.

அவளுக்கு... எழுந்து அவனருகில் வந்த மர்ந்து அவன் தலையை தன் தோளில் சாய்த்து, ஆறுதலாய் தட்டிக் கொடுக்க வேண்டும் போல் இருந்தது.

"எனக்குத் தெரியும்!"

"உ... உங்களுக்கா? எ... எப்படி... யார் யார் அது?"

"சொல்றதைக் கேட்டு அதிர்ச்சியடை யாதீங்க... நான் நேத்து காலையில..." என்று நடந்த அத்தனையும் சொன்னாள்.

அவள் சொல்ல... சொல்ல வாய்பிளந்து உறைந்து விட்டான்.

"அ...ண்...ணி...யா? ஏ...ன்?"

"இதுக்கு முன்னாடி அனுப்பின லெட்டர்ஸ்-ம் இதே கையெழுத்துதானே?"

"ஆமாம்!"

"உங்க அண்ணி கையெழுத்து உங்களுக்குத் தெரியாதா?"

"அதுக்கு சந்தர்ப்பமே அமையலை. தவிர, அவங்க யாருக்கும் கடிதம் கூட எழுதினதில்லை. மளிகை சாமான் லிஸ்ட் மட்டும் எழுதுவாங்க. இப்ப... இதுக்கு என்ன பண்ணலாம் விது?"

"ஸாரிங்க... இது உங்க குடும்ப விஷயம். நான் கருத்து சொல்லக் கூடாது. இந்த லெட்டர் விஷயம் கூட என் வீடுவரை வந்ததால சொல்ல வேண்டியதாப் போச்சு. அவங்கதானான்னு முழுக்க கன்ஃபார்ம் பண்ணிக்கிட்டு அடுத்ததை யோசிங்க..."

❋ ❋ ❋ ❋ ❋

**வீ**ட்டில் பழைய மளிகை சாமான் லிஸ்ட்டை தேடி எடுத்து சரிபார்த்ததில் அண்ணி கையெழுத்துதான் என்பது ஊர்ஜிதமாயிற்று. வேதனையில் மூச்சு திணறியது.

அடுத்த இரண்டாவது நாள்... வெள்ளிக்கிழமை.

வத்சலா வழக்கமாகச் செல்லும் அம்மன் கோவிலுக்கு அவளைத் தேடி சென்றான் சுரேந்திரன்.

கூட்டம் ஏகமாய் இருந்தது. அப்போதுதான் அடிப்பிரதட்சணம் முடித்துவிட்டு பிரகாரத்தில் வந்தமர்ந்தாள் வத்சலா.

அவளை இனம் கண்டுக்கொண்டு எதிரில் போய் நிற்க... ஒரு கணம் இமைக்க மறந்து வியந்தாள்.

"தம்பீ... நீங்களா... ஆச்சர்யமாயிருக்கே..." எழுந்துக் கொண்டாள்.

"என்ன அண்ணி... நல்லா வேண்டிக் கிட்டீங்களா?" நடந்தபடியே யாருமற்ற குளக்கரை சுவற்றருகே வந்து நின்றனர்.

"ஆமாம் தம்பி, சக்தி வாய்ந்த அம்மன்... அடிப்பிரதட்சணம் பண்ணி வேண்டிக்கிட்டா, நிச்சயம் நடக்கும். உனக்காகதான் அடிப்பிரதட்சணம் பண்ணினேன்."

"எதுக்கண்ணி... என் கல்யாணம் நடக்கக் கூடாதுன்னா?"

"......??!!"

❋ ❋ ❋ ❋ ❋




"**சொ**ல்லுங்கண்ணி..."

"என்ன தம்பி இப்படியெல்லாம் பேசறீங்க? நான் ஏன் அப்படி...?" முகம் மாறியது.

"போதும்... கோவில்ல வச்சு பொய் பேசாதீங்க..."

"......?!"

"இத்தனை வருஷமா திட்டம்போட்டு மத்தவங்களோட நலம்விரும்பியா மாறி... எப்பேர்ப்பட்ட சேவையை பண்ணி இருக்கீங்க? ஆனா இவ்வளவு நாளா திறமையா செயல்பட்ட நீங்க... அவசரப்பட்டு காரணமே இல்லாம விதுபாலா வீட்டுக்கு மொட்டைக் கடிதம் அனுப்பி மாட்டிக்கிட்டீங்களே..."

"ஐயோ... நான் ஏன்...?"

"அடச்சே... வாய மூடுங்க. எவ்வளவு மரியாதை வெச்சிருந்தேன்? எங்கம்மாவுக்கு அடுத்த ஸ்தானத்துல உங்களையும் ஒரு அம்மாவாதானே பாசம் காட்டினேன்? எப்படி மனசு வந்தது?"

**இ**ன்றைய உலகில் புதியதாக எதை கண்டுபிடித்தாலும் மக்களிடம் அமோக வரவேற்பு கிடைக்கும் என்ற சூழல் நிலவ... ஜப்பானியர்களின் புதிய கண்டுபிடிப்பு எது தெரியுமா? குளிப்பாட்டும் எந்திரம்...!

குளிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றிய உடனேயே இந்த எந்திரத்தின் உள்ளே உட்கார்ந்து கொண்டு விசையை தட்டி விட்டால் போதும்... வெந்நீர்க் குளியலா, நீராவி குளியலா, சோப்பு குளியலா என வகை வகையாக நம் விருப்பத்துக்கேற்ப குளிப்பாட்டி விடுகிறது இந்த எந்திரம்.

குளித்து முடித்தவர்கள் வெளியேறிய உடன் இந்த எந்திரம் தானாகவே உட்புறத்தை சுத்தப்படுத்திக் கொண்டு அடுத்த நபரை குளிப்பாட்ட தயாராகி விடுகிறது.

-சாமி.



"......?!"

"வலிக்குதுங்க... என் உள்ளம் கொதிக்குது. அந்த காயத்ரி தந்த பொய்யான வாக்குமூலம் கூட என் உயிரை அவ அண்ணன்கிட்டேர்ந்து காப்பாத்த... சொன்னது. ஆனா, நீங்க... எத்தனை குடும்பத்துக்கு என்னை ஒரு பாலியல் குற்றவாளின்னு முத்திரைக் குத்தி... சீ... ரெண்டு குழந்தைங்களை பெத்த தாய்தானே நீங்க? உறுத்தலே?"

"......?!"

"பாருங்களேன்... எவ்வளவு நம்பிக்கை இருந்திருந்தா... இத்தனை வருஷமா உங்க கையெழுத்துன்னு தெரிஞ்சுக்காம இருந்துட்டேன்? அம்மாவுக்கு தெரிஞ்சா உயிரையே விட்ருவாங்களே...!"

"......?!"

"நான் கடைசிவரைக்கும் சம்பாதிச்சுக் குடுக்கிற மிஷினா இருக்கணும். உங்கப் பொண்ணுங்களை கரையேத்த... என்னை மரமா ஆக்கிட்டீங்க... அப்படித்தானே?"

சுரேந்திரன் சீற... வத்சலா கண்களில் தாரைத் தாரையாய் கண்ணீர்.

சட்டென அவனே எதிர்பார்க்காத கணநேரத்தில் அவன் காலில் விழுந்தாள்.

"தப்பு பண்ணிட்டேன் தம்பி... என்னை மன்னிச்சிடுங்க" வாய்விட்டு அழுதாள்.

பதறி நகர்ந்தான்.

"எந்திரிங்க முதல்ல... எந்திரிங்கன்னு சொல்றேன்ல!"

எழுந்தாள்.

"ஒத்தை வார்த்தையிலே மன்னிச்சிட்டேன்னு சொல்றதுக்கு நீங்க தப்புப் பண்ணலே அண்ணி... துரோகம்... பச்சை துரோகம் பண்ணியிருக்கீங்க."

"......?!"

"இங்கேப் பாருங்க... என் அம்மா உடம்பு சரியில்லாதவங்க. அவங்களைப் பொருத்தவரை மச்சினர் மேல அக்கறை உள்ள அண்ணியாவே இருந்துட்டுப் போங்க. இந்த விஷயம் தெரிய வேண்டாம்."

"சரிங்க தம்பி" ஆசுவாசமானாள்.

"ஆனா, ரெண்டுமாசம் டைம் தர்றேன். அண்ணன் ஆபீஸ் பக்கமா வீடு பார்த்து தனிக்குடித்தனம் போய்டுங்க..."

"தம்பீ...?!"

"வேற வழி எதுவுமில்லே. ஏதாவது நம்பற மாதிரி காரணத்தை நீங்களே சொல்லிடுங்க. நீங்க ஒரு கறுப்பு ஆடுன்னு தெரிஞ்சப் பிறகும்... கூடவே வச்சிருக்கறது முட்டாள்தனமில்லையா? இந்த விஷயம் நம்ம வீட்ல யாருக்குத் தெரிஞ்சாலும் அவங்க எடுக்கற முடிவும் இதுவாகத்தானே இருக்கும்? என்ன... உங்க சுயரூபம் எல்லாருக்கும் தெரிஞ்சிடும்... அசிங்கமாய்டும்... இல்லையா?"

"......?!" தலைகவிழ்ந்தாள்.

"இனி ஒரு ஒத்தை ரூபாக்கூட என் பாக்கெட்லேர்ந்து உங்க கைக்கு வராது... நாளைலேர்ந்து வீடு பார்க்கற வேலை நடக்கட்டும்... நான் வர்றேன்."

சுரேந்திரனின் இதயம் இப்போது லேசாகி இருந்தது.



❋ ❋ ❋ ❋ ❋

"என்னை மன்னிச்சிடுண்ணா... என்னால கோபத்தை கட்டுப்படுத்த முடியலே" என்றான் சுரேந்திரன்.

கோபால் தம்பியின் தோள்மீது கைப் போட்டுக் கொண்டு அணைத்தபடி நடந்தான்.

"எதுக்கு மன்னிப்பு? வத்சலா செஞ்ச காரியத்துக்கு நீ பேசினது ரொம்பக் கம்மி. உன் எடத்துல நான் இருந்திருந்தா... அடிச்சே கொன்னிருப்பேன். எப்பேர்ப்பட்ட அக்கிரமம்? உன் உப்பை சாப்பிட்டவளுக்கு இதையெல்லாம் பண்ண எப்படி மனசு வந்தது? விஷயத்தை சொன்னதும் புழு மாதிரி துடிச்சுப் போயிட்டேன் தெரியுமா? அவ பீரோவை ஆராய்ஞ்சு பார்த்துல அந்த பேப்பர் மேட்டரை இருபது ஜெராக்ஸ் எடுத்து பத்திரம் பண்ணி வச்சிருந்தது கிடைச்சது. நான் சொல்லித்தானே அவளை கோவில்ல வச்சு கேட்டே...?"

"......?!"

"பேராசைடா! ஏழாயிரம் சம்பாதிக்கிறேனே... போதாதா? குடும்பம் நடத்தி மிச்சம் பிடிக்க முடியாதா? ஊர்ல மூவாயிரம் ரூபாய்ல எல்லாம் குடும்பம் நடத்தலே? என் சம்பளத்தை அப்படியே எங்கேயோ சேமிச்சு வச்சு... உன் வாழ்க்கையை பகடைக் காயாக்கி இருக்கா. அவளை நினைச்சாலே கசப்பாயிருக்கு சுரேன். விடு பார்க்க ஆரம்பிச்சிட்டேன். நானே பார்க்கறேன்னு சொன்னதும் ஷாக்காயிட்டா. ஆனா, ஏன் எதுக்குன்னு ஒரு வார்த்தை கேக்கலே தெரியுமா? சரின்னுட்டா. ஆனா, எனக்கு விஷயம் தெரியும்ங்கறதை நானா கேட்க மாட்டேன். அந்த உறுத்தல்தான் அவளுக்கு தண்டனை!"

"அம்மா ஏன் தனியாப் போறீங்கன்னு

**எட்டு வகையான ஆண்டுகள்**

லூனார் வருடம் - 354 நாட்கள்

பொதுவான வருடம் - 365 நாட்கள்

லீப் வருடம் - 366 நாட்கள்

ஜூலியன் வருடம் - 365 ¼ நாட்கள்

சோலார் வருடம் - 365 நாட்கள், 5 மணி, 48 நிமிடம், 46 நொடிகள்

கிரிகோரியன் வருடம் - 365 நாட்கள், 5 மணி, 49 நிமிடம், 12 நொடிகள்

அனோமாலிஸ்டிக் வருடம் - 365 நாட்கள், 6 மணி, 13 நிமிடம், 19.3 நொடிகள்

சிடேரியல் வருடம் - 365 நாட்கள், 6 மணி, 13 நிமிடம், 19.3 நொடிகள்.

- ஆர்.சாந்தா, சென்னை.

கேட்டா... என்ன காரணம் சொல்வீங்க?"

"அதுப் பெரிய பிரச்சினை இல்லை சுரேன். எதையாவது சொல்லிக்கலாம். ஆனா, கூடிய சீக்கிரம் உனக்கும் அந்தப் பொண்ணுக்கும் கல்யாணம் நடக்கணும்."

"ஐயோ... அண்ணா எனக்கும் விதுபாலாவுக்கும் வெறும் ஃப்ரண்ட்ஷிப்தான்!"

"படவா... நான் அந்தப் பொண்ணுன்னு தானே சொன்னேன்? விதுபாலான்னு சொன்னேனா? திருட்டுப்பயலே! வயசாச்சு... தள்ளிப்போடாதே... சீக்கிரம் பேசிடு. நல்லப் பொண்ணு. உனக்கேத்தவ... முக்கியமா உன்னோட முடிஞ்சுப் போன கதைய தெரிஞ்சவ... ஜோடி பொருத்தமும் அழகா அமைஞ்சிருக்கு. அம்மாவுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு தெரியுமா?"

சுரேந்திரன் மனசுவிட்டு ஏகாந்தமாய் சிரித்து தலையை அசைத்தான்.

* * * * *

அவன் சொன்னதை ஆர்வமாய் கேட்டுக் கொண்டிருந்தாள் விதுபாலா.

"பரவாயில்லையே... உங்கண்ணன் உங்களை நல்லாப் புரிஞ்சு வச்சிருக்காரே... சந்தோஷமாயிருக்கு."

"சரி அதை விடுங்க... நான் ஒண்ணு கேப்பேன்... சொல்வீங்களா?" பாசந்தியை ஸ்பூனால் கிளறியபடி கேட்டான்.

"என்ன... கேளுங்க... கேளுங்க..." ஆர்வமிகுதியில் கண்கள் படபடத்து விரிந்தன.

"உங்களுக்கு இந்த லைஃப் போரடிக்கலே?"

"புரியலே..." என்றாள் குழப்பமாய்.

"அதான்... டெய்லி டிரெய்ன்ல போய் வந்துக்கிட்டு... சாப்பிட்டு, தூங்கி, மறுபடி டிரெய்னை புடுச்சி வேலைக்கு வந்து..."

"என்னப் பண்றது? வாழ்க்கைய ஓட்டணுமில்லையா? மூணுவயிறு சாப்பிடணுமே...!" புரிந்தவளாய் சிரித்தபடி பதிலளித்தாள்.

நாசூக்காய் பாசந்தியை ஸ்பூனில் எடுத்து சுவைத்தாள்.

"ஏன்... உங்க வாழ்க்கை வண்டியை ஒரு நல்லவன் கையில் ஒப்படைக்கலாமே! மாமனார், மாமியாரை பெத்தவங்களா நினைச்சு பராமரிக்கிற எத்தனையோ நல்லவங்க இருக்காங்களே...!"

"அப்படி ஒரு நல்லவர் வரட்டும் பார்க்கலாம்."

"இனிதான் வரணுமா?"

"என்னது?"

அந்த ரெஸ்டாரெண்டில் யார் காதிலாவது விழுந்திடுமோ என்ற பதைப்புடனும், உள்ளக் கூறுகூறுப் புடனும்... புதிய உணர்வலை தாக்க... மனசு எதற்கோ மயங்கி ஏங்கியது.

"இல்லே... இனிதான் பிறந்து வரணுமா என்ன? எப்பவோ பிறந்து வளர்ந்து, உங்களை மாதிரி பாசந்தி சாப்பிட்டுக் கிட்டிருக்க மாட்டானா என்ன?"

"அப்படியா... தேடிப் பார்க்கறேன்" சிரிப்பை உதட்டிற்குள் மென்றாள்... விதுபாலா.

"நீங்க ரொம்ப அழுத்தக்காரி விதுபாலா!"

"ஆமாங்க... அம்மாக்கூட அப்படிதான் சொல்வாங்க."

'பிடி கொடுக்காம பேசறாளே!' லேசாய் பதற்றம் தொற்றிக் கொண்டது சுரேந்திரனுக்கு.

"எங்கண்ணி ரொம்ப ஷார்ப்தான் இல்லே! என்னை நானே புரிஞ்சுக் கறதுக்கு முன்னாடி அவங்க என் மனசுல இருக்கறதை தெரிஞ்சுக்கிட்டாங்க இல்லே?"

"என்னத் தெரிஞ்சுக்கிட்டாங்க?"

'டென்ஷன் ஆக்கறாளே! சுரேந்திரா தைரியமா சொல்லிடுடா... சொல்லிடு...' தன்னைத்தானே தைரியப்படுத்திக் கொண்டான்.

"பாசந்தி ஸ்வீட்டா இருக்கா?"

"ம்... சூப்பரா இருக்கே?"

"என்னது கொஞ்சம் ஸ்வீட் கம்மி... அதைக் குடுங்க" அவள் பாதி சாப்பிட்டு வைத்திருந்த கப்பை இழுத்து எடுத்து சுவைத்தான்.

"ஐயோ... அது நான் எச்சில் பண்ணியது..." பதறினாள்.

"ஆமாங்க... இப்படி சாப்பிட ஆரம்பிச்சாதான் உங்க குழந்தைக்கு என் இனிஷியலைப் போட முடியும்?" நிமிராமலேயே... அவசர அவசரமாய் அள்ளி சாப்பிட்டபடி சொன்னான்.

"எ... என்ன... என்ன சொன்னீங்க?" அவன் சொன்னதன் அர்த்தத்தை கொஞ்சம் தாமதமாய் உணர்ந்தாள்.

"அவரு... உங்களை லவ் பண்றாராம் மேடம்!" அவர்களை கடந்துச் சென்ற யூனிபார்ம் அணிந்த பள்ளி மாணவி ஒருத்தி போகிறபோக்கில் காஷுவலாய் சொல்லி விட்டுப் போக...

விதுபாலாவின் முகம் நாணத்தில் செம்மைப் படர்ந்தது.

தனக்கு எதிலும் சம்பந்தமில்லை என்பது போல் சாப்பிடுவதிலேயே குறியாய் இருந்தான் சுரேந்திரன். அவனை ஓரக்கண்ணால் ஏறிட்டாள்.

இயல்பாய் கேட்டாள். "யாருங்க அந்தப் பொண்ணு?"

"தெரியலே!" என்றாள் விதுபாலா.

"என்னவோ சொல்லிட்டுப் போறா!"

"தெரியலே..."

"சின்னப் பொண்ணு! அதெல்லாம் விவரமாயிருக்கு. ஆனா... நீ?" சட்டென ஒருமைக்குத் தாவினான்.

"நான்?"

"உண்மையிலேயே வயசுக்கு வந்துட்டீங்களா, இல்லையான்னு சந்தேகமாயிருக்கு..."

"ச்சீ...!" அவன் பார்வையையும், வார்த்தையையும் தகிக்க முடியாமல் ஓடி ஒளிந்துக் கொள்ளும் பொருட்டு அவன் எச்சில் படுத்தி வைத்திருந்த பாசந்தி கப்பை எடுத்து அவள் சாப்பிடத் தொடங்க... குப்பென்று மலர்ந்தான்.

சுரேந்திரன் ஒட்டுமொத்த காதலையும் கண்களில் தேக்கி... அமைதியாக சொன்னான்.

"அது... நான் எச்சில் பண்ணினது விது?"

"வேற வழி... என் குழந்தைக்கு இனிஷியல் போடணுமே!" அவளும் பதறாமல் சொல்ல...

"அடிப்பாவி...!" என்று வாய்மேல் கை வைத்துப் பொத்திக் கொண்டான் சுரேந்திரன்.

**(முற்றும்)**